சிந்தாமணி.
ஆகஸ்டு 1926

JL
207607

Some Select Opinions on "Chinthamani."

The Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal, which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows :—

I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind. This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

உ
சிவமயம்.
ஸ்ரீ முருகன் றுணை.

சிந்தாமணியின் மதிப்புரை.

என் சகோதரியாராகிய ஸ்ரீ வி. பாலாம்பிகை யம்மையாருக்கு செந்தமிழ்ச் சைவத் தொண்டன் மணிவாசகச் சரணாலயன் எழுதியது.

அம்மா! தேசத்திற்கு உண்மைத் தொண்டுபுரியும் அடியேனுக்கொரு பேருவகையாயிற்று.

அம்மா! நமது தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமை கண்டு அவர்கட்குத் தனியே யுழைக்க முன்வருவாரொருவரையுங் காணுமன் மிகத் துன்புறுமிவ்வமயத்தில்.

எம்மம்மையாராகிய மங்கையர்க்கரசியாரைப் போன்று, எம்பேரன்னையாராகிய ஔவைப் பிராட்டியாரைப் போன்று, அழகிய மாதாவாகிய கெவுரியம்மையாரைப் போன்று, எமக்கும் எம் இறைவர்க்கும் இவ்வுலகுக்கும் அம்மையாராகிய காரைக்காலம்மையாரைப் போன்று தாங்கள் உலகத்திற்குழைக்க முன்வந்திருப்பதுவே அப்பேருவகைக்குக் காரணம்.

உலகத்தில் அறியாமை மலிந்த ஆடவர்கண் மாட்டுச் சிக்கி அடிமையாகி எந்திரங்களைப் போன்று இடையறாது உழைத்தேங்கும் எம்சகோதரிகளாகிய பெண்மணிகள் துன்பம் ஒழிந்து விட்டது அம்மா!

அம்மா! மேலும் அவர்களின் எவ்வித வருமைகளையும் நீக்கத் துணிந்து தாங்கள் உதவி வருஞ் சிந்தாமணியே அவர்களுக்குப் பண்டைக் காலத்தைப்போல, எல்லாச் செல்வங்களையு மளித்துக் களிப்புண்டாக்கு மென்பதற்கையமின்று.

அம்மா! புரந்தரன் நவநிதியம் பெற்றான், அளகைக்கோன் எந்நலங்களையும் எப்பொருள் களையும் ஒருங்களிக்கத்தக்கதாகிய சிந்தாமணியைப் பெற்றின்புற்றான். அம்முறையே தாங்கள் உதவிவரும் சிந்தாமணியானது நம்நாட்டுப் பெண்மணிகளுக்குப் பல நன்மையளிக்கத் தக்க தாயிற்று என்பதொருதலை.

அம்மா! தங்கள் சிந்தாமணியின் அபிப்பிராயம் மேற்கண்ட அளவுதான் என்னால் எழுத முடிந்தது. நம்நாட்டுப் பெண்மணிகளுக்கு மிகையாகாமலும் குறைவில்லாமலும் பலனை யளிக்கும்படி செந்தமிழ் நாட்டிறையாகிய முருகக்கடவுள் பேரருள்புரிவானாக.

அம்மா! அச்சிந்தாமணியானது எக்காலும் சிந்தாமணியாயிருக்க அதற்கொரு வாழ்த்துக் கூறுவது மிகையாகும். ஆயினும், அச்சிந்தாமணியானது இந்நிலவுலகின்கண்ணே நீடூழி யுலாவியோங்கி வாழக்கடவதாக. தாங்களும் தங்கள் நன் முயற்சியும் நீடூழி நீடூழி யோங்கி வளர்வீர்களாக.

அம்மா! தங்கள் பேருதவியால் நஞ்செந்தமிழ்நாட்டுப் பெண்மணிகளெல்லாம் பெருநன்மை யடைவார்களாக.

அம்மா! அடியேன் புரியும் உண்மைத் தொண்டினையும் இருபங்காக்கி ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய இரு திறத்தினருக்கும் அளிப்பேனாக.

நம்முடைய தொண்டினிமித்தம் ஏற்படும் நன்முயற்சிகளெல்லாம் விழைந்தவண்ணமே முட்டின்றி முடியுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய அம்மையப்பன் முன்னின்று நடத்துவிப்பானாக.

இப்படிக்கு,
க. மணிவாசகச் சரணாலயன்,
தமிழர் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கலாசாலையின் அறக்கடவுணிலையம்,
சண்முகநாதபுரம், குன்னக்குடி, இராமநாதபுரம் ஜில்லா,
குரோதன ஆண்டு பங்குனித் திங்கள் 22-ம் தேதி.

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani.'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani*. From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார்:—

20—1—1926.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபனையுண்டோ! இன்னும் அதில் லாக்ஷாத் சுக்ரீவனுடைய மகிமையை "ஸுபோதராம சரிதம்" என்னும் ராமாயண காதரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறானென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924வரு ஆகஸ்டுமீ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்துகொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்துவிட்டன. 1925 பிப்பிரவரிமீ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செலிமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத்தொடர்ச்சியும், சகோதரியாரால் எழுதப்பட்ட வேமணிபோன்ற சில சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செலிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. அவ் வாறு பிரதிகளும் தபால்சார்ஜ் உள்பட ரூபா2—8—0க்கு அனுப்பப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபிஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாபூர், சென்னை.

சிந்தாமணி யபிமானிகளுக்கு.

உள்நாட்டுச் சந்தாதாரில் சிலர் இதுவரை முதல் வருஷ சந்தாவை அனுப்பாமலும் இது விஷயமாகப் பல கடிதங்கள் கிடைத்தும் சற்றும் கவனியாது இருப்பதாலும் இண்டிமேஷன் பெற்றும் வி. பி. யைத் திருப்பி விடுவதாலும் நஷ்டமும் பத்திரிகையின் நிர்வாகத்தில் மெத்த சிரமமும் ஏற்படுகின்றது. அயல் நாட்டிலுள்ள சந்தாதார்களுக்குக் கடிதமெழுதுவதற்கு அதிகச் செலவும் வி. பி. யனுப்புவதற்கு சிறிதும் சாத்தியமில்லாமையுமாக இருப்பதால் இதுவரை யனுப்பாத அயல்நாட்டு சந்தாதாரர்கள் தாமதப்படுத்தாது தங்கள் சந்தாவை யனுப்பிவிடுவார்களென்று நம்பி யிருக்கிறேன். ஆகையால் உள்நாடு வெளிநாடு சந்தாதார் அனைவரும் தயவுசெய்து இனியும் சிறிதும் தாமதப்படுத்தாது தம் சந்தாவை மணியார்டர் செய்யவேண்டுமாயும் இதுவரை முதல் வருஷ சந்தாவையுமனுப்பாமலிருப்பவர்கள் அத்துடன் இரண்டாவது வருஷ சந்தாவையும் சேர்த்து அனுப்பினால் மெத்த சமயோபகாரமாயிருக்குமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா பாக்கியைபபற்றிக் கடிதமூலமும் பத்திரிகையில் அறிக்கைகள் மூலமும் பிரஸ்தாபிக்கவேண்டிய சிரமத்தை 'சிந்தாமணி' யபிமானிகள் இனிமேலாயினும் எனக்கு ஏற்படுத்தாமலிருக்கவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா பாக்கி, பலகடிதங்கள் எழுதுதல், அனுப்பும் வி. பி. திரும்பி வருவது இவைகளினால் எனக்கேற்படக்கூடிய வீண் சிரமத்தையும் பெருத்த நஷ்டத்தையும் இனிமேல எனக்கு ஏற்படுத்தாமல் மறு தபாலில் சந்தாவை மணியார்டர் செய்து சிந்தாமணி செவ்வனே நடை பெறுவதற்கு உதவி புரிவார்களென நம்புகின்றேன்.

இங்ஙனம்,
சகோதரி வி. பாலம்மாள்.
பத்திராதிபர்,

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. III.] August 1926. [No. 1.

श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.
(All Rights reserved by the Authoress)

सुबोधराम चरिते

॥ अरण्यकाण्डः ॥

तत्र शूर्पणखा नाम सञ्चरन्ती निशाचरी ।
उपेत्य प्रार्थयामास राघवं मदनातुरा ॥ ७ ॥

तत्र அவ்விடத்தில் सञ्चरन्ती திரிந்துகொண்டிருக்கும் शूर्पणखा नाम சூர்ப்பநகி என்னும் பெயருள்ள निशाचरी அரக்கியானவள் मदनातुरा (सति) காமநோயுற்றவளாக राघवं ஸ்ரீராமனை उपेत्य அடைந்து प्रार्थयामास பிரார்த்தித்தாள். ॥ ७ ॥

सोवाच जानकीजानिं रामं सुन्दरविग्रहम् ।
भज मां ब्रह्मणःपौत्रीं दशकण्ठानुजामिति ॥ ८ ॥

सा அந்த சூர்ப்பநகியானவள் सुन्दरविग्रहं அழகிய வடிவமுள்ளவரும் जानकीजानिं ஜானகிக்கு நாயகருமாகிய रामं ஸ்ரீராமனை (நோக்கி) ब्रह्मणः பிரம்மாவினுடைய पौत्रीं பௌத்திரியும் दशकण्ठानुजां ராவணன் தங்கையுமான मां என்னை भज அடையும் इति என்று उवाच சொன்னாள். ॥ ८ ॥

तिरस्कृता सा रामेण लक्ष्मणेन च वञ्चिता ।
जानकीं हन्तुमुद्युक्ता तस्या निकटमाययौ ॥ ९ ॥

रामेण ராமனால் तिरस्कृता அவமதிக்கப்பட்டும் लक्ष्मणेन च லக்ஷ்மணனாலும் वञ्चिता ஏமாற்றப்பட்டவளான सा அந்த சூர்ப்பநகியானவள் जानकीं சீதையை हन्तुं கொல்லுவதற்கு उद्युक्ता (सती) முயன்றவளாக तस्याः சீதாப்பிராட்டியின் निकटं சமீபத்தை आययौ அடைந்தாள். ॥ ९ ॥

विलोक्य लक्ष्मणस्तूर्णं तामाकृष्य निशाचरीम् ।
चिच्छेद श्रवणं तस्या नासिकां च तदाऽसिना ॥ १० ॥

लक्ष्मणः லக்ஷ்மணர் तदा அச்சமயம் विलोक्य கண்டு तां அந்த निशाचरीं அரக்கியை आकृष्य இழுத்து असिना வாளினால் तस्याः அவளுடைய श्रवणं காதையும் नासिकां च மூக்கையும் चिच्छेद வெட்டினார். ॥ १० ॥

(To be continued.)

ஸ்ரீராமஜயம்.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] அக்ஷய—ஆவணி. [இதழ் 1.

சிந்தாமணியின் மூன்றாவது ஆண்டு.

(பத்திராதிபர்)

எல்லாம் வல்ல இறைவனருளாலும் அன்னையின் ஆசிர்வாதத்தினாலும் இன்று நமது "சிந்தாமணி" மூன்றாவது ஆண்டில் தனது சிற்றடியை எடுத்து வைக்கின்றாள். இளமைப் பருவமாகிய இவ்விரண்டு பிராயமாக இயற்கையாயேற்படக்கூடிய பலவித பாலாரிஷ்டங்களுக்கும் சிந்தாமணி தப்பியது ஈசன் கருணையாலன்றி வேறில்லை. இவ்வாண்டிலாவது சந்தா நேயர்கள் தமது பழைய பாக்கியையும் அனுப்புவதுடன் புதிய சந்தாவையும் முன்பணமாக அனுப்பித் தன்னை நோய் நொடியின்றிச் சரிவர ஆதரிப்பார்களென்று சிந்தாமணி நம்பியிருக்கிறாள். வருஷக்கணக்காக இதழ்களைத் தங்குதடையின்றிப் பெற்றுக்கொண்டு வருஷ முடிவிலும் சந்தா கேட்ட சமயத்திலும் தமக்குப் பத்திரிகை இனித் தேவையில்லை யெனக்கூறிய கனவான்களுக்குந் தன்னைப் படித்து ஆனந்த மடைந்ததின் பொருட்டாவது சிந்தாமணி வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றாள். ஆரம்பத்திலேயே சந்தாவை யனுப்பி ஆதரித்த ஸ்திரீ வித்யாபிமானிகளுக்கு நன்றி செலுத்துகின்றாள். சிறந்த வியாசங்களைத் தவறாது அனுப்பித் தன்னை யலங்கரித்த நிருப சகோதர சகோதரிகளை இனியும் இவ்வாறே செய்து வரவேண்டுமாய் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறாள். மாதா மாதம் தன்னைக் குறிப்பிட்ட காலத்தில் வெளிவரச்செய்த அச்சாபீஸ் மெஸர்ஸ் ஸ்ரீனிவாச வரதாச்சாரி அண்ட் கம்பெனிக்கு வந்தனமளிக்கிறாள்; மாதிரிப்பிரதியாகச்செல்லும் சம

யத்தில் தன்னை வேண்டும் வேண்டாம் என்பதை உடனே தெரிவித்து, வீண் நஷ்டம் விளைவிக்காது தடுக்கவேண்டுமாய் வாசகப்பிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறாள். கூடிய சீக்கிரத்தில் இரண்டாயிரம் சந்தாதார் சேர்ந்து விடுவாராயின் இப்போதுள்ள அறுபத்தி நான்கு பக்கங்களுடன் இன்னம் பதினாறு பக்கங்கள் சேர்த்து எண்பது பக்கங்களாக வெளிவரச் சிந்தாமணி விரும்புகிறாள். தன்னைச் சிறப்பிக்கக் கருதும் சகோதரிகளின் உயர்தர வியாசங்களுக்கெல்லாம் இல்லை யென்னாது வேண்டிய இடமளிக்க வேண்டுமென்பதே சிந்தாமணியின் முக்கிய நோக்கமாகும். சந்தாதார் சந்தாவை முன் பணமாகவனுப்பாததினாலேயே சென்ற ஜனவரி மாதமிருந்து வழக்கமபோல் அவ்வம் மாதங்களின் கடைசிலேயே வெளி வர முடியாமல் போயிற்றென்றும் இருப்பினும் தன்னைத் தவறாது வெளியிட்டு 'பத்திரிகை எப்போது கிடைக்கும்,' 'எப்போது படிப்போம்' என்று எதிர் பார்த்திருக்கும் சந்தாதார்களின் மனச் சந்தோஷத்தையே முக்கியமாகக் கருதும் ஆசிரியரின பெரு முயற்சியால ஜுன் மாதத்தில இரண்டிதழ்களைச் சேர்தது வெளியிட்டு இக்குறை நீக்கப்பட்டதெனறும, பத்திரிகை சற்றும தாமதமின்றி ஒவ்வொரு மாதமும் குறிதத காலததில் பத்திரிகை கிடைப்பதில் ஆவல்கொண்டிருப்பது பத்திரிகையின உயர்வைக காட்டுகிறதாயினும முன் பணமனுப்புதலே போற்றததக்க ஸ்திரீ விதியாபிமானமும் பத்திரிகாபிமானமும் ஆகுமெனறும் சிநதாமணி வணக்கததுடன் சநதாதார்கருக் தெரிவிததுக் கொள்ளுகிறாள். அபிபிராய மளிப்பதெனபதை ஒரு சம்பிரதாயமாகவும் நிர்பந்தமாகவும் கொள்ளாது விஷயங்களைத் தொடர்ந்து படிபபதனால அந்த சமயத்தில் மனதிறகுண்டாகிய திருப்தியையும் கிளர்ச்சியையும உள்ளது உள்ளபடி எழுதியனுப்பி அபிப்பிராயமளித்தலென்ற சொல்லை உண்மைப் படுத்திய சகோதரி சகோதரர்களின் மனோற்சாகத்தை யனுசரித்தே என்றும் நடந்துகொள்ளச் சிந்தாமணி உறுதி கொண்டிருக்கிறாள்.

நிறைய மார்ஜின் (காலியிடம்) விட்டு வரிகளுக்கிடையேயும் இடம் விட்டுக் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சற்று பெரிய எழுத்தில் எழுதியனுப்பவேண்டுமாயும், தொடர்ச்சியாயுள்ள சங்கதிகளை முழுதும் எழுதி ஒரே முறையில் அனுப்பி விடவேண்டுமாயும் நிருபமெழுதும் சகோதரிகளுக்குத் தாழ்மையுடன் ஞாபகப் படுத்துகிறாள். ஐந்தாறு மாதங்கழித்துத் தமக்கு இன்னின்ன இதழ்கள் சேரவில்லை என்று எழுதும் வழக்கத்தை அறவே ஒழித்துப் பிரதி ஆங்கில மாதம் பத்துத் தேதிக்குள் பத்திரிகை கிடைக்கவில்லை என்ற விஷயத்தை எழுதினால் தபால் அதிகாரிகளுக்கு அதை யனுப்பவும் மீண்டும் பத்திரிகையை இலவசமாயனுப்பவும் சௌகரியமாயிருக்குமென்றும் சந்தாதாரைச் சிந்தாமணி கேட்டுக்கொள்ளுகிறாள். பழைய சஞ்சிகைகள் கைதவறி இருக்கும் பக்ஷத்தில் அவைகளுக்குத் தனிப்பிரதியின் விலையையனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், மாதிரிக்காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பை யனுப்புதல் அவசியமென்றும் தெரிவிக்கிறாள். ஒரு வருஷத்தில் இரண்டொரு மாதங்களுக்காகப் பன்முறை மாற்று விலாசங்களைத் தெரிவித்து வீண் சிரமமளிக்காது இந்தப்பொறுப்பைத் தபாலதிகாரிகளிடம் ஒப்படைக்கக் கோருகிறாள். வந்த வி. பி. யைத் திருப்பி விடும் சந்தாதார் சந்தாவை யனுப்பும்போது வி. பி. செலவின் நஷ்டத்தையும் சேர்த்து அனுப்புதல் உசிதமாகவும் உபகாரமாகவும் இருக்குமென்று சிந்தாமணி நினைக்கிறாள். சந்தாவை மணியார்டர் செய்யும அயல நாட்டுச் சந்தாதார்கள் தங்

நடை பெறுவதற்கும் விளம்பரம் தக்க சாதனமென்று கூறப்படுகிறது. ஆனால் விளம்பரம் அனுப்புவோரில் ஒரு சிலரைத் தவிர்த்து பெரும்பாலர் தங்கள் ஒப்பந்தத்தைக் கடிதத்துடனே நிறுத்திக் கொண்டு பண மனுப்பாமல் இலவசமாகத் தங்கள் பொருளை விளம்பரம் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். தவிர பணத்திற்காக எத்தகைய விளம்பரங்களையும் ஏற்றுக்கொள்வதும் உசிதமல்லவென நான் நினைக்கின்றேன். இவைகளை எல்லாம் கவனித்து இம்மூன்றாவது வருஷத்தில் கை நஷ்டமின்றிச் சிந்தாமணி நடைபெறுவதற்கும் இன்னம் அதிகப் பக்கங்களுடன் வெளி வருவதற்கும் நீங்கள் அதிக சிரத்தை யெடுத்து உங்கள் இஷ்ட மித்திர பந்துக்கள் எல்லாரையும் சந்தாதாராகச் சேர்த்து என் முயற்சியை ஆதரிப்பது எனது பத்திரிகாபிமானிகளாகிய உங்களுக்குக் கடமையாகும். இவ்வருஷத்தில் சந்தாவை முன்பணமாக இம்மாதத்திலேயே அனுப்பும்படிக்கும் சந்தாவை இதுவரையனுப்பாமலே இருப்பவர்கள் இனியும் தாமதமின்றி அனுப்பும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறேன். வி.பி. யனுப்பிச் சந்தா வசூலிப்பதில் எனக்கு அதிகவேலையும் உங்களுக்கு அதிகச் செலவும் ஏற்படுகின்றது. சந்தாவை மணியார்டரில் அனுப்பிவிட்டால் பரஸ்பரம் இந்த சிரமம் குறைந்துவிடுமென்பதை கவனிக்கக் கோருகிறேன். வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் மணியார்டரில் தங்கள் முழுவிலாசத்தை எழுதாது அனுப்பிவிடுகிறார்கள். ரிஜிஸ்டர் செய்தோ அல்லது போஸ்டல் சர்டிபிகேட்டாகவோ முழுவிலாசத்துடன் அனுப்பினால் உபகாரமாகவிருக்கும். வெளி நாடுகளுக்குக் கடிதப் போக்குவரத்துச் செய்தல் தபாற்கூலியை உத்தேசித்து முடியாமலிருப்பதால் சந்தாவை பாக்கியின்றி உடனுக்குடன் அனுப்பிப் பத்திரிகையை ஆதரிக்க வேண்டுகிறேன்.

எவ்வளவு வருஷங்களான போதிலும் சந்தாவனுப்பாது பத்திரிகையை மட்டும் படிக்க நினைக்கும் கனவான்களிடமிருந்தும், கைக்காசு செலவின்றி விளம்பரம் செய்ய விரும்பும் வியாபாரிகளிடமிருந்தும் பணம் வசூலித்தல் சிரமசாத்திய மானது பற்றி இவ்வருஷத்தில் அத்தகையோர்களை எதிர்பார்த்து இனியும் ஏமாறாது நிறுத்திவிடுதல் சிலாக்கியமெனத் தீர்மானித்திருக்கிறேன். இது காரணம் பற்றி எனக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஒருவாறு நீக்குவதற்கு உங்களில் சிலர் இவ்வருஷம் போஷகராகவும் (போஷகர் 1-வருஷத்திற்கு 25 ரூபாயளித்தல்) நன்கொடை யளித்தும் (நன்கொடை 15 ரூபாய்) அபிமானிகளாகவும் (வருஷத்திற்கு 10 ரூபாய்) ஏற்பட்டு என் முயற்சியை ஆதரித்துப் பத்திரிகை நிர்வாக விஷயத்திலுள்ள சிரமத்தை நீக்கத் தவறமாட்டீர்களென்று நம்பியிருக்கிறேன். வீண் விஷயங்களிலும் அனாவசிய காரியங்களிலும் சம்பந்த மற்ற விவகாரங்களிலும் வேற்றுமை பாராட்டக் கூடிய வழிகளிலும் கட்சிப் பிரதி கட்சிகளை விளைவிக்கும் சமாச்சாரங்களிலும் தலையிடாதும், ஏற்காததும் முன்னுக்குப் பின் முரண்படக் கூடியதும் பிறர் மனதை நோகச் செய்வதுமான கொள்கையைக் கொள்ளாது ஆரமபம் முதல் இதுவரை ஒரே நோக்கத்துடனும் கம்பீரத் தோற்றத்துடனும் நடந்து வருவது போலவே இனியும் எப்பொழுதும் நடந்து கொள்ளவேண்டுமென்பதே சிந்தாமணியின் ஆழ்ந்த கருததாகும். என் சகோதரிகள் தமதுள்ளக் கருத்தையும் அனுபவத்தையும் முன்னிட்டு எழுதி வரும் வியாசங்களை அவ்வாறே வெளியிட்டு வருவதினால் சமூக முன்னேற்றத்திற்கான பல விஷயங்களும் பிரஸ்தாபிக்கப் படுகின்றமையால பெண் சமூகத்திற்குப் புரியவேண்டிய ஊழியத்தில் ஒரு சிறிதும பின் வாங்காது மேன்மேலும அதிகமாகப்

கள் முழுப்பெயரை அல்லது சந்தா நம்பரைத் தெளிவாக யெழுதும்படிக்கும் கடித மூலமாக ஆர்டர் செய்யும் சந்தாதார்கள் தாங்கள் அனுப்பும் ஆர்டர் புதியதாயின் அதை விவரமாய்க் குறிப்பிட்டு எழுதவேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறாள். தனது அபிமானிகளனைவரும் சுக ஜீவிகளாகவும் தனது நிருப சகோதர சகோதரிகள் சுக சந்தோஷ மனோற்சாகமுள்ளவர்களாகவும் தன்னைப் பதிப்பிக்கும் அச்சாபீசுக்காரர்கள் வழக்கப்போல பத்திரிகை வெளி வருவதில் சிரத்தையும் அன்பும் கொண்டு உபகாரம் செய்யப் பின்வாங்காதவர்களாயும் இருக்கவேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி மெத்த உற்சாகத்துடன் தனது மூன்றுவது ஆண்டை நமது சிந்தாமணி தொடங்குகிறாள்.

சுபம்!

நமது பத்திரிகாபிமானிகளுக்கு.

(சகோதரி வி. பாலம்மாள்).

எனது பத்திரிகாபிமானிகளான சகோதரி சகோதரர்களே!

இன்றுமுதல் சிந்தாமணிக்கு மூன்றுவது ஆண்டு ஆரம்பமாகின்றதை நீங்களனைவர்களும் அறிவீர்கள். இரண்டாவது வருஷ நிர்வாகத்தைப் பற்றிய யோக க்ஷேமங்களை உங்களிடம் தெரிவித்துக் கொள்ளல் என் கடமையாகும். இரண்டாவது வருஷத்தில் புதிய சந்தாதாரர் பலர் ஏற்பட்டதற்கு உங்களுடைய சிரத்தையே காரணமாயிருந்தது பற்றி உங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனங்களை யளிக்கின்றேன். தானாகச் சந்தாவை மணியார்டரி லனுப்பியும் அனுப்பிய வி. பி. யைத் திருப்பி விடாது பெற்றுக்கொண்டும், சந்தாவை யனுப்ப வேண்டுமென்று கேட்டு எழுதியதும் அதை யசட்டை செய்துவிடாது உடனே அனுப்பிக் கொடுத்ததும், வருஷாரம்பத்திலேயே சந்தாவை முன் பணமாக வனுப்பியும் இவ்வாறெல்லாம் எங்களுக்குச் சௌகரியமான வழியில் உதவி புரிந்து பத்திரிகைக்கு ஆதரவளித்ததற்கு நன்றி பாராட்டுகிறேன். நான் பத்திரிகையை ஆரம்பித்திருக்கும் நோக்கத்தையும் சிந்தாமணியின் அருமையையும் நன்கறிந்து ஆரம்பம் முதல் ஆதரிப்பவர்களும் முதல்வருஷ மத்தியிலிருந்து ஆர்டர் அனுப்பிச் சந்தாதாரானவர்களும் அனுப்பிய சந்தாவைக் கொண்டு இவ்விரண்டு வருஷமாகப் பத்திரிகை நடத்தப்பட்டு வருகிறது. நூற்றுக் கணக்கானவர்கள் சந்தாவை யனுப்பாமலும் பத்திரிகை தங்களுக்குத் தேவையில்லை என்று ஆரம்பத்திலேயே தெரிவிக்காமலும் சந்தாவனுப்பும்படி அடிக்கடி எழுதிய கடிதங்களைப் பொருட்படுத்தாமலும் வி. பி. யனுப்பும் போதெல்லாம் கூசாது திருப்பி விட்டும் போஸ்டில் வரும் பத்திரிகையை மட்டும் சந்தோஷத்துடன் வாங்கிப் படித்ததினாலும், பணமளிக்கும் வழக்கமற்ற விளம்பரக்காரர்களாலும் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை நான் இச்சந்தோஷ சமயத்தில் குறிப்பிட விரும்பவில்லை.

உண்மையில் உபகாரம் செய்து பத்திரிகையை ஆரம்பத்திலிருந்து ஆதரித்து வரும் நீங்கள் கைப்பணத்தை யளிக்க மனமில்லாவிட்டாலும் சிந்தாமணியைப படித்து மகிழ்ந்த அன்னாரின் மகிழ்ச்சிக்குக் காரணமாயிருந்ததை மட்டும் குறிப்பிடுகின்றேன். பத்திரிகை அபிவிருத்தி யடைவதற்கும் நஷ்டமில்லாமல்

புரிந்துவர அதிக உற்சாகங் கொண்டுள்ளதை முன்னதாகவே உங்களுக்குச் சிந்தாமணி விக்ஞாபித்துக் கொண்டிருப்பதினால் சிந்தாமணி யபிமானிகள் முன்னிலும் அதிக சிரத்தையெடுத்து அதிக சந்தாதாரர்களைச் சேர்த்து ஒவ்வொரு கிராமங்களிலும் நகரங்களிலும் பர்மா, இலங்கை, மலாய்நாடுகள் முதலிய பல விடங்களிலுமுள்ள ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் ஒவ்வொரு தமிழ் மாதின் கையிலும் உலவி வரும்படி செய்யக் கோருகிறேன்.

பெண் மக்கட்குரிய கல்வியும் பெண்களின் கல்விப்பயிற்சியும் ஆதரிக்கப்படும் இச்சமயத்தில் சிந்தாமணியைக் கல்வியிலாகா அதிகாரிகள் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் தமிழ் ஜில்லாக்களிலுள்ள கல்வியதிகாரிகளும், முனிசிபல் சேர்மன்களும், ஜில்லா போர்ட் தலைவர்களும், கல்விச் சபை அங்கத்தினர்களும், முனிசிபல் கௌன்சிலர்களும், ஜில்லா போர்ட் மெம்பர்களும், தாலுக் போர்ட் தலைவர்களும், கூட்டுறவு சங்க அங்கத்தினர்களும், தாலுக்போர்ட் மெம்பர்களும் ஸ்திரீ சமூக முன்னேற்றத்திலும் முழுமனதையும் செலுத்தி சிந்தாமணியை எங்கும் பரவும்படிக்குச் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். சிந்தாமணி மாணவர் ஆடவர் ஆகியவர்களுக்கும் உபயோகமுள்ள தென்று கற்றறிந்தவர்கள் அபிப்பிராயப் பட்டிருப்பதால் ஒவ்வொரு பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்களும் சிந்தாமணிக்கு ஆர்டர் செய்து என் முயற்சியை நன்முயற்சியாக்க வேண்டுகிறேன். ஏற்கனவே வரவழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு வந்தன மளிக்கின்றேன். சிந்தாமணியும் அதன் அபிமானிகளும் நாளுக்கு நாள் அபிவிருத்தி யடையும்படி இறைவன் அருள் புரிவாராக.

சுபம்.

ஜனப்பிரதிநிதித்துவமும் பெண்மக்களும்.

(பத்திராதிபர்)

சமீபத்தில் நடைபெற்ற சென்னை சட்ட சபையின் கூட்டத்தில் சட்ட சபைகளுக்குப் பெண்மக்களும் அபேக்ஷகராக ஏற்பட்டு ஸ்தானம் பெறலாமென்ற தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பெண்மக்கள் ஜனப்பிரதிநிதித்துவம் வகித்தல் அவசியமா அன்று என்பதைப் பற்றிய விவாதத்தைக் கவனித்தல் இச்சமயத்திற்கேற்றதாகும். பெண்களுக்கும் சகல உரிமைகளும் ஆண்மக்கள் போலவே ஏற்பட வேண்டுமென்பதும் குடும்ப நிர்வாகிகளான பெண்மக்களுக்குச் சட்டசபைபோன்ற விடங்களில் என்ன சம்பந்தமென்பதும் இவ்விருதிறத்தார்களின் வாதத்திற்கும் மூல காரணமாக விருக்கின்றது. பெண்கள் ஜனப்பிரதிநிதித்துவம் வகிக்கவேண்டுமென்ற முறையில் அயல் நாட்டைப்போன்று இந்தியாவில் வரம்பு கடந்து முன் வந்து அடிதடி சண்டையிட்டு ஆடவர்களுடன் போராடி இந்தியப் பெண்கள் இப்பதவியைக் கோரவில்லை. சகஜமான வழியிலும் ஆடவர்களின் பிரயத்தினத்தாலும் இவ்வுரிமை கிடைத்திருக்கின்றதென்பது உண்மை. பொதுவாக இந்தியப் பெண்கள் அனைவர்களும் இத்தகைய சுதந்திரத்தைக் கையாளுவதில் இஷ்டமுற்றிருக்கவில்லை. பலருக்கு சௌகரியமும் கிடையாது. இதை விரும்பியிருக்கும் பெண்களிடையேயும் இருவித அபிப்பிராயமிருப்பதைக் காணலாம். தற்கால நாகரிகத்திற்கேற்றபடி கலாசாலைக் கல்வியை

யபிவிருத்திசெய்து எல்லாத் துறைகளிலும் ஆடவர்களுக்குச் சமானமாக சம அந்தஸ்து படைக்க வேண்டுமென்பார் ஒரு சாரார். தற்கால நிலைமையை யுத்தேசித்து இத்தகைய ஸ்தானங்களை வகித்துத் தங்கள் நிலைமையைப் பூர்வீகத்திலிருந்த உயர் நிலைக்குக் கொண்டுவர விரும்புவார் மற்றொரு சாரார். முன் சொன்னவர்களுக்குத் தற்கால நாகரிகமும் தங்கள் சுயத்திர்மானமுமே பக்க பலமாக விருக்கின்றது. பின் சொன்னவர்களுக்குப் பெண் சமூகம் முழுதும் ஆதரவாயிருக்கிறதென்பதை மறுக்க வியலாது. நமது பெண் மக்கள் பலர் மேன் பார்வைக்கு ஒன்று மறியாதவர்கள் போல சாமானியமாகக் காணப்பட்டாலும் இவர்கள் ஒரு காரியங்களிலும் ஈடுபடாமலிருந்து கொண்டிருப்பினும் தங்கள் முற்கால தற்கால நிலைமைகளைப் பற்றியும் தங்களுக்கு இன்னதுதான் தேவை என்பது பற்றியும் தங்களுக்கு ஏற்படவேண்டிய சீர்திருத்தம் இத்தகையதாயிருக்கவேண்டுமென்பதையும், தங்களுக்குப் பிரதிநிதியாக ஸ்தானம் வகிக்கும் பெண்மணிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் செவ்வனே அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு நமது சிந்தாமணியில் வெளிவரும் அன்னார்களின் நிருபங்கள் போதிய சான்றாக விருக்கின்றன. இதை நன்கறிய வேண்டுமாயின் பல விடங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்தும், கிராமங்களுக்குச் சென்றும், பெரிய குடும்பங்களில் அமைதியுடன் தங்கள் கல்வியறிவைத் தங்கள் குடும்ப நிர்வாகத்திலும் தங்களுக்கேற்ற முன்னேற்றத்திற்கான வழியிலும் செலவழித்துக்கொண்டும், உலக நிலையையும் தேசத்தின் தற்கால நிலையையும் தேச பாஷை பத்திரிகைகள் மூலம் தெரிந்து கொண்டும் வாழ்ந்து வரும் பெண்மணிகளிடமும் வயது சென்ற பெரியோர்களிடமும் நெருங்கிப்பழகி அவர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டால் நன்கு விளங்காமற் போகாது. இது பற்றிச் சட்டசபைகளில் ஸ்தானம் பெற விரும்பும் சகோதரிகள் இவர்களின் அபிப்பிராயப்படி நடந்துகொண்டு தங்கள் இனத்தவர்களின் நன்மையைக் கோரக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை வற்புறுத்துகிறோம்.

தற்காலம் தேச மகா ஜனங்களின் உணர்ச்சியைக் கவனிக்குங்கால் தேச நன்மைக்குப் பாடுபடுபவர்களையே ஜனப்பிரதிநிதிகளாக ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நிலை பெற்றிருப்பதாகத் தெரிகிறது. சட்ட சபைகளில் ஸ்தானம் வகிக்கும் ஆடவர்களே சில சமயங்களில் தலையாட்டிப் பொம்மைகள் என்று ஜனசமூகத்தால் குறை கூறப்படும் சந்தர்ப்பத்தில் கூரிய வாள் போன்ற இப்பதவியை வகிக்க முன் வரும் பெண்மணிகள் பொதுவாகத் தங்கள் இனத்தவர்களின் அபிப்பிராயத்தை முன்னிட்டு நடந்துகொள்வதில் மெத்த சிரத்தையுள்ளவர்களாயும் பொறுப்புள்ளவர்களாயும் சுயத்திர்மானமுள்ளவர்களாயும் இருக்கவேண்டியது அவசியம். ஜனப்பிரதிநிதி ஸ்தானங்களுக்குப் பட்டதாரிப் படிப்பும் மற்றவைகளும் அவசியமில்லை என்பதையும் தேச மகா ஜனங்களின் நிலையை நன்குணர்ந்தவர்களே தேவை என்பதையும் வாக்காளர்கள் நன் குணர்ந்திருப்பதினால் கூடிய வரையில் அனுபவமும் முதிர்ந்த வயதும் தன் இனத்தவர்களின் கோரிக்கைகளைத் தெரிந்தும் அவர்களால் மதிக்கப் பெற்றும் உள்ள பெண்மணிகள் சட்ட சபைகளில் ஸ்தானம் வகித்துத் தங்கள் கடமையை செவ்வனே நடத்தி முடிப்பதற்கான உதவியை வாக்காளர்களும் ஆடவர்களும் முன் நின்று செய்யத் தவறமாட்டார்களென்று நினைக்கிறோம். ஸ்திரீகள் வாக்குரிமை மட்டும்

பெற்ற காலத்தில் தங்களுக்குள்ள அசௌகரியங்களையும் கவனியாது ஆடவர்களுக்குத் தங்கள் வோட் அளிப்பதில் மெத்த சிரத்தையெடுத்து வந்திருப்பதை ஆடவர்கள் ஞாபகப்படுத்திக்கொண்டு அதற்கு கைம்மாறாகத் தங்கள் சகோதரிகளையே அபேக்ஷகர்களாக முன் நிறுத்தித் தங்கள் வோட்டுக்களை அளித்துப் பெண் சமூகத்தைக் கௌரவிக்கப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆடவர்களைப்போல பெண் மக்களுக்குப் பண வருவாய் அதிகமில்லாமையாலும் இருப்பினும் அதைத் தங்கள் குடும்பத்திற்கின்றி வேறு வழியில் செலவழிக்க இவர்கள் மனந்துணியார்களானாலும் இவர்களுக்கு அதிகச் செலவு கொண்டே சௌகரியங்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியிருக்கின்றதாலும் சட்ட சபைகளுக்கு அபேக்ஷகர்களாக வரும் பெண்கள் விஷயத்தில் தற்காலம் ஆடவர்களுக்காகவுள்ள பல நிர்பந்தமான விதிகளை விலக்கிப் படிச்செலவை இரட்டிப்பாக அளித்துத் தேவையான சௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டுமாய் அரசாங்கத்தாரையும் கேட்டுக்கொள்ளுகிறோம். ஜனங்களின் கஷ்ட நிஷ்டூரங்களை யறிந்து அவர்களுக்கு ஊழியம் புரிவதற்கென்றே ஜனப்பிரதிநிதித்துவம் வகிக்க விரும்பும் ஆடவர்களும் பெண் மக்களும் தாராளமாக முன் வந்து இப்பதவியை வகித்துத் தங்கள் ஊக்கங் குன்றாது உழைத்து மகா ஜனங்களிடையே நற்பெயரும் புகழும் பெற வேண்டுமாயின் சட்ட சபை நடவடிக்கைகள் முழுதும் தேச பாஷையில் ஏற்பட்டாலன்றி ஒரு பயனும் விளையாது என்பதை மட்டும் நிச்சயமாகத் தெரிவித்து இவ்வியாசத்தை முடிக்கிறோம்.

சம்சாரிகள் இளைப்பாறும் இடம்.

(ஸ்ரீமதி பி. மங்களாபாயி)

சம்சாரிகளுக்கு முக்கியமானதும், உண்மையாக இளைப்பாறுவதற்கும், மனதிற்கும் சரீரத்திற்கும் உண்மையாக ஆறுதல் கொடுப்பதுமாகிய ஸ்தானம் எதுவென்றால், அது அவர்களுடைய வீடேதான். அவ்வீட்டில் வசிப்பவர்களுக்கு அதனால் ஆனந்தம், சமாதானம், சுகம் உண்டாகவேண்டுமானால் அது எப்படி இருக்கவேண்டும், அதில் எத்தகைய ஏற்பாடு இருக்கவேண்டும் என்பதைப் பற்றி சில யோசனையையும் சூசனையையும் இவ்வியாசத்தின் மூலமாய் எனது சகோதர சகோதரிகள் முன்னில் வைக்கவேண்டுமென்று யோசித்திருக்கிறேன். முதலில் வீடு என்றால் என்ன என்பதை நாம் கவனிப்போம்.

எந்த இடத்தில் கட்டின ஆப்த சம்பந்தத்தினால் கட்டுப்பட்டிருக்கும் சிலர் ஒருமிக்க வசிக்கின்றனரோ அந்த இடத்தை வீடு என்கிறார்கள். பல தடவைகளில் நம்மையே நம்பியிருக்கும் வேறு சிலரும் அதில் சேர்ந்திருப்பார்கள். அப்பொழுது இத்தகைய வீட்டின் விசாரத்தைப் பலர் பலவிதமாகச் செய்வார்கள். இது சகஜந்தான். என் கொள்கையின்படி வீட்டைப் பற்றி என்னென்ன அவசியமென்பது பின் வருமாறு:—

முதலாவது வீடு என்றால் வெளியிலிருந்து களைத்துச் சளைத்து வந்தவர்களுக்கு முக்கியமாய் அது இளைப்பாறுமிடமாக இருக்கவேண்டும், தற்காலத்தில் உத்தியோகத்திற்காகக் கேவலம் புருஷர்கள் மாத்திரமே வெளியிற் செல்கிறார்கள் என்று சொல்லும் காலமல்ல; புருஷர்கள், ஸ்திரீகள், சிறுவர்கள் கூடப் பல வேலை

யின் பொருட்டு வீட்டிற்கு வெளியில் செல்லுகின்றனர். தத்தம் காரியத்தை முடித்துக்கொண்டு இளைப்பாறும் பொருட்டு, சிரம பரிகாரமாய் புதிய உற்சாகத்தை அடையும் பொருட்டு வீட்டிற்கு வருகின்றனர். அச்சமயத்தில் வீட்டில் நல்ல ஒழுங்கும், ஏற்பாடும், ரம்மியமுமாகக் காணப்படாமல், எங்கு பார்க்கினும் நாற்றமும் ஒழுங்கீனமுமிருந்தால் அங்கு வருபவர்களுடைய மனதிற்கு எப்படி இருக்கும்? களைத்துப்போன மனதிற்கு உற்சாகமுண்டாக வீடு ரம்மியமாயிருக்கவேண்டும். ஒவ்வொரு வீடும் இயற்கையான அழகு வாய்ந்த வீடாயிருப்பது பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் சாத்தியமேயில்லை என்பது உண்மைதான். வீட்டிற்கு அக்கம் பக்கத்தில் மனோஹரமான காட்சிகள், அழகிய குன்றுகள், அடர்ந்த மாஞ்செடிகள், கடற்கரை அல்லது ஓடும் ஆறு, விஸ்தீர்ணமான மைதானம், அக்கம் பக்கத்தில் வரிசை வரிசையான மரங்கள், அவை மேல் பறவைகள் இனிமையான தொனி செய்துகொண்டிருப்பது, எங்கும் சாந்தமான இடம் இவ்வாறு உலகத்தில் நடக்கும் பல விவகாரங்கள், மாறுபாடுகள் இவைகளால் அலுத்துச் சலித்த மனதிற்கு சாந்தத்தைஉண்டாக்குவதற்குஇனிய இயற்கையமைப்புக்களும் அமைந்திருப்பது வெகு சில பாக்கியவான்களுக்குத்தான் சாத்தியமாகிறது. ஆனால் இந்த பாக்கியத்தை நினைத்துச் சிறிய குடிசையில் அல்லது தெருக்களில் சிறிய அறைகளில் வசிப்பவர்கள் ஆசையை இழப்பது மாத்திரம் சரியல்ல. காரணம் எல்லோருக்குமே இயற்கை அழகு சாத்தியப்படாமற் போனபோதிலும், சேர்க்கை அழகால் தமது சிறிய வீட்டை அலங்கரிக்க ஒவ்வொரு மனியாலும் முடியும். அப்படிச் செய்வது மிக்க கஷ்டம் அல்லது அதிகச் செலவுடையதென்பதுமில்லை.

வீட்டிற்கு அழகுண்டாவது விலையுயர்ந்த சாமான்களால், அழகிய மேஜைகள், நாற்காலிகள், பீரோக்கள் இவைகளால், அல்லது குளோப்பு லாந்தர்களாலன்று; ஆனால் அது, வீட்டிலுள்ள ஒவ்வொரு வஸ்து—அது எவ்வளவு அற்ப விலையுடையதாயிருக்கட்டுமே—பணிக்காயும் ஒழுங்காகவும் வைத்தாற்றான் வருகிறது. ஆகையால் மனம் பிரசன்னமாயிருப்பதற்கு வீட்டிற்கு இத்தகைய அழகைக் கொடுக்க சிறு பருவம் முதல் சிறுவர் சிறுமிகளுக்குப் பழக்கமிருக்கவேண்டும். சிறுவர் சிறுமிகளுக்கு இப்பழக்கம் உண்டாவதற்கு ஒரு சிறிய தத்துவம் சிறு பருவம் முதல் அவர் மனதில் பதியுமாறு செய்யவேண்டும். அதாவது—"A place for everything and every thing in its place" (ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வோரிடம், அவைகளுக் கேற்பட்ட இடத்தில் அவைகளை வைப்பது) ஒவ்வொரு வீட்டிலும் இந்த தத்துவத்தைக் கைப்பிடித்தொழுகினால் அவ்வீட்டிலிருக்கும் ஒழுங்கீனம் இல்லாமற் போயிற்றென்றே நினைக்கவேண்டும்.

பெரிய அரண்மனைகளை அலங்கரிப்பதென்றால் பலவிதமான அழகிய மரச்சாமான்களும் பெரிய பெரிய சித்திரக்காரருடைய சித்திரங்களும் புகைப்படங்களும் விலையுயர்ந்த ஜமக்காளங்களும் ரத்ன கம்பளங்களும் இதன்றி விலையுயர்ந்த பல அபூர்வமான வஸ்துக்கள் முதலியன அவசியமாயிருக்கும்; ஆனால் இத்தகைய இடத்தின் அழகை அடிக்கடி பார்க்கக் கிடைத்த ஓர் ஏழை சிப்பாயியானவன் தனது சிறிய அறையை அவ்விதமாய் அலங்கரிக்க முயன்றால் அது சிரிப்பிற்கிடமாகும். பிறரைப் பார்த்து அவன் கிடைத்தமட்டும் சாமான்களால் எப்படியாவது தனது அறையை நிறைத்த போதிலும், அவைகளின் மீது படியும் தூசு, குப்பை இவைகளை எடுத்துத்

துடைத்துச் சுத்தப்படுத்தாவிடில் வீட்டில் அசுத்தமும் நாற்றமுமுண்டாகும். காரணம், பெருக்கித் துடைத்துவைக்க அவனிடத்தில் வேலைக்காரன் ஏது? அவன் வெளியிலிருந்து களைத்துச் சளைத்து வந்த பிறகு மறுபடியும் வேலை செய்ய அவனுக்கு சக்தியுமிருக்கப் போவதில்லை. இவ்வாறுகவே நடுத்தரமான நிலைமையிலிருக்கும் ஸ்திரீயானவள், தனது பணக்காரத் தோழி தன் சிறிய வீட்டைப் பார்த்து என்ன சொல்வாள், அவளுக்கது விரிச்சென்று தோன்றுமே என்று நினைக்காமல் கொஞ்சமேயானபோதிலும் அவசியமான சாமான்களை மாத்திரம் வைத்துக் கொண்டு, அவைகளை ஒழுங்காகவும், சீராகவும் இருப்பதற்குள் கண்ணுக்கும் அழகாகக் காணும்படி வைக்கவேண்டும். மக்களுடைய மனதிலும் இத்தகைய விஷயங்களின் மகத்துவம் பதியுமாறு செய்து, சிறு பருவம் முதற்கொண்டே அவர்களுக்கும் ஒழுங்காகவும், பணிக்காகவுமிருக்கக் கற்பித்து, அவர்களுடைய சிறிய சிறிய விளையாட்டுச் சாமான்களையுங்கூட அந்தந்த இடத்தில் ஒழுங்கு படுத்திவைக்கும் வழக்கம் உண்டாகுமாறு செய்யவேண்டும். ஒருதரம் இவ்வழக்கம் சிறியோர், பெரியோர் எல்லாருக்கும் உண்டாகி விட்டால், ஒழுங்கீனமும் அசுசியும் எப்பொழுதும கண்களுக்கு அசங்கியமாகத் தோன்றும். எனக்கு என் உத்தியோகத்தின் காரணமாகப் பெரும சீமான்களுடைய பங்களா முதற்கொண்டு மிகவும் ஏழை ஜனங்களின சிறிய அறைக்கும் போகும்படி ஏற்படுகின்றது. அதனால் பல திறத்தார்களுடைய வீடுகளை சகஜமாகவே பார்க்கும்படி நேருகின்றது. பிரசஸ்தமான வீடு, விஸ்தீர்ணமானதும், நன்கலங்கரிக்கப்பட்ட டிராயிங் ரூம்கள், அழகிய பெரிய பெரிய பீரோக்கள் அல்லது அலமாரிகள், மேஜைகள் முதலிய மரச்சாமான்கள் இவைகளை தினமுந் துடைத்துச் சீர்படுத்திவைக்க வேலைக்காரர்கள் முதலிய சாதனங்கள் சீமான்கள் வீட்டிலிருக்கின்றன. அதனால் அவ்விடங்களில் ஒழுங்கும் பணிக்கும் காணப்படுகின்றது; ஆனால் சாதாரணமாய் ஏழைகளாயிருக்கப்பட்டவர்களுக்கும் தம் வீட்டை ஒழுங்காகவும், கண்களுக்குக் களிப்புண்டாக்குமாறும் வைக்க முடியும் என்பதும் சில கிருஹிணிகளுடைய கிருகங்களைப் பார்த்து எனக்குத் தெரிந்தது. எனது ஓர் ஏழை சிநேகிதி இருக்கிறாள். அவளுடைய வீடு சிறியதாகத்தானிருக்கிறது. ஆனால் அவள் அந்த சாமான்களைப் பொருக்கி எடுக்கும் விதம், அவைகளில் சிக்கனம், இருப்பதற்குள் சோபை யுண்டாகும்படிச் செய்யும் முயற்சி முதலிய அவளுடைய குணங்கள் உண்மையாகப் பின்பற்றக்கூடியனவா யிருக்கின்றன. சமையல் அறை—எந்த இடத்தில் அதிக அவசியமான சாமான்களை எப்போதும் வைத்திருக்கவேண்டிய அவசியமிருக்கிறதோ அதை அவள் மிகவும் ஒழுங்காகவும், சிறப்பாகவும் வைத்திருக்கின்றாள். அரிசி பருப்பு முதலிய தினுசுகளை ஒரே விதமான டப்பிகளில் போட்டு அலமாரியில் அடுக்கி வைத்திருக்கின்றாள். சில சாமான்களை ஒரே விதமான பாணிகளிற் போட்டு அவைகளை ஒரு 'ஷெல்பின்' மீது வரிசையாக வைத்திருக்கிறாள். இவ்விடத்திலிருக்கும் கரியடுப்புகளை (கும்மட்டி) எடுத்து விட்டால் இது சமையல் அறை என்று சொல்லவே முடியாது. அவ்விடத்திய சாமான் இவ்வளவு ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. அவளுக்கு இரண்டு மூன்று வயதுடைய ஒரு சிறு பெண் இருக்கிறாள். அவளுடைய விளையாட்டுக் கருவிகள் வைக்கும் இடம் நியமித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. அவ்விடத்திலிருந்து அவள் தேவையான விளையாட்டுக் கருவிகளை எடுத்துக்கொள்ளவேண்டும், மறுபடியும் அவள் அவைகளை இருந்த இடத்திற்

கொண்டு வந்து வைக்கவேண்டும். படுக்கை அறை நல்ல வெளிச்சமுள்ளதாயிருந்தது. அதில் அதிக சாமான் அடைக்கப்படாமலிருந்தது; ஒரு கட்டில், ஒரு ஈசிச்சேர், ஒரு மூலையில் ஒரு மேஜை, சில படங்கள், சுவற்றில் ஒரு விளக்கு இவ்வளவே சாமான் அவ்விடத்தில் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே உட்புறத்திலிருக்கும் ஸ்திரீகள் உட்காரும் அறை. பெரிய பெரிய அலமாரிகள், நிலைக்கண்ணாடி முதலியவற்றை ஆளவேண்டுமென்கிற ஆசை அவளுக்கில்லை என்பதல்ல; ஆனால் இடத்தின் சௌகரியத்தைப்போல் சாமான்கள் வாங்கவேண்டுமல்லவா என்பது அவளுடைய தத்துவம். நிற்க, இத்தகைய ஒழுங்குடைய கிருகத்தில் போன பிறகு யாருடைய மனதிற்குத்தான் திருப்திகாமாயும், சந்தோஷமாயுமிருக்கமாட்டாது? இதனால் வீட்டின் ரமணீயத்துவம் வறுமை பெருமையின் பேரிலில்லை. ஆனால் நாம் அதை எவ்விதமாய் வைக்கிறோமோ அதைப் பொருத்ததாயிருக்கிறது. இவ்வளவுதான் நான் சொல்லுவேன்.

இப்பொழுது நாம் கிருகத்தின் பற்பல பாகத்தை நாடுவோம். முதலில் சமையல் அறையை எடுத்துக் கொள்வோம். இவ்விடத்தில் ஸ்திரீகளும் அவர்களுடன் சிறு குழந்தைகளும் வெகு நேரம் போக்கவேண்டியதாயிருக்கிறது. சமையல் அறையில் ஒரு முக்கியமான விஷயமென்னவென்றால், ஒரு சாக்கடை இருக்கவேண்டும் என்று ஸ்திரீகளுக்குத் தோன்றுகிறது. இவ்விடத்தில் குழாயுமிருக்கவேண்டும். இருந்தாற்றான் ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஆனந்தமுண்டாகிறது. அங்கு அடுப்புகள் அல்லது கும்மட்டிகள் இவைகளைத் தவிர சாமான்னிய ஜனங்களுடைய சௌச கூபம் இதனருகிற்றானிருக்கிறது. வெகுவாய் இதர காரியங்களுக்குத் தகுதி இல்லாத உள்தான் சயம்பாகத்திற்காக வைப்பது அநேகருடைய வழக்கமாயிருக்கிறது. ஆனால் இந்த உள்ளிற்றான் ஸ்திரீகளுடைய பாதி ஆயுளும் மக்கள் பாலியமும் கழிக்கவேண்டியதாயிருக்கிறது உள்ளின் நன்மை 'தீமையின் பரிணாமம் அவர்களுடைய சரீரத்தின் பேரில் விழுகிறது. இதைப் பற்றி வெகுவாய் ஒருவரும் கவனிப்பதுமில்லை யோசிப்பதுமில்லை. உண்மையாய்ப் பார்த்தால் சயம்பாகக் கிருகம் நல்ல ஒழுங்குள்ளதாகவும், நல்ல வெளிச்சமுள்ளதாகவுமிருந்து, நல்ல காற்றோட்டமுள்ளதாகவுமிருக்கவேண்டும். காரணம், இந்த இடத்தில் தீ எரிந்து கொண்டிருக்கிறபடியால் இவ்விடத்திய காற்று அடிக்கடி கெட்டுப்போகின்றது. தீ எரிவதனால் 'கரிமல வாயு' அதிகமாக உண்டாகிறது. அது வெளியிற்போக வழியில்லாவிட்டால் அது அடைபட்டு அதனால் சரீரத்திற்கு அபாயமுண்டாகிறது. அதைப்போலவே குடிக்கும ஜலமும் அன்னிய காரியங்களுக்காக உபயோகிக்கும் ஜலமும் இவ்விடத்திற்றான் நிரப்பி வைக்கிறார்கள்; காரணம், பம்பாயில் நாள் முழுவதும் குழாயில் தண்ணீர் இருப்பதில்லை. தண்ணீரை நிரப்பும்போதும் அதைக் காய்ச்சும்போதும் வடிக்கட்டி வழக்கப்படி சாக்கடைக்கருகில் வைத்துவிட்டால் போதும் என்றுதான் எல்லோருக்கும் தோன்றுகிறது. ஆனால் ஒரு சிறு விஷயத்தை நாம் லக்ஷ்யத்தில் வைத்துக்கொண்டால் இவ்வழக்கம் தேகத்திற்கு 'எவ்வளவு அபாயகரமாயிருக்கிறதென்பது விளங்கும். சாக்கடை ஜலம் போய் விழுமிடத்திற்கும் வீட்டிற்கும் சம்பந்தமிருக்கிறது. அதிலிருந்து அழுகிய கெட்ட காற்று எப்போதும் உள்ளே வந்துக் கொண்டிருக்கிறது. இந்த விஷ வாயுவுடன் கூடிய காற்றை ஜலம் வெகு சீக்கிரத்தில் ஆகர்ஷித்துக் கொள்ளுகிறது. எந்த வாயுவையும்

ஆகர்ஷித்துக் கொள்வது ஜலத்தின் இயற்கையான குணமாகும். இவ்வாறாக ஜலம் கெட்டிருக்கிறதென்று தெரிவது கடினம். அதனால் இவ்விஷயங்களில் எவ்வளவு கவனம் செல்லவேண்டுமோ அவ்வளவு செல்வதில்லை இத்தண்ணீர் சுவையில் அல்லது நிறத்தில் மாறுவதில்லை; சிற்சில சமயங்களில் அதிக ருசிகரமாகத்தானிருக்கின்றது. இருந்தபோதிலும் அதனால் தேகத்திற்குக் கெடுதலுண்டாகாமலிருப்பதில்லை. ஆதலால் சாக்கடை வாயண்டை தண்ணீரை நிரப்பி வைப்பது மிகவும் கெடுதலுடையதாயிருக்கிறது. வீட்டுக்காரர்களும் சாக்கடை கட்டுவதில் வேறு ஏற்பாடு செய்வது மிகவும் அவசியமாயிருக்கின்றது

இரண்டாவது பெரிதான விஷயமென்னவென்றால், சமையலறையிலிருக்கும் ஜலதாரையில் சீக்கிரம் அழுகும்படியான வஸ்துக்களைப் போடாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அசுத்தமான தண்ணீர், கஞ்சி, கழுநீர் முதலியவற்றை ஒரு பாத்திரத்திற் போட்டு வைத்துப் பிறகு அதை ஒருமிக்க வெளியிலிருக்கும் பெரிய சாக்கடையில் ஊற்றவேண்டும். இதனால் வீட்டில் நாற்றமுண்டாகாமலிருப்பதுமல்லாமல், வீட்டிற்குச் சுற்றிலும் நாற்றமுண்டாகாமலிருக்கும்: வெகு பெயர்களுக்கு வீட்டிலிருக்கும் குப்பை, அழுக்கு ஜலம் முதலியவற்றை ஜனனல் வழியாக வெளியில் எறியும் கெட்ட வழக்கமிருக்கிறது, அதனால் நாம் நமக்கு நஷ்டம் செய்து கொள்ளுகிறோம் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

ஜலத்தின் ஏற்பாடு தக்கபடி செய்து விட்டால் மட்டும் போதாது. அடுப்புக்கு மேல் [illegible]டியில் பால் தயிர் வெண்ணெய் நெய் முதலியன வைப்பது பலருடைய வழக்கம். காரணம், மிகவும் சிறிய ஜாகையில் பல வஸ்துக்களை அடக்கி வைக்கவேண்டியதாயிருக்கிறது. ஆதலால் இப்படிச் செய்யவேண்டியதாயிருப்பது உண்மைதான். ஆனால் உறியின்மேல் தினமும் ஒட்டடைபிடித்துக் கரிபடிந்து அத்துடன் தூசும் குப்பையும் படிந்து உறியிலிருக்கும் உணவுப் பொருளில் போவது அபாயகரமாயிருக்கிறது. இதைக் கவனித்தால் அடுப்பின் மேல் ஒன்றையும் வைப்பது நல்லதல்லவென்பது சகஜமாய்த் தெரியவரும். தானியவகைகளை நன்றாக மூடக்கூடிய டப்பிகளில் வைத்து, அதிலிருந்து அவைகளை எடுக்கும் பொழுது கீழே சிந்தாமல் எடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் எலிகளின் தொந்தரவு அதிகமாகிறது; அதனால் அசுசி உண்டாகிறது. இவ்வாறாக ஒவ்வொரு சிறு விஷயத்திலும் ஆரோக்கிய விஷயமான மகத்துவமிருக்கிறது. பொறுப்புடன் நாம் நமது சமையல் அறையைச் சுத்தமாக வைக்கமுயன்று, நன்றாக வேக வைத்த புஷ்டி கொடுக்கக்கூடிய அன்னாகாரம் நமது குடும்பத்திலுள்ளவர்க்குக் கிடைத்தால் வீட்டிலிருக்கும் நோய் பாதிக்குமேல் குறையும் என்பதில சந்தேகமே இல்லை சில விடங்களில் படுக்கையறை வேறாக இருக்கின்றது. ஆனால் அநேக வீடுகளில் பகலில இருக்கும் இடமும் இரவிற் படுக்கும் இடமும் ஒன்றாகவே இருக்கிறது. இத்தகைய அறையில் எல்லோரும் கவனிக்கவேண்டியது என்னவெனில் அங்கு அதிக சாமான்களை அடைத்து வைக்காமல், தினமும் பெருக்கிக் குப்பை எடுப்பதற்குச் சௌகரியப்படும்படி வைக்கவேண்டும். செத்தை, குப்பை, தூசி இவைகள் படிந்து வியாதி வெக்கை வந்தபோது வியாதி ஜந்துக்கள் படிந்து நிற்க இடந்தாமல் இவ்விடம் இருக்கவேண்டும். சுலபமாய் விலக்கி வைக்க முடியாத சாமான்கள் ஒன்றும் படுக்குமிடத்திலிருக்கலாகாது. பளுவான வஸ்துக்களை அடைத்து வைத்தால் அவைகளை தினமும் விலக்கிப் பெருக்கி சுத்தப்படுத்த முடியாது. இவ்விடத்

தில் காற்று நன்றாக ஓடிக்கொண்டிருப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது. இரவில் ஒன்பது பத்து மணிநேரம் நாம் இவ்விடத்தில் வசிக்கிறோம். அவ்விடத்தில் காற்று நன்றாக ஓடாமல் அடைபட்டிருந்தால் சரீரத்திற்கு மிகவும் அபாயமுண்டாகிறது. இதன்றி விளக்கினால் உண்டாகும் விஷக்காற்றைப் பற்றி மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அநேகருக்கு இரவில் கதவுகளை எல்லாம் மூடிவிட்டு விளக்கை அருகில் வைத்துக்கொண்டு படுக்கும் வழக்கம் இருக்கிறது. அது தேகத்திற்கு மிகவும் கெடுதல். அதனால் சிற்சில சமயங்களில் சாவுங்கூட ஏற்படுகிறது. மனிதனுக்கு நல்ல ஆரோக்கியம் உண்டாவது அவனுடைய தூக்கத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. ஆதலால் இவ்விடம் கொசு, மூட்டைப்பூச்சி முதலியனவைகளுக்கு இடந்தராததாயிருக்க வேண்டும்; அன்றியும் இதற்காகக் கொசுவலை முதலியவற்றை உபயோகிப்பது அவசியம். நெருக்கமான இடங்களிற் கொசு, மூட்டை இவைகளின் தொந்தரவும் அதிகமாயிருப்பது தெரிந்தேயிருக்கிறது. பல சமயங்களில் அழகிய பெரிய கட்டில், மெத்தை, தரையில் விரித்திருக்கும் அழகிய ரத்ன கம்பளங்கள் முதலிய வைபவங்களைப் பார்த்துப் படுத்துக்கொள்பவர்கள் பெரும் பாக்கியசாலிகளென்று நமக்குத் தோன்றுகிறது; ஆனால் அவ்விடத்தில் ரத்ன கம்பளத்தினடியிலும், கட்டிலின் சட்டங்களுக்கிடையிலும், நல்ல கடைசல் வேலை செய்திருக்குமிடங்களிலும் எவ்வளவு தூசு படிந்திருக்கிறது. இரவில் மூச்சை வெளிவிட்டு உட்கொள்ளும்போது அதேபடி மூக்கிலும் வாயிலும் செல்லுகிறது என்பதைப்பற்றி யோசித்தால் தினந்தோறும் நன்றாக உதறி விரித்த ஜமக்காளம் மேல் என்று தோன்றுகிறது. வெகுவாய் எல்லோருக்கும் விலையுயர்ந்த சாமான்களால் நிறைந்த பெட்டிகளைக் கட்டிலுக்கடியில் வைக்கும் வழக்கமிருக்கிறது. இதற்குக் காரணம் திருடர் வந்து திரும்பும்பொழுது தமக்கு சீக்கிரம் விழிப்புண்டாக வேண்டுமென்பதுதான்; இந்த வெளித் திருடர்களைவிட இத்தகைய விஷயத்தால் நமது ஆரோக்கியத்தை மெல்லக் கொள்ளைகொண்டு போகும் திருடர்கள் நம்மை அறியாமல் நம் சரீரத்தில் புகுகின்றனர். ஆகையால் அவர்களைப் பற்றி மெத்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

இஷ்டமித்திரர், இதர விருந்தினர் முதலியவர்கள் வந்தால் ஆதரணை செய்யும் பொருட்டுச் சிலவீடுகளில் டிராயிங்ரூம் என்று தனிமையாக ஒரு அறை வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வறையை இல்லாள் அல்லது கிருஹிணி தன் ஆசையின்படி பற்பல அழகியவஸ்துக்கள், புகைப் படங்கள், சித்திரப் படங்கள் முதலியவைகளால் அலங்கரிக்கிறாள்; ஆனால் அதனால் அங்கு பாய், ஜமக்காளம், ரத்னகம்பளம், நாற்காலிகள், மேஜைகள், சோபா, கிராமோபோன், ஹார்மோனியம் அல்லது பியானோ இவைகளைப் போன்ற சாமான்களால் மிகவும் நெருக்கமுண்டாய் அங்கு அசுத்தத்தை விலைக்கு வாங்கினாற் போலாகிறது. இத்தகைய அறைகள் கண்களுக்கு இனிமையாகக் காணப்படுகின்றன. ஆனால் அங்கு தூசுபடிந்து சரீரத்திற்கு அபாயமுண்டாகும் ஹேதுவுண்டு.

நகரத்தில் அல்லது பட்டணத்தில் வசிக்கும் ஜனங்கள் இவைகளைப் பற்றி யோசிப்பது மிகவும் அவசியம். எவ்வளவு கவலை எடுத்துக் கொண்டபோதிலும், இரவும் பகலும் வண்டி, குதிரை, மோட்டார், டிராம் இவைகள் போய்க் கொண்டிருக்கிறபடியாலும், எந்திர சாலை அச்சாபீசுகள் முதலியவைகளால் நகரத்தில் வசிப்பவர்களுடைய வீடுகள் அசுத்தமாயிருந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் இன்னும் அழகு, அலங்காரம், நேர்த்தி இவை களின் பெயரைச் சொல்லிப் பல வஸ்துக்களை அடைத்து வைத்தால் கேட்கவே வேண்டாம். வீட்டை முற்றிலும் சூனியமாக வையுங்கள் என்று நான் சொல்வதில்லை. ஆனால் அடக்கமான சாமான்களால் அதை அலங்கரியுங்கள்; ஆரோக்கியத்திற்குத் தேவையான பரிசுத்தம் முதலிலும், பிறகு சோபையும் அலங்காரமும். இதை எப்பொழுதும் கவனத்தில் வையுங்கள் என்பதே.

(மனோரஞ்சன் சஞ்சிகையில் டாக்டர்' குமாரி காசிபாய் நவாங்கரே, பி.ஏ., எல். எம். எஸ்., அவர்களால் எழுதப்பட்ட வியாசத்தின் மொழி பெயர்ப்பு.)

பர்வத குமாரி.

மூன்றாம் பாகம்.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா)

(611-ம் பக்கத் தொடர்ச்சி.)

முதல் அத்தியாயம்.

கல்கத்தாவில் பிரதிமை:

கல்கத்தாவின் ஒரு நேர்த்தியான பகுதியில் மிகப் பெரிதும் மிகச் சிறிதுமல்லாத ஓர் இரண்டடுக்கு மாடி வீடு இருக்கிறது. இந்த வீட்டில் தான் சுசீல குமாரன் தன் தங்கை பிரதிமையுடன் வாசமாயிருக்கிறான். இவ்வீடு அவர்கள் தகப்பனார் நவகுமாரபாபுவின் காலத்தில் கட்டப்பட்டது. அவர் கல்கத்தாவுக்கு வரும்பொழுது அதிலேயே தங்குவது வழக்கம். சூரியாஸ்தமனத்துக்குமுன் காயும் மஞ்சள் வெயில் படுவதனால் இந்த வீட்டின் ஓர் அறை அதிக ஒளியுடன் கூடியிருக்கிறது. அவ்வறையில் ஒரு பெரிய இரத்தினகம்பளம் விரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் தேக்குமரத்தாற் செய்த ஓர் அழகிய மேஜையும் அதற்கு இருபுறத்திலும் இரண்டு நாற்காலிகளும் போடப்பட்டிருக்கின்றன. மேஜையின்மேல் ஒரு கண்ணாடி மைக்கூடும் மூன்று நான்கு பேனாக்களும் பென்ஸில்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. மேஜையின் ஒரு புறத்தில் அத்துடன் இணைக்கப்பட்ட ஒரு சிறிய நேர்த்தியான அலமாரியில் பற்பல ஆங்கில, ஸம்ஸ்கிருத, பங்காளி பாஷைப் புஸ்தகங்கள் ஒழுங்காய் வைக்கப்பட்டிருக்கின்றன. அறையின் நான்கு மூலைகளிலும் நான்கு கண்ணாடி பீரோக்கள் விளங்குகின்றன. அவற்றின் சில தட்டுக்களில் யானைத் தந்தங்களினால் அழகாய்ச் செய்யப்பட்ட நல்ல வேலைப்பாடமைந்த சிறியவையும் பெரியவையுமான நானாவித விக்கிரகங்களும், சிலவற்றில் சலவைக் கல்லாலாகிய விதம்விதமான பதுமைகளும், சிலவற்றில் பீங்கானால் பண்ணிய உள்ளங்கவரும் விளையாட்டுப் பொருள்களும், எல்லாவற்றுக்கும் மேலான தட்டுக்களில் வனப்புவாய்ந்த பளிங்கு சித்திரகும்பங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கும்பங்களிலே அன்றலர்ந்த ரோஜா, அல்லி, மல்லிகை முதலிய பூங்கொத்துக்கள் சொருகிவைக்கப் பட்டிருக்கின்றன. எதிர்க்கெதிரேயுள்ள இரண்டு சுவர்களில் இரண்டு தைல சித்திரப்படங்கள் தொங்குகின்றன. ஒன்று பிரதிமையின் பிதாவினது; மற்றது அவளுடைய மாதாவினது. மற்றிரண்டு சுவர்களுக்கும் இடையே இரண்டு பெரிய புகைப்படங்கள் தொங்குகின்றன. ஒன்று பிரதிமையின் தமையன் சுசீல குமார

னுடையது. மற்றது இராஜகுமாரன் பூபேந்திரநாதனுடையது. பூபேந்திரநாதன் படத்தின் இருமருங்கிலும் பிரதிமையின் கையால் இயற்றப்பட்ட இரண்டு அழகிய சித்திரத் தையற்படங்கள் தொங்குகின்றன. அவற்றின் சட்டங்களில் மிகநேர்த்தியான பூவேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு தையற்படத்தில் தேவநாகர அக்ஷரங்களில் 'ஸாவித்திரி' விஷயமான ஒரு பதினாலடிச் செய்யுள் வரையப்பட்டிருக்கிறது; மற்றொரு படத்தில் இரண்டு மான் குட்டிகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. சித்திரங்களின் அடியில் "ரவியும் சசியும்" என்று எழுதப்பட்டிருக்கிறது. சுசீல குமாரனது சித்திரத்தின் இரு பக்கங்களிலுங்கூட அழகிய இலை, பூ, கனிகள் தீட்டப்பெற்ற இரண்டு தையற்படங்கள் சுவர்களின் வனப்பை மிகைப்படுத்துகின்றன. ஒரு படத்தின் அடியில் "युवैव धर्मशीलःस्यात्" என்றும், மற்றொன்றின் அடியில் "उत्थातव्यं जागृतव्यं योक्तव्यं भूति कर्मसु" என்றும் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வாக்கியங்களின் பொருள் முறையே — "இளமையிலேயே அறவொழுக்கத்திற் பயிலவேண்டும்" என்றும், "எழுக, விழிக்க, நல்வினை புரிக" என்றுமாம். தாய் தந்தையரின் தைலசித்திரங்களின் இருபாரிசத்திலும் அழகிய இயற்கைக் காட்சிகளின் சிறியவை சிறியவைகளான நான்கு சித்திரப் படங்கள் தொங்குகின்றன.

இந்த அறையின் ஒரு வாயிற்படி தென்புறமாகவும் மற்றொன்று கீழ்ப்புறமாகவும் இருக்கின்றன. தென்னண்டை கீழண்டை ஆகிய இருபுறங்களிலும் இரண்டு தாழ்வாரங்கள் இருக்கின்றன. அந்த அறைக்குச் சேர்ந்தாற்போல் மேலண்டைப் பக்கத்திலும் ஓர் அறை இருக்கிறது. அதைப் பிரதிமை படுக்கையறையாக உபயோகிக்கிறாள். இவ்விரண்டு அறைக்கும் இடையிலும் ஒரு வாயிற்படி உண்டு. மேலண்டை அறைக்கெதிரே இராஜபாட்டை காணப்படுகிறது.

பிரதிமைக்குள்ள இந்த இரண்டு அறைகளைப்போலவே, அவற்றுக்கு நேர் வடவண்டைப் பக்கத்தில் சுசீலகுமாரனுக்கும் இரண்டு அறைகள் உண்டு. அவற்றுள் ஒன்றை சுசீல குமாரன் எழுதப்படிக்கவும் மற்றவேலைகள் செய்யவும், மற்றொன்றைப் படுக்கவும் உபயோகித்து வருகிறான். இவ்விரு அறைகள் கூட சுசீல குமாரனுடைய சுவைக்கேற்றபடி மிக நேர்த்தியாய் ஜோடிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வறைகளின் கீழ்ப் புறத்தும் வட புறத்தும் தாழ்வாரங்கள் இருக்கின்றன. இத்தாழ்வாரங்களுக்கப்பால் இருபுறமும் திறந்த வெளியாயிருக்கின்றன. வெளியின் முன் பக்கத்தில் பல பூந்தொட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் விதம் விதமான பூஞ்செடிகள் சோபித்துக் கொண்டிருக்கின்றன. பிரதிமை தினந்தோறும் தன் கைகளால் நீர் வார்த்து இச்செடிகளைக்காத்து வளர்த்து வருகிறாள். வீட்டின் கீழ்த்தளத்திலிருந்து மேல் மாடிக்கு வரவேண்டுமானால் முதலில் சுசீல குமாரனது படியறையின் வழியாகவே வரவேண்டும்.

பிரதிமையின் அறைகளின் தென்புறம் உள்ள திறந்தவெளியிலிருந்து கீழே இறங்கிச் செல்வதற்குப் படிகள் இருக்கின்றன. கீழ்த்தளத்தில் சமையலறை, சமையற் பண்ட பாத்திரம் முதலியன வைக்கும் அறை, வேலைக்காரரின் விடுதி முதலியவை இருக்கின்றன. சுசீல குமாரனது படுக்கையறைக்குக் கீழே 'பைடக்கானா' என்னும் கோட்டியறையும், பிரதான வாயிற்படியின் இடது புறத்திலும் வடவண்டை திறந்தவெளிக்குக் கீழேயும் ஒரு நன்றாய் ஜோடிக்கப்பட்ட அறையும் இருக்கின்றன.

வாசக சகோதர சகோதரிகள் குமாரி பர்வதத்து பங்களாவில் ஏற்கனவே பார்த்திருக்கிற இரண்டு வேலைக்காரர்களே சுசீல குமாரனிடம் இப்பொழுதும் இருக்கிறார்கள். ஒருத்தி செவிலித்தாய், மற்றவன் இராமசந்திரன். செவிலித்தாய் இராத்திரியில் பிரதிமையின் அறையில் படுத்துக்கொள்ளுகிறாள். வாஸ்தவத்தில் செவிலித்தாயே வீட்டுக்கு ஒரு விதமாக எஜமானியாயிருக்கிறாள். அவளுடைய முயற்சியால் இந்த வீடு எப்போதும் சுத்தமாயும் நேர்த்தியாயும் இருக்கும். வீட்டின் சகல வஸ்துக்களும் அதனதன் இடத்தில் ஒழுங்காய் வைக்கப்பட்டிருக்கும். பிரதிமைக்கு வீட்டு வேலையில் அவளே முக்கியமாய்ச் சகாயம் புரிந்து வருபவள். அவளைத் தவிர பிரதிமைக்கு இன்னொரு சிநேகிதையும் உண்டு. அவள் பெயர் நிருபமா. நிருபமையைப்பற்றிய விவரம் மேல் அத்தியாயத்தில் கூறப்படும்.

பிரதிமைக்கு சமையலுக்காக யாதொரு வேலைக்காரனாவது வேலைக்காரியாவது வைத்துக்கொள்ள இஷ்டமில்லை. தினந்தோறும் தன் கையால் சமையல் செய்து தன் தமையனுக்குப் பரிமாறி உண்பிப்பது தன் கடமையென்று அவள் கருதுகிறாள். தமையனைத் தானே உண்பித்து உகப்பித்தாலன்றி அவளுக்குத் திருப்தி உண்டாவதில்லை. தினந்தோறும் [illegible]யமானதும் அவள் தமையன் பொருட்டுத் [illegible]ன் கையால் தேநீரும் தின்பண்டமும் தயார் [illegible]ய்வள், நடுப்பகலுக்குச் சமையல் செய்வள், [illegible]யங்காலம் இலகுவான நல்லுணவு சமைப்பள். வீட்டு வேலைகளைச் செய்வதில் அவளுக்கு மிக்க உற்சாகம். இதிலிருந்து அவளுக்கு ஒருவகை மனமகிழ்ச்சியும் உண்டாகிறது. எப்பொழுதாவது சுசீல குமாரன் சமையற்காரனையாவது சமையற்காரியையாவது வைத்துக் கொள்ளும் பேச்செடுத்தால் அவளுக்கு எங்குமில்லாத ஆத்திரம் வந்துவிடும்.

பொழுது விடிவதற்கு முன்னமே பிரதிமை படுக்கையை விட்டெழுந்து ஸ்நானம் செய்வாள்; பிறகு தமையனுக்குத் தேநீரும் சிற்றுண்டியும் தயார் செய்வாள். அதன் பிறகு செவிலித்தாய் சமையலுக்கு வேண்டிய பதார்த்தங்களைச் சித்தம் செய்து கொண்டிருக்கையில் அவள் ராமாயணமோ கீதையோ பாராயணம் செய்வாள். சமையலுக்குவேண்டியதெல்லாம் ஆயத்தமானவுடனே அவள் சமையலறைக்குச் சென்று சமைப்பாள். சுசீல குமாரனுக்கு எந்த எந்தப் பதார்த்தங்கள் பிடிக்குமோ அவைகளை அதிக ஜாக்கிரதையாயும் திறமையாயும் பக்குவஞ் செய்வாள். பத்து மணிக்கு முந்தியே சுசீல குமாரன் போஜனம் செய்துவிட்டு அலுவலின்பேரில் வெளியிற் போய்விடுவான். அதன் பிறகு அவள் செவிலித்தாய்க்கும் ராமசந்திரனுக்கும் சாதம் போட்டுவிட்டுக் கடைசியாகத் தான் சாப்பிடுவாள். எல்லாருக்கும் பிறகு அவள் சாப்பிடுவதைப்பற்றி செவிலித்தாயும் ராமசந்திரனும் அதிகமாய் ஆக்ஷேபித்து சண்டை பிடிப்பார்கள்; ஆனால் அவள் இவ்விஷயத்தில் அவர்கள் சொல்வதொன்றையும் கேட்கமாட்டாள்; அவர்களையே முதலில் சாப்பிடச் செய்வாள்.

போஜனம் முடிந்தபிறகு பிரதிமை எழுதிப் படிக்கும் அறைக்குச் சென்று சிற்பவேலையில் சித்தத்தைச் செலுத்துவாள். அவள் மேஜோடும் கழுத்துப்பட்டையும் பின்னுவதோடு கார்ப்பெட்டுகளில் பலவகைப் பூக்களும் பசு பக்ஷிகளின் சித்திரங்களும் போடுவாள். அண்டை அயலாரின் குழந்தைகளுக்கு அவள்

கோட்டு, ஷர்ட்டு, நிஜார் முதலியவைகளும் தைத்துக் கொடுப்பாள். இதனால் அப்பிள்ளைகளும் அவர்களின் தாய்தந்தையர்களும் பிரதிபையினிடம் மிகுந்த பட்சம் பாராட்டுவார்கள்.

சுசீல குமாரன் வீட்டிலில்லாத நடுப்பகல் வேளைக்கு அயல்வீட்டுப் பெண்டுகள் அடிக்கடி பிரதிபையிடம் வருவதுண்டு.

அநேகம் சிறு பிராயத்துப் பெண்களும் அவளுக்கு ஈடான யுவதிகளும் அவளிடம் தையல் பின்னல் முதலியவை கற்றுக்கொள்வர்; பல மாதர்கள் பிரதிபையின் பரிசுத்தமான சகவாசத்தின் பரமானந்தத்தை அனுபவிக்கும் பொருட்டே வருவார்கள். பிரதிபை அவர்களெல்லோரையும் தன் விநய சீலத்தாலும் இனிய வார்த்தைகளாலும் சந்தோஷப்படுத்துவாள். அவள் அவர்களெல்லோரையும் எப்படிக் காதலிக்கிறாளோ, அப்படியே அவர்களனைவரும் அவளிடம் நேசம் பாராட்டி வருகிறார்கள்.

மாலை வேளையில் பிரதிபை தன் பிரிய சகியாகிய நிருபமையோடு புஷ்பச் செடிகளுக்கு நீர் வார்த்துவிட்டு, சமையலறைக்குள் போய் சமையல் செய்வாள். சந்தியா காலமானதும் சந்தோஷ சித்தத்துடன் எல்லோரையும் உண்பித்து விட்டுப் பிறகு தான் உண்பாள். ஊண் கழிந்ததும் அவள் தன் அறைக்குச் சென்று சற்றுநேரம் தம்பூர் மீட்டி வீணை வாசிப்பாள். அப்புறம் இரவு பத்து மணிவரைக்கும் ஏதாவது புஸ்தகம் படிப்பாள்; அநந்தரம் செவிலித்தாயோடு தன் பள்ளியறைக்குப் போய்ப் படுத்துக்கொள்வாள்.

கல்கத்தாவில் பிரதிபை பெரும்பாலும் இப்படியே காலங் கழித்து வருகிறாள். இடைக்கிடையே அவள் சுசீல குமாரனுடன் அலிப்பூரிலுள்ள மிருகாசயத்திற்கோ விசித்திரக் காட்சிசாலைக்கோ வேடிக்கை பார்க்கப் போவதும் உண்டு; சில சமயம் சிவபுரத்திலுள்ள பூங்காவனத்து நானாவித விருக்ஷங்களைக்கண்டு ஆனந்தக் களிப்படைவாள். இதையன்றி எப்போதாகிலும் சமயம் வாய்க்கும்போது அவள் ஸரஸ்வதி பாடசாலையை ஸ்தாபித்த ஸரஸ்வதி மாதாஜியினிடம் சென்று அவ்வம்மையாரின் தூய்மைகொண்ட உபதேசங்களை சிரவணம் செய்து புளகாங்கித மடைவாள்.

அண்டை யயலிலுள்ள மாதர்களுள் மநோரமை என்பவள் பிரதிபைக்கு ஈடாயிருப்பவள். மநோரமையின் வீடும் பிரதிமையின் வீட்டுக்கு அடுத்திருந்தது; இரண்டு வீடுகளுக்கு மிடையே போக்குவரவுக்கு ஒரு வாயிலுமுண்டு. ஆகவே மநோரமையும் பிரதிபையும் ஆகிய இருவரும் அவகாசம் வாய்க்கும் போதெல்லாம் ஒருவர்வீட்டுக்கு ஒருவர் வந்து போவதுண்டு. மநோரமை ஒரு பட்டிக்காட்டில் வாழ்க்கைப்பட்டிருந்தபோதிலும், அவளுடைய புருஷன் கல்கத்தாவில் படித்துக் கொண்டிருந்தபடியால் அவள் எப்போதும் பிறந்தகத்திலேயே இருந்துவருகிறாள். புருஷன் காலேஜைச் சேர்ந்த ஹாஸ்டலில் இருந்துகொண்டு ஒவ்வொரு சமயம் தன மாமனாரகத்துக்கு வந்து போவதுண்டு. மநோரமையின் புருஷன் பூபேந்திரநாதனுடைய மித்திரனாகிய அந்த நரேசசந்திரனே. அவனை ஏற்கனவே நம் வாசகர்களாகிய சகோதர சகோதரிகளுக்குத் தெரியும். மநோரமையின் வாயிலாகவே நரேசந்திரன் பிரதிபையின் தெய்வத்தன்மைபொருந்திய ஒழுக்கத்தை அறியலானான். நிருபமை மநோரமையின் தங்கை. அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை.

(தொடரும்.)

ஓர் புதிய உணர்ச்சி.

(ஸ்ரீமதி S. ரங்கநாயகி அம்மாள்)

சகோதர சகோதரிகளே!

இவ்வுலக முழுதும் புகழ்பெற்ற நமது பாரத நாடாகிய இவ்விந்தியா சேர்த்தியிலும், பேரிலும், புகழிலும், பக்தியிலும், சக்தியிலும், ஞானத்திலும் மிகவும் செழிப்புற்றதே. இதில் வசிக்கும் சகலஜீவராசியிலும் மானிடராய்ப் பிறந்த நமது பாக்கியமே பாக்கியம். இந்த பாக்கியத்தை இழந்து போகாவண்ணம் லோகமாதாவானவள் நமக்கு அநேகவித புத்திகளையும் அதற்குத்தக்க அறிவுகளையும் இன்னும் அநேகவித உணர்ச்சிகளையும் அருள் செய்து இருக்கிறாள். ஆனால், ஐயோ! பரிதாபம்! நினைக்கும்போதும் மனதில் குழப்பமும் துக்கமும் உண்டாகின்றன. ஒரு நாயை அழைத்து அதன் முன்னிலையில் முழுத் தேங்காயை வைத்தால் அது என்ன செய்யும்? அதன் உள்ளிருக்கும் இன்பமான ஆகாரத்தை அது எப்படி அறிய முடியும்? மிக்க ஆவலுடன் அதைப் பல தடவை கீழும் மேலும் உருட்டியும் முடிவில் அதைத் தின்னமுடியாது தனக்கு இல்லையே என்ற பொறாமையாலும் செல்லவேண்டி இருக்கும்பொழுது வேறு நாய் வந்து அதைத் தொட, இச்சுணங்கள் மிக்க ஆக்கிரகம் கொண்டு அத்துடன் சண்டையிட, இச்சந்தடியில் அநேக நாய்கள் சேர்ந்து போர்செய்தும் ஒரு நாயேனும் அத்தேங்காயை கண்ணெடுத்தும் பாராவண்ணம் காயப்பட்டதும் மனம் நொந்தவையுமாகக் கோபம், பொறாமை இவைகளுடன் போரிடுகின்றன. அதுபோல மனிதர்கள் அறிவு, புத்தி, வித்தை, ஞானம், அன்பு, பக்தி எல்லாவற்றிலும் அரிதாகிய பொறுமை இல்லா

விட்டால் சகல சத்குணங்களையு மிழந்து நாயைப்போல் பொறாமையையும் ஒருவரைக் கண்டால் மற்றொருவருக்கு அசூயையையும் இன்னும் இவைபோன்ற அநேகவித துர்க்குணங்களையும் அடைகிறார்கள். அந்தோ! இது எவ்வளவு கேவலமாய் இருக்கின்றது. பரமாத்மாவாகிய கடவுள் நமக்கு என்றும் பசியாத உணவாகிய ஞானம், பக்தி, இன்னும் பலவித ஆகாரம் போன்ற அநேக நற் கருமங்களையும் அளித்திருக்க அவைகளைத் தக்கவாறு உண்டு தமது ஆராப பசியை மாற்றிக்கொள்ளாமல் தவிக்கின்றார்கள். ஞானத்தை யிழந்து நாயினும் கடையவராய்த் திரிகிறார்கள். இவர்கள் மனிதராய்ப் பிறவாமல் மிருகமாகவே பிறந்தால சாலவும் நன்று. இவ்வளவுக்கும் காரணமாவது வித்தையைத் தக்கபடி அவர்கள் இளம் வயதில் கற்றுக்கொள்ளாத தோஷமே. வித்தை யிருந்தால் எத்தாலும நன்மை அடைவார்கள். வேதங்களும் அதையே முறையிடுகின்றன.

विद्या नाम नरस्य रूपमधिकं प्रच्छन्न गुप्तं धनं ।
विद्या भोगकरी यश स्सुखकरी विद्या गुरुणां गुरुः ॥
विद्या बंधुजनो विदेश गमने विद्या परा देवता ।
विद्या राज सुपूजिता नहि धनं विद्या विहीनः पशुः ॥

என்னும் சுலோகத்தின் கருத்தை அறிந்தால் அவர்கள் மனது உடனே அதை அடைய விரும்பும். அதாவது வித்தையுள்ளவர்கள் ரூபத்திலும் தனத்திலும் போகத்திலும சுகமாக இருப்பதுடன் அவர்களே தேவதைகளாக விளங்குவார்கள். இராஜனால் பூஜிக்கப்படுகிறார்கள். அன்னிய தேசம சென்றால் அங்கும அவர்களுக்குச் சிறப்பும் சிநேகமும கிடைக்கின்றன. அதை இழந்தவன் பசுவிற்கு சமமாய் விடுவான. ஆகையால், சகோதர சகோதரிகளே! நாம் கையில விளக்கை வைத்துக்கொண்டு பாழுங் கிணற்றில் விழுவதுபோல் ஞான ஜோதியாகிய விளக்கை வைத்துக்கொண்டு பாழ் நரகத்தில் மூழ்கினால் தேவர்களும் நம்மைக் கண்டு ஏளனம் செய்வார்கள். நமது முனிச்சிரேஷ்டர்கள் தமது தர்ம பத்தினிகளுடனும் தங்கள் இனத்தாருடனும் வனங்களில் ஆகாயமளாவிய மரங்களுக்கிடையில், உத்தம நதி தீரத்திலும் வெண் நிலாவிலும் சந்தோஷமே உருவாய் அமைந்தாப்போல் சர்வ காலமும் ஸ்ரீபரமாத்மாவின் திவ்விய நாமங்களை உச்சரித்துக்கொண்டும் அங்கு கிடைக்கும் பழங்கள் காய்கள் வேர் இலை முதலியவற்றை உண்டும் பா உரிகளைத் தரித்தும் வாசனை மிக்க அநேக புஷ்ப வனங்களுக்கிடையே தங்கள் ஆச்சிரமத்தை அமைத்துக்கொண்டும் சதா காலமும் வேத கோஷ்டத்துடனும் பஜனைகளுடனும் கவலையில்லாமல் வாழ்வதைக் கண்டு தேவரும் இவர்கள் இவ்வாழ்வைக் கண்டு ஆசை கொள்கிறார்கள் என்றால். நமக்கு எப்படி இருக்கும். ஆனால் நமது அநேக சகோதர சகோதரிகள் இதைத் துச்சமாக எண்ணுகிறார்கள. காரணம, அவர் புத்தியை சத் விஷயங்களில் கொண்டு வாராததே. இவர்கள் எல்லாம் நமது சிந்தாமணியை வாங்கி அதில் இருக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் படித்து ஆராய்ச்சி செய்தால் அவர்கள் உடனே குரு உபதேசம் அடைந்தாப்போல் ஆய்விடுவார்கள் என்பது நிச்சயமாய் விளங்கும். நிற்க, நமது காந்தி அடிகள் முன்னுக்குவந்து நமது இந்தியாவின் பொருட்டு 'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் பிறர் சொற் செவி கொடார் கருமமே கண்ணுயினார்' என்னும் முதாட்டியின் வாக்கின்படி தமமை இகழ்ந்து பேசினும் புகழ்ந்து பேசினும் காரியத்திலேயே ஊக்கமுடையவரா இருக்கிறார். சுமார் சில வருஷங்களுக்கு முக நமது இந்தியா இருந்த நிலையைக் கண்டு இவ்வளவு முயற்சி அவர் எடுத்துக்கொள்ளாவிட்டால் நாம் இப்பொழுது அடைந்திருக்கும்

பெண்களின் சுதந்திரமும் கல்வியும் ஞானமும் பெற்று இருக்க முடியாது என்பது எனது அபிப்பிராயம். அப்பொழுது சில வருஷங்களுக்குமுன் இந்தியாவில், அதிலும் தென்னிந்தியாவில், ஸ்திரீ புருஷர்கள் இருந்துவந்த நிலைமையை எழுதி முடியாது. இப்பொழுது எல்லாரும் ஞானம் அடைந்து உத்தமர்களாகவே இருக்கிறார்கள்.

'கல்வியில் உன்னைவிட மேல்பட்டவரையும் செல்வத்தில் உன்னைவிடத் தாழ்ந்தவரையும் கொண்டு நட' என்னும் முதுமொழிக் கொப்ப நாம் இன்னும் விருத்தியடையவும் உலகத்தை அறியவும் அதைச்சிருஷ்டித்த கடவுளைக் காணவும் முயற்சி செய்யவேண்டும். எனதரிய சகோதரிகளே, நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து முயற்சியுடன் இவ்வரிய காரியத்தை முன்னுக்குக் கொண்டு வந்தால் நாமே பாக்கியவதிகளாவோம். நாம் மனிதஜன்மம் எடுத்ததற்கு அடையாளமாகும்; கருணைக் கடலாகிய தேவரும் நம்மைக் கண்டு சந்தோஷப்படுவார். ஆனது பற்றி நாம் வித்தையைக் கற்றுக்கொண்டு அதன் மூலமாய்ப் பூர்வ ஞானத்தையும் பக்தி மார்க்கத்தையும் அடைந்தால் நாம் சீக்கிரம் பாபத்தை அணுகாது புண்ணியத்தை அடைவோம். இதுவே 'கடவுளுக்கும் இன்பத்தை தரத்தக்கது. நமது ஆத்மாவைப் பரிசுத்தப்படுத்தவேண்டும் என்று உறுதியாய் நாம் எண்ணினால் அதுவே சகல சன்மார்க்கங்களையும் நமக்குக் காட்டும். மேலும் நாம் உலக விஷயத்தை அறிய வேண்டும் என்றால் மாதப் பத்திரிகைகளையும் வாரம் தினசரி பத்திரிகைகளையும் வாங்கி அதின் விஷயங்களைக் கவனமாய் வாசிக்கவேண்டு மல்லாமல் பெருமையின பொருட்டு வாங்கி அதில் வரும் கதைகளை மாத்திரம் வாசிப்பதில் பிரயோஜனம் இல்லை அதில் வரும் சத்போதனைகளை எல்லாம் பழக்கத்தில் கொண்டு வந்தால் நன்மார்க்கத்தை அடையலாம். இதுவே நாம் முன்னுக்கு வரவழி காட்டும். நாளடைவில் கீர்த்தியும் புகழும் கிடைக்கும்.

கல்கத்தாவில் மிக்க பெயர் பெற்றவரும், செலவத்தில் சிறந்தவரும், அரசாங்கத்தாரால் அநேக பட்டங்களும் வெகுமானமும் பெற்றவரும், இங்கிலாந்து சென்று அங்கு உயர்ந்த சட்டப் பரீக்ஷைகளில எல்லாம் தேறியவரும், கலகத்தாவிலேயே (Bar.-at-law) என்று சொல்லும் உயர்ந்த நியாயவாதியாய் இருந்தும், மகாத்மாவைப்போல் தேச சேவையைக்கொண்டு மேற் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் கைவிட்டு உத்தியோகத்தையும் துறந்து தமது கோடிக்கணக்கானசெல்வத்தையெல்லாம் ஏழைகளுக்கும தேச நன்மைக்கும இன்னும் அநேக நற் காரியங்களுக்கும் கொடுத்துவிட்டு தேசபந்து என்னும் அழியாத பெயரை நிலை நிறுத்திக்கொண்டவரும் ஆகிய நமது ஸ்ரீமான் சித்தரஞ்சன் தாஸ் என்பவர் சென்ற ஜூன் மாதத்தில் (Darjeeliug) டார்ஜிலிங் என்னும் ஊரில் தேக வியோகமானார். ஆஹா! கலகத்தா என்ன துக்க பூமியாக மாறிவிட்டது! எங்கு பார்த்தாலும் துக்கம். எங்குபார்த்தாலும அழுகை. தோட்டி முதல் தொண்டமான் வரை விசனிக்காதவர்கள் இல்லை. அந்தோ! பணக்காரரைவிடப் பிச்சைக்காரரின் துக்கமதான் சகிக்க முடியாததாய் இருந்தது. இனி இவரைப்போல் தர்மிஷ்டரை எப்பொழுது அடையப்போகிறோம் என்று ஏங்கினார்கள். அன்றைய தினம் கல்கத்தாவில ஒரு கடையாவது திறக்கவே இல்லை. வீதியில் பட்டாணிக் கடலை விற்பவன் கூட ஒரு பைசா என்று சொல்லும் மதராஸ் கால அணுவுக்குக்கூட அவன் வியாபாரம் செய்யவில்லை. மேலே உயர்த்தியிருந்த கொடிகள் எல்லாம் தாழ்த்தப்பட்

டன. ஸ்ரீமான் C. R. தாஸ் அவர்களுடைய பிரேதத்தைக் கல்கத்தா கொண்டுவரும் பொருட்டு டார்ஜிலிங் என்னும் ஊரைக் தனி ரயில் வண்டி (Special) விடப்பட்டது. அன்றைய தினம் ரயில் அடியில் (Railway-station) பதினாயிரம் ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தார்கள். அவர் பிரேதத்தை கல்கத்தாவில பெரிய வீதிகளில் எல்லாம் ஊர்வலம் கொண்டு வந்தார்கள். மகாத்மா அவர்களும் பல்லாக்கைத் தூக்கினார். அன்றைய தினம் சவத்தின்மேல் விழுந்த புஷ்பங்களுக்குக் கணக்கே இலலை. அவர்கள சென்ற வீதிகளில் புஷ்பத்தால பாய்விரித்ததுபோல இருந்தது. பெரிய பட்டணமாகிய கல்கத்தாவில் ஒவ்வொரு வீடுகளும ஆறு ஏழு உபபரிகையாய்க கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வித வீடுகளின முனபக்கம் எல்லாம தாஸ் அவர்களைக் காணும் பொருட்டு ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். எள்ளுப் போட்டாலும கீழே விழாது என்றால் வீதியின் கூட்டம் எவ்வளவு இருக்கும்! அதில் கால் பாகம் இங்கிலீஷ்காரர்களும் இருந்தார்கள். இவ்வளவு வைபவத்துடன் ஸ்மசானத்திற்குக் கொண்டு வரப்பட்டதும் துக்கத்தை ஒருவாறு போக்கி மனமகொஞசம் தேர்ந்ததும் சவத்தைச் சந்தனக் கட்டைகளில் வைத்து டினகளில் இருந்த நெய்யைவிட்டு அவருடைய ஏக புத்திரன் கிரமம் தவறாமல் உத்தரகிரியையை நடத்த, தகனம்செய்யப்பட்டது. ஆனால் ஜனங்கள் பிரேதத்தை விடவில்லை. பிறகு மகாத்மா காந்தி அவர்கள் ஜனங்களை கேட்டுக்கொண்டு அவர்களுக்கு 'நீங்கள் இப்படிச்செய்தால் உபகாரமாகாது. பிரதி ஒருவனும் அவரைபபோல தேசத்தின் பொருட்டு உழைக்கவேண்டும' என்றும் இனனும பலவித ஊக்கத்தையும் உற்சாகத்தையும தாரதக்க வார்த்தைகளைச் சொல்ல பிறகு தான சவம தகனம்செய்யப்பட்டது. இப்பொழுது C. R. தாஸ் ஞாபகச் சங்கம் என்று ஒரு பண்டு ஏற்படுத்தி அதில் தற்சமயம் லக்ஷக்கணக்காய்ப் பணம்சேர்ந்திருக்கிறது. அதை வைத்தியசாலையும், கலாசாலையும், ஏழைகளுக்கு அன்னம் அளிப்பது இவை போன்ற தர்மங்களில் செலவிட போகிறார்கள். இதற்கு ஸ்ரீமான் C. R. தாஸ் அவர்களுடைய வீட்டையே எடுத்துக்கொண்டு அவர் ஞாபகார்த்தமாய் என்றும் நடத்துவார்கள். அவர் பத்தினி ஸ்ரீமதி வசந்திதேவிஜி என்பவர் தமது கணவர்கொண்ட காரியத்தையே மேற்கொண்டு இன்னும் நன்மைகளையும் கல்வி விருத்தியையும் செய்யச் சித்தம் கொண்டுள்ளார். ஸ்ரீமான C. R. தாஸ் அவர்கள சரித்திரத்தைப் பெங்காலியில் எழுதியிருக்கிறார்கள். அது நமது தமிழில சீக்கிரம் மொழிபெயர்க்கப்படும் என்று நினைக்கிறேன். ஆனால், ஒரு சமாசாரம். நமது தேசபந்து C R. தாஸ் அவர்களுக்கு அன்னிய நாட்டில் இருந்து கப்பலில் வண்ணான் சலவை செய்த உடுப்புகள் தினம் தப்பாமல் வரும் என்றால் அவர் எவ்வளவு நாகரிகமான ஸ்திதியில் இருந்தார் என்பது தெரிய வருகிறது. ஆனால் பிறகு எல்லாம் துறந்து தேச நன்மையைக் கருதி, கதர் துணியைத் தவிர வேறு உடை தரிக்கவில்லை. அரையில் ஒரு வஸ்திரம், ஒரு ஜிப்பா என்னும் நீண்டசட்டை; இவர் அல்லவா தேசோபகாரி, தேசபந்து. இவரைப்போல் நாம் ஒவ்வொருவரும் நம்மால் கூடியவரையில் வீண் டம்பம் வீண் செருக்கு இவையெல்லாம்விட்டுவிட்டு ஏழைகளையும் அனாதைகளையும் ரக்ஷிக்க முன வந்தால் நமது தேசம் சகோதர விச்வாசத்துடனும் நற் குணஙகளுடனும் விளங்கும் நமது பூர்வீக வாழ்வும் தலை எடுக்கும். லோகமாதா சநதுஷ்டியடைவாள்.

இதுவே ஒரு புதிய உணர்ச்சியாகும்.

வந்தேமாதரம்.

பக்வத்கீதையிலுள்ள போதவசனங்கள்.

(ஸ்ரீமதி பி. மங்களாபாயி)

பிரஹ்லாதன் சொல்லுகிறான்:—சத்தமும் சத்துவமயமுமான குணங்களுடன் கூடிய பிரம்ம தேவாதி ஸுரவரர்களும் கூட ஈசுவரனைத் துதித்து அவரைச் சந்தோஷப்படுத்தத் திறமையற்றவர்களாயினர். அத்தகைய கடவுள் ஈனமான தைத்திய குலத்தில் பிறந்த என்னிடம் எப்படி பிரசன்னமாவார்? பொருள், நற்குலம், ரூபம், தபஸ், பாண்டித்தியம், காந்தி, பிரபாவம், சக்தி, புத்தி, யோகம் முதலிய குணங்கள் அமைந்திருக்கப் பட்டவர்களுக்குத்தான் கடவுள் பிரசன்னமாகிறார். இல்லாவிடில் இல்லை என்று மட்டும் எனக்குத் தோன்றவில்லை. அவர் கேவலம் பக்தியினாலேயே பிரசன்னமாகிறார். கஜேந்திரனுக்குப் பக்தியினாற்றான் கடவுள் பிரசன்னமானார். இவ்வெல்லா குணங்களும் அமைந்திருந்து மேன்மையான பிராமண குலத்தில் ஜன்ம மெடுத்திருக்கிறவன் கடவுள் பக்தி பண்ணாவிருப்பானாகில், அவனைவிடக் கடவுள் பக்தி பண்ணும் புலையனைத்தான் சிரேஷ்டனென்று நினைக்கிறார். காரணம், கடவுள் பக்தியினால் அந்தப் புலையன் தன் குலத்தை உத்தரிக்கிறான்; இந்த பிராமணனோ தன்னைக் கூட உத்தரித்துக்கொள்ள முடிவதில்லை. அப்படியிருக்கக் குலத்தை உத்தரிப்பது எப்படி? பொருள் முதலியவைகளாலேயே ஜனங்கள் தம்மைப் பூஜிக்கவேண்டுமென்று பகவானுக்குத் தோன்றுவதில்லை; ஆனால் அவர் மிகவும் தயாள குணமுடையவராயிருக்கிறார். அதனால் அவர் தன் பக்தர்களின்கல்யாணத்தின் பொருட்டே அவைகளை சுவீகரிக்கிறார்.

ஒருவனுக்குச் சொறி சிரங்கு வந்திருக்கும் போது தினவெடுத்தால் நன்றாகச் சொறிந்து விடுவான். ஆனால் அதனால் உண்டாகும் எரிச்சல்மட்டும் பிறகு அவனுக்கு மிக்கத் தொந்தரவு தருகின்றது; அப்படியிருந்தும் மறுபடியும் அரிப்பெடுத்தால் அவன் சொறியப் பின் வாங்குவதில்லை! தெய்வமே, அதைப்போலவே இந்த சம்சாரத்தின் அசாசுவதமான தன்மையையும் துக்கத்தையும் உணர்ந்திருந்தும், மூடர்களும்,சிற்றின்பப் பிரியர்களுமான ஜனங்களுக்கு வைராக்கிய முண்டாவதில்லை. விவேகமுள்ளவர்கள் மாத்திரம் பிரபலமான சிற்றின்ப இச்சையைச் சொறி சிரங்கின் உபத்திரவம்போல் பாவித்து பொறுமையுடன் பொறுத்து வருகின்றனர்.

"குண சுபாவத்தின்படி எவனுக்கு எந்த தர்மமோ அதையே அவன் ஆசரிக்கவேண்டும். அதனால் இகபர சுகம் பிராப்தமாகிறது என்பது வேதம் ஓதிய முனிவர்களுடைய கொள்கையாகும். அரசனே, உனக்கு நான் சொன்ன அந்தந்த வருணத்தாருக்குறிய தர்மங்கள் அன்னிய வருணத்திய புருஷனிடத்திற் காணப்பட்டால் அப்புருஷனை அவ்வருணத்தினன் என்று நினைக்கவேண்டும். எப்படி என்றால் மனோ நிக்ரகம் முதலிய பிராமணர்களுடைய குணம் ஒரு வைசியனிடத்திற் காணப்பட்டால அந்த வைசியனை பிராமணனென்று நினைக்கவேண்டும். வருண விவஸ்தையானது ஜன்மத்தில் அல்லது வமிசத்தில் இல்லை. அது அவரவர்களுடைய குண தர்மத்திற்றானிருக்கிறது.

"ஸ்திரீயானவள் பதியின் சேவை செய்ய வேண்டும். பதிக்கு அநுகூலமாக நடந்து கொள்ளவேண்டும்; அவனுடைய பந்துக்களின் சிசுரூஷை செய்யவேண்டும; அவன் எந்த விர

தங்களைச் செய்கின்றனனோ அவைகளை அவளும் செய்யவேண்டும்; இருக்கும் ஆபரணங்களை அணிந்து எப்பொழுதும் சுசோபிதையாயிருக்க வேண்டும்; வீட்டிலிருக்கும் சாமான்களையெல்லாம் தேய்த்துத் துடைத்து சுத்தமாக வைக்க வேண்டும். வீட்டை மெழுகிப்பெருக்கிக் கோலமிட்டு வீட்டை அழகாக வைக்கவேண்டும்; பசிக்கு வேண்டியனவெல்லாம் கொடுத்து அவனைச் சந்தோஷப்படுத்தவேண்டும். அன்றி வினயம், இந்திரிய நிக்ரகம், சத்தியம், பிரியமாகப் பேசுதல், நிஷ்கபடமான அன்பு இவைகளுடன் கூட சமய மறிந்து தக்கபடி அவனுடைய சேவையைச் செய்யவேண்டும். இப்படி எவள் நடந்துகொள்கின்றனளோ அவளைத் தான் ஸாத்வீ என்பார்கள். அவள் எப்பொழுதும் திருப்தியுடனும், சிற்றின்பங்களைப்பற்றி ஆசக்தியற்றவளாயுமிருக்கவேண்டும். ஜாக்கிரதை, சுத்தம், தர்மம், உண்மை பேசுதல் இக்குணங்களையுடைய ஸ்திரீயானவள் அன்புடன் பதிசேவை செய்யவேண்டும். லக்ஷ்மியானவள் ஸ்ரீஹரியின் சேவையில் கண்ணுங்கருத்துமாயிருப்பதுபோல் பதியைத் தன் தெய்வமாக எண்ணி இப்பிரகாரம் அவனுடைய சேவை செய்யும் ஸ்திரீயானவள் கடைசியில் பதியுடன் வைகுண்டத்தை அடைந்து, அங்கு அவ்விருவரும் ஏகேச்சையாக சாசுவதமான சுகத்தை அடைகின்றனர்.

"பிரம்மச்சாரியானவன் நல்ல சுபாவம், மிதாகாரமுடையவனுயிருந்து, ஜிதேந்திரியனாகவும், சிரத்தை யுடையவனுயுமிருக்க வேண்டும்; ஸ்திரீகளுடன் அல்லது ஸ்திரீ லம்படனை (துர் நடத்தையுள்ள) மனிதனுடன் அவசியமிருந்தாற்றான் பேசவேண்டும். அவன் ஸ்திரீகளைப்பற்றிப் பேசலாகாது; காரணம், புலன்கள் பலமுள்ளவைகளாயிருக்கின்றன, அவைகள் பெரும் பெரும் ஜிதேந்திரியர்களானவர்களைக்கூடத் தடுமாறும்படிசெய்து விடுகின்றன. அவ்வாறே யௌவன பருவத்திலுள்ள பிரம்மச்சாரிகள் தம் கூந்தலை வாரிக்கொள்ளுதல், அப்யங்கனம் செய்தல் முதலியன குருபத்தினி அல்லது இதர ஸ்திரீகளிடமிருந்து செய்துகொள்ளலாகாது. காரணம் ஸ்திரீயானவள் பிரத்தியக்ஷ அக்கினி ரூபமாயிருந்து புருஷன் நெய்நிறைந்த கடத்தைப் போலிருக்கிறான்.

"ஐசுவரியவந்தரான புருஷர்களுங்கூட துக்கமுள்ளவர்களாயிருப்பதை நாம் காண்கிறோம். அவர்களுக்குப் பொருளாசை மிகுதியாயிருக்கிறது; புலன்களை அடக்க முடிவதில்லை. எல்லோர் பேரிலும் அவர் மனதில் சங்கை யுண்டாகிறது; இவைகளன்றி எப்பொழுதும் பயம் முதலிய துக்கங்கள் இருக்கவே இருக்கின்றன.

"எவன் புலன்களுக்கு அதீனனுயிருக்கின்றனோ, அவனுக்கு மூவுலகிலிருக்கும் மிகவும் பிரியமான சகல விஷயங்களையும் கொடுத்த போதிலும் சந்தோஷ முண்டாவதில்லை.

"எந்த மனிதன் தர்மம், அர்த்தம், காமம், கீர்த்தி, குடும்பம் இவ்வைந்தினிடத்தில் தன் சம்பளத்தைப் பங்கிட்டுக் கொடுத்து விடுகின்றனனோ அவனுக்கு இகத்திலும் பரத்திலும் சுகம் கிடைக்கிறது.

"அசத்தியத்தைவிடப் பெரிய அதர்மம் வேறு எதுவுமில்லை.

"எவன் பேரில் நான் அநுக்கிரகம் செய்யப் போகிறேனோ அவனுடைய ஸர்வஸ்வத்தையும் நான் முதலில் அபகரித்துக் கொள்ளுகிறேன் காரணம், அதனால் மனிதன் உன்மத்தனுயிருக்கிறான். அவனுக்கு என் ஞாபகமே இருப்பதில்லை.

"ஏ சமர்த்தனே! கடவுள், குரு, இதர ஜனங்கள் இவர்களெல்லோரும் அநுக்கிரகம் பண்ணியிருந்த போதிலும் எவன் என்னுடைய பிரசாதத்திற்கு அணுவளவும் ஈடாகமாட்டானோ, இத்தகையவனைச் சரணமடைவதென்றால் குருடனைக் குருடன் முன்னுக்குத் தள்ளுவது போல் தான்.

துர்வாஸ முனிவருக்கு விஷ்ணு சொல்லுகிறார்:—பதிவிரதை ஸ்திரீயின் பதி எவ்வாறு அவளுடைய நன்மையைச் செய்ய சித்தமாயிருக்கின்றனனோ, அவ்வாறு நான் என் பக்தர்களுக்குக் கல்யாண முண்டாகும் பொருட்டு எக்காரியத்தையும் செய்ய சித்தமாயிருக்கிறேன். என் சக்தியை அடக்க என் பக்தர்கள் சமர்த்தர்களாயிருப்பதுபோல், நான் சமர்த்தனல்லன்!

பிறர் அபராதம் செய்த போதிலும்கூட சாது புருஷர்கள் அவர்களுக்கு உபகாரந்தான் செய்து கொண்டிருக்கின்றனர்.

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்தநாராயணய்யர்)

(718-ம் பக்கத் தொடர்ச்சி.)

திபேத்—ஸியாண்டு—பிரியஸ் நதி—கரையான்—மாகாணம்—ஜாஸிபட்டணம்—காஸன்—கர்டன்டான் வோசியம் யுத்தம்—மியன்—பங்காளம்—கஞ்சிகு—ஆமு தோலமான் ராஜ்யம்—ஸிடின்பூ—ஜின்குவி—பலான்பூ—ஸியாங்கு—ஸியாங்க்லி—துடின்பூ—ஸிங்கிமாட்டு காமான் நதி—சீனச்சக்கரவர்த்தியின் கப்பற்படை.

திபேத்து மாகாணத்தைக் கடந்துசென்ற இருபது நாட்பயணத்தில் நாங்கள் அநேகம் நகரங்களையும் கிராமங்களையும் பார்த்தோம். அவைகளிலுள்ள விக்கிரகாராதனைக்காரர்கள் அறிவீனத்தினுல் ஒரு மிகக் கெட்ட வழக்கத்தை யனுசரித்து வருகிறார்கள். அங்கு பருவமடையாத கன்னிகைகளை ஒருவனும் கலியாணஞ்செய்து கொள்வதில்லை. வேற்றிடங்களிலிருந்து இந்நாட்டு வழியே செல்லும் பிரயாணிகளும் மற்றையோரும் இங்கு தங்குகையில் இங்குள்ள ஸ்திரீகள் கலியாணத்திற்கிருக்கும் தங்களது பெண்களை அப்பிரயாணிகளிடம் கொண்டுவந்து அவர்கள் அங்கிருக்குமட்டும் அனுபவிக்கும்படி விடுவார்கள். பிரயாணிகளும் அதி சுந்தரமானவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுவார்கள். மற்றையோர் வருத்தத்துடன் தங்கள் தங்கள் வீடுகள்போய்ச் சேருவார்கள். பிரயாணிகள் அந்நாட்டைவிட்டு அகலுகையில் அந்தப் பெண்கள் ஒருவரையும் தங்களுடன் கூட்டிச் செல்லார்கள். அவரவர் பெற்றோரிடமே ஒப்புவித்து விடுவார்கள். அப்பெண்களும் தங்களை வைத்திருந்தவர்களிடமிருந்து ஏதேனும் விளையாட்டு சாமானோ அல்லது சிறிய பரிசோ வேண்டுமென்று கேட்பார்கள். இவை அப்பெண்கள் கலியாணத்திற்குப் பருவமடைந்தவர்களென்று காட்டுவதற்கு அத்தாட்சியாம்! தன்னை வரிப்பவர்களுக்கு எவள் அதிகமான பரிசுகளையும் விளையாட்டு சாமான்களையும் காட்டுவாளோ அவளே அதி புண்ணியவதியாக மதிக்கப்பட்டு, நல்ல இடத்திலும் வாழ்க்கைப் படப் பெறுவாள்; தன்னை நன்முக அலங்காரம் செய்து கொள்ளவேண்டுமென்ற இஷ்டமுள்ள கன்னிகை தனக்குக்கிடைத்த பரிசுகளை யெல்லாம் கழுத்தைச் சுற்றி மாட்டிக்கொள்ளுவாள். எவள் வெகு ஜனப்பிரியை யாயிருந்த

னளே, அவனுக்குத்தான் இந்நாட்டார் அதிகமாக மரியாதை செய்கின்றனர்.

ஆனால் கலியாணமானபின் இவர்கள் பிற மனிதரிடம் பேசுவதில்லை; இந்நாட்டுப் புருஷரும் இவ்விஷயத்தில் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம் வரும்படி நடந்து கொள்ளுவதுமில்லை.

இந்நாட்டார் விக்கிரகாராதனைக்காரர்கள் கொடிய சுபாவமுடையவர்கள்; திருட்டுப் புரட்டுச் செய்வதில் ஒரு விதமான பாபமுமில்லை யென்று நினைப்பவர்கள்; வேட்டையாடியும் நிலத்தைப் பயிரிட்டுமே ஜீவிப்பவர்கள். அவர்கள் புனுகு தரும் கத்தேரி யென்னும் அனேக மிருகங்களை வளர்க்கின்றனர். அவர்கள் தங்களுக்கே யுரித்தான ஒரு சொந்த பாஷையைப் பேசுகின்றனர். அவர்களிடம் ஒரு விதமான நாணயமுமில்லை. சீனச் சக்கரவர்த்தியின் காகிதப்பணமுங் கூடக்கிடையாது; அவர்கள் வழங்கும் பணமெல்லாம் பவழந்தான். அவர்கள் மிருகங்களின் தோல்களையும் சணலினற் செய்த முரட்டுத் துணிகளையுமே அணிகின்றார்கள். இந்நாடு திபேத்துக்குச் சேர்ந்தது.

திபேத்து மிகப்பெரிய மாகாணம். அது எட்டு ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களுமுண்டு. அதில் அனேக நகரங்களும், பட்டணங்களும், மலைகளும், ஏரிகளும், நதிகளும் உண்டு. அவற்றில் பொன் அகப்படுகின்றது. அந்நாட்டு ஸ்திரீகள் தங்களது கழுத்தைச் சுற்றிலும் பவழ மணிவார்கள். அப்பவழங்களையே தங்களது விக்கிரகங்களின் கழுத்திலும், வெகு அபூர்வமான வஸ்துவென்று சாத்துவார்கள். அந்நாட்டில் கழுதைகளைப் போன்ற மிகப்பெரிய நாய்களிருக்கின்றன. அவைகள் விசேஷமாக போயாமினி யென்னும் காட்டெருதுகளையும் வேறு காட்டு மிருகங்களையும் பிடிக்கின்றன. அந்நாட்டில் பலவிதமான வாசனைத் திரவியங்கள் உண்டாகின்றன; அவை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாவதில்லை.

இதற்கு முன் சொன்ன மாகாணங்களைப் போலவே திபேத்தும், கானுக்குக் கீழ்ப்பட்டதாகும். திபேத்து மாகாணத்தின் மேற்கெல்லையில் ஸியாண்டு மாகாணமிருக்கின்றது. முற்காலத்தில் அதை அம்மாகாண அரசனே ஆண்டுவந்தான். இப்போது அது கானுடைய அதிகாரிகளது ஆளுகைக்குட்பட்டிருக்கின்றது.

மேற்றிசையிலுள்ளன வென்றால் இம்மாகாணங்களெல்லாம் மேற்கெல்லையில் இருப்பன வென்று அர்த்தமல்ல. நாங்கள் கிழக்கு, வடகிழக்கு திசைகளினிடையே யிருந்த பிராந்தியங்களிலிருந்து மேற்றிசையை நோக்கி வந்ததினால் அந்நாடுகள் மேற்றிசையி லிருக்கின்றன வென்று எழுதினேன்.

அங்குள்ள ஜனங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். அங்கு அனேக நகரங்களிருக்கின்றன. முக்கிய நகரத்திற்கும் அம்மாகாணத்திற்கும் ஸைந்து என்றே பெயர். இந்த ஸைந்து என்பது அம்மாகாணத்தின் எல்லையில் இருக்கின்றது. அங்குள்ள ஒரு பெரிய உப்பேரியில் உருண்டை வடிவமில்லாத வெண்முத்துகள் அபரிமிதமாக விளைகின்றன. அவைகளை ஜனங்கள் தங்கள் மனம்போனபடி யெடுத்துச் சென்றால் அவற்றின் விலை குறைந்துபோகுமென்று கருதி, தம்முத்தரவின்றி ஒருவரும் அவ்வேரியில் முத்துக் குளிக்கக் கூடாதென்றும் அப்படி மீறி முத்துக்குளிப்போர் மரண தண்டனைக்குள்ளாவார் என்றும் சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். பச்சைக் கற்களின் சுரங்கமுள்ள ஒரு மலையும் அங்கிருக்கின்றது. அக்கற்களை வெட்டி யெடுக்கவும்

மேற்கூறியபடி சக்கரவர்த்தியின் உத்திரவு வேண்டும். புனுகு தரும் கத்தேரி யென்னும் மிருகங்களும் அந்நாட்டில் அதிகமாக இருக்கின்றன. அபரிமிதமாக முத்து விளைவதாக மேலே சொன்ன ஏரியில் மீன்கள் உண்டாகின்றன. தவிர அந்நாடெங்கும் சிங்கங்கள், கரடிகள், கலைமான்கள், புள்ளிமான்கள், அவுன்ஸ்கள் (Ounces) சிறுத்தைப் புலிகள், சிறுமான்கள் முதலிய காட்டு மிருகங்களும், பலவிதமான பட்சிகளும் நிறைந்திருக்கின்றன. அங்கு லவங்கமும் விசேஷமாகக் கிடைக்கின்றது. அது பே (Bay) மரத்தைப் போன்ற கொம்புகளும் இலைகளுமுள்ள சிறு மரங்களிலிருந்து பறிக்கப்படுகின்றது.

இந்த லவங்க மரமானது பே (Bay) மரத்தைவிட அதிகமான உயரமும், அதைப் போல் அவ்வளவு வளையாமலுமிருக்கும். அதன் புஷ்பங்கள் வெண்ணிறமானவை. எளிதில் உதிர்ந்து போகக்கூடியவை. மலர்ந்த பின் அப்புஷ்பங்களுக்குக் கறுத்து இருண்ட நிறமுண்டாகின்றது. இஞ்சியும் இலவங்கப்பட்டையும் வேறு அனேக வாசனைத் திரவியங்களும் அங்கு அதி விசேஷமாக விளைகின்றன. அவை நமது நாடுகளுக்கு வருவதில்லை.

நமது தேசத்தில் விசேஷமாக உண்டாகும் சாராயம் அங்கு உண்டாவதில்லை. ஆதலால் அதற்குப் பதிலாக அந்நாட்டார் தானியங்களையும், அரிசியையும், பலவிதமான வாசனைத் திரவியங்களையுஞ் சேர்த்து அதி ருசியான ஒரு பானகம் செய்கின்றனர்.

அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கின்றனர். அவைகளிடம் தங்களுக்கிருக்கும் மூடபக்தியின் மிகுதியினால் அவர்கள் தங்களது மனைவிகளையும், சகோதரிகளையும், புத்திரிகளையும் யாத்திரிகர்கள் அனுபவித்தால்தான் தங்களுக்கு அவ்விக்கிரகங்களின் அனுக்கிரகங்கள் உண்டாகின்றன வென்று நினைக்கின்றனர். அந்நாட்டிற்கு ஒரு பிரயாணி வந்துவிட்டால் ஒவ்வொரு வீட்டானும் அவனைத் தன் வீட்டில் விருந்துக்கழைத்து, தன் ஸ்திரீகளையும் வீட்டையும் அவனிடம் ஒப்புவித்துவிட்டு, வெளிச்சென்று, அவனிருக்குமட்டும் வீட்டை எட்டிப்பாரான். தனது விக்கிரகங்களுக்குப் பிரீதியுண்டாகு நிமித்தம் தான் இவ்வாறு செய்வதாகவும், இதனால் அவைகள் தன்னிடம் வைத்துள்ள கிருபையைப் பெருக்குமென்றும் அந்நாட்டான் ஒவ்வொருவனும் நம்புகிறான்.

தங்கக் கட்டிகளை அந்நாட்டார் நாணயங்களாக வழங்குகின்றனர். அவைகளின் மதிப்பு அவற்றின் நிறையைப் பொறுத்திருக்கும். அக்கட்டிகளில் முத்திரைகள் கிடையா; அவைகளே அந்நாட்டிலுள்ள விலையுயர்ந்த நாணயங்கள். அங்கு விலைமட்டான வேறொரு நாணயமும் வழங்குகின்றது. அது பின்வருமாறு செய்யப்படுகின்றது:—அந்நாட்டார், ஒரு பெரிய வாணலியில் உப்பைப்போட்டு ஒரு மணிநேரம் வரை காய்ச்சி, இறுகியபின் அதைப் பெருத்த ரொட்டிகள் போலப்பிடித்து அவற்றின்மேல் அரசனது முத்திரையையிடுவார்கள். அந்த உப்புக்கட்டியை அவர்கள் நகரங்களுக்கு தூரத்திலுள்ள உள் நாடுகளுக்கு எடுத்துச்சென்று, அங்கு வாங்குவாரில்லாமற் கிடக்கும் புனுகுக்கும் பொன்னுக்கும் விற்றுப் பெருத்த லாபம் சம்பாதிக்கின்றனர். அங்குள்ளவர்கள் தங்களிடமிருக்கும் பொன்னைக் கொடுத்து உப்பை வாங்கித் தங்களது போஜன பதார்த்தங்களில் உபயோகித்துக் கொள்ளுவார்கள்.

இங்கிருந்து பதினைந்து நாட்பிரயாணத்துக் கப்பால் ஸைந்து மாகாணத்தின் எல்லையாகிய பிரியஸ் (Brius) என்னும் நதியிருக்கின்றது.

மத்தியிலுள்ள பிரதேசத்தில் கோட்டைகளும் கிராமங்களும் நிறைந்திருக்கின்றன. அங்குள்ள ஜனங்களது நடையுடை பாவனைகளெல்லாம், ஸைந்து மாகாணத்தாரையே ஒத்திருக்கின்றன. பிரியஸ் நதியில் தங்கம் மிகவும் ஏராளமாகக் கிடைக்கின்றது. அதற்கு அங்கு டிபையோலா வென்று பெயர். அதனுடன் கலந்து கிடக்கும் மணலையும் மண்ணையும் பிரிப்பதற்காக அந்நாட்டார் அதைப் பாத்திரங்களிலிட்டுக் கழுவுவார்கள். அந்நதியின் கரையில் இலவங்கப்பட்டை விசேஷமாக விளைகின்றது. அந்நதி நேராக சமுத்திரத்திலேயே சங்கமமாகின்றது.

பிரியஸ் நதிக்கு மேற்கு திக்கில் ஏழு ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள கரையான் மாகாணமிருக்கின்றது. அது சக்கரவர்த்திக்குச் சேர்ந்தது. அதை அவரது இளவரசரும் ஐசுவரியத்திலும், ஞானத்திலும், தர்மத்திலும் குறைவில்லாதவருமான ஸென் டிமூர் என்பவர் இராஜப்பிரதிநிதியாக ஆண்டு வருகிறார். அந்நாடு ஐந்து நாட்பயணம் வரை ஜனசமிருத்தியுள்ளதாகவே யிருக்கிறது. அங்குள்ள ஜனங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். அவர்கள் வேட்டையிற் கிடைத்த மிருகங்களையும் பழவகைகளையுமே தின்று ஜீவிக்கின்றனர். அங்கு முதல் தரமான குதிரைகள் உண்டாகின்றன. அந்நாட்டாரது பாஷை விசித்திரமும் கற்பதற்கு கஷ்டமுமானது.

அந்நாட்டின் பிரதானபட்டணமான ஜாஸி யென்பது ஐந்து நாட்பயணத்தின் இறுதியிலிருக்கின்றது. அது மிகப்பெரிதும், பிரசித்தியும் பெற்ற நகர். அங்கு வியாபாரிகளும் தொழிலாளிகளும் அனேகர் இருக்கின்றனர். விக்கிரகாராதனைக்காரர்கள், கிறிஸ்தவர்கள், நெஸ்டோரியார்கள், சரேஸர்கள் ஆகிய பல வகுப்பினரும் அவ்வூரில் இருந்தாலும் விக்கிரகாராதனைக்காரரே விசேஷமாக விருக்கின்றனர்.

அங்கு தானியங்களும் அரிசியும் கிடைக்கின்றன. தானியத்தினால் செய்யப்படும் ரொட்டி ஆரோக்கியமாயிராததினால் அவ்வூரார் அரிசி ரொட்டியையே செய்து தின்கின்றனர்; தவிர, அரிசியுடன் வாசனைத் திரவியங்களைச் சேர்த்து ஒரு ருசியான பானகமுஞ் செய்கின்றனர்.

அவர்கள் பீங்கான்களை நாணயங்களாகவும், சமுத்திரத்தில் அகப்படும் கிளிஞ்சல்களை ஆபரணங்களாகவும் வழங்கி வருகின்றனர்.

அவ்வூரிலுள்ள உப்புக் கிணற்று ஜலத்திலிருந்து அவர்கள் உப்புக் காய்ச்சுவார்கள். இராஜப்பிரதிநிதிக்கு விசேஷமான வரும்படி கிடைக்கின்றது.

அந்நாட்டாரும் அன்னியர் தங்களது ஸ்திரீகளுடன் உறவாடுவதினால் தோஷமில்லையென்று நினைக்கின்றனர்; அது அவர்களுக்கு சம்மதமாகவே யிருக்கிறது.

அந்நாட்டில் மீன் நிறைந்த நூறு மைல் சுற்றளவுள்ள ஒரு ஏரி யிருக்கின்றது.

அவர்கள் பெட்டைக் கோழிகளின் மாமிசத்தையும், மாட்டிறைச்சியையும், ஆட்டிறைச்சியையும், எருமையின் மாமிசத்தையும் சிறிது சிறிதாகத் துண்டித்து அவற்றிற்கு அதி ருசியுள்ள வாசனைத் திரவியங்களைச் சேர்த்து பச்சையாய்த் தின்னுவார்கள்; ஏழைகள் அவைகளைச் சிறிதும் பெரிதுமாகத் துண்டித்து உள்ளிப்பூண்டுக் குழம்பில் ஊறவைத்துத் தின்னுவார்கள்.

ஜாஸி பட்டணத்தைவிட்டு மேற்கு நோக்கிப் பத்து நாட்பயணஞ்செய்து நாங்கள் காரஸன் நாட்டின் தலை நகரான அதே பெயருடைய நகரத்திற்கு வந்தோம். அதைக் குப்ளே

யின் மகனான குஜடின் என்பவர் ஆண்டு வருகின்றார். அங்குள்ள நதிகளில் பொடித் தங்கமும் கெட்டித் தங்கமும் விசேஷமாகக் கிடைப்பதன்றி, மலைகளிலுள்ள சுரங்கங்களில் தங்கக் கட்டியும் கிடைக்கின்றது. ஆறு ராத்தல் வெள்ளிக்கு அங்கு ஒரு ராத்தல் தங்கம் கிடைக்கின்றது. இந்தியாவிலிருந்து வரும் பீங்கானே அங்கு நாணயமாக வழங்குகின்றது.

அங்குள்ள ஜனங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள் அந்நாட்டில் மிகப்பெரியதாகப் பாம்புகள் வளர்கின்றன. அவைகளிற் சில முப்பதடி நீளமும் மூன்று சாண் பருமனுமுள்ளவை. அவைகளுக்குத் தலையினருகில் இரண்டு சிறு கால்களும், அக்கால்கள் ஒவ்வொன்றிலும் சிங்க நகங்களைப்போன்ற மூன்று நகங்களும், ரொட்டிச்சுருளினும் பெரிதான பளிச்சென்று பிரகாசிக்கும் கண்களுமுண்டு. அவைகளது வாய்களும் கடைவாய்களும் மிகப் பெரிதாயிருப்பதினால் அவைகள் மனிதரையும் விழுங்கக் கூடியவையா யிக்கின்றன. அவைகளுடைய பற்கள் பெரிதும் கூர்மையுமானவை. அந்த சர்ப்பங்களைப் பார்த்துத் திகிலடையாத மனிதரோ வேறு பிராணியோ கிடையாது. அவைகளை இந்நாட்டார் பின் வருமாறு பிடிப்பார்கள்:—அவை பகற் காலத்தில் வெயிலுக்குப் பயந்து தங்களது புற்றில் மறைந்திருந்து இராக்காலத்தில் இரை தேடுவதற்காக வெளியே வந்து தங்களுடைய கண்ணுக்கெதிர்ப்படும் சிங்கம், ஓநாய் முதலிய மிருகங்களை விழுங்கிய பின் தண்ணீர் குடிக்கச் செல்லும். இவ்வாறு, இரை நிறைந்த தங்களின் வயிற்றைத் தூக்கிக்கொண்டு ஓடுகையில் அவை மணலின்மேல் ஒரு மரத்தை யிழுத்தாற்போல் அழுத்தமான கோடு கிழித்துச் செல்கின்றன. அதைக் கண்ட வேடர்கள் அவை சென்ற வழியே திரும்பி வருமென்று தெரிந்து மணலினடியில் பெருத்த இருப்புச் சலாகுகளை நட்டுவிடுவார்கள்; திரும்பி வருகையில் பாம்புகள் அவற்றின் மேலூரி வயிறு கிறண்டு காயப்பட்டு உயிர் துறக்கின்றன. அக்கணமே அங்குள்ள காகங்கள் பாம்புகளிறந்த சங்கதியை யறிந்து கூவ, வேடரும் வந்து அவற்றின் தோலை யுறித்து சத்தை யெடுத்துக்கொள்ளுவார்கள். அந்த சத்தானது பல வியாதிகளுக்கு மருந்தாக உதவுகின்றது, விசேஷமாக மாநாய் கடிக்கு ஒரு தோலா நிறையுள்ள அச்சத்தைச் சாராயத்திற் கலந்து கொடுத்தால் அது குணமாகின்றது. பிரசவவேதனையிலிருக்கும் ஸ்திரீகளுக்கும், பிளவைக்கும், மற்றும் வேறு பெருத்த வியாதிகளுக்கும் அது ஔஷதமாக உபயோகப்படுகின்றது. அப்பாம்புகளின் மாமிசங்கள் வெகு ருசியாயிருப்பதினால் அவைகளை அந்நாட்டு வேடர்கள் உயர்ந்த விலைக்கு விற்று விடுவார்கள்.

இங்கு சிறு பாம்புகளுமுண்டு. அவை எட்டு ஆறு அல்லது ஐந்து அடி நீளமுள்ளவை.

அந்நாட்டில் மிகப் பெருத்த குதிரைகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றை அந்நாட்டு வியாபாரிகள் இந்தியாவுக்குக்கொண்டு சென்று அங்கு விற்கின்றனர். தன் வாலை இப்புறமும் அப்புறமும் வளைக்காமலிருக்கும் பொருட்டு அவர்கள் குதிரையின் வாலிலிருந்து ஒரு எலும்பை யெடுத்து விடுவார்கள். வாலானது சிறிதும் வளையாமல் நேராகத் தொங்குவதே குதிரைக்கு லக்ஷணம் என்பது அந்நாட்டாரது அபிப்பிராயம்.

அவர்கள் பிரஞ்சுக்காரரைப்போல நீண்ட ரிக்காப்புகளை (Stirrup) உபயோகிக்கின்றனர். தார்த்தாரியரும் மற்றைய ஜாதியருமென்றாலோ, தாங்கள் வேட்டையாடுகையில்

மேலெழுவதற்கு அனுகூலமாயிருக்கும் பொருட்டுக் குறுகிய ரிக்காப்புகளையே உபயோகிக்கின்றனர். காஸன் நாட்டார் யுத்தத்திற்குச் செல்லுகையில் எருமைத் தோலினால் செய்யப்பட்ட போர்க்கவசங்களும் அங்கிகளும் அணிந்து ஈட்டிகளையும் வளைந்த விற்களையும் கைக்கொள்ளுவார்கள். அவர்களது அம்புகளின் மேல் விஷம் பூசப்பட்டிருக்கும். அவர்களுள் துப்பாளிகளாக விருப்பவர்கள் எப்போதும் விஷத்தைக் கையிற்கொண்டு செல்லுகின்றனரென்றும்; சந்தேகத்தின்மேல் பிடிபட்டு விட்டால் உடனே அவ்விஷத்தை யுட்கொண்டு உயிர் நீத்துச் சித்திரவதைகளுக்குத் தப்புகின்றனரென்றும் கேள்விப்பட்டேன். இதை யறிந்த இந்நாட்டுப் பிரபுக்கள் தாங்கள் கையோடு காவலாக வைத்திருக்கும் நாயின் மலத்தைக் கரைத்து இவர்களது வாயில் ஊற்றி விஷத்தை வெளிப்படுத்துவார்கள். சீனச்சக்கரவர்த்தியினால் இவர்களது கொட்டம் அடக்கப்படுமுன் இவர்கள் அழகும் நல்லொழுக்கமுமுடைய ஜனங்கள் தங்கள் வீடுகளிலிருக்கையில் இறந்து போனால் அவர்களது நற்குணங்கள் தங்கள் வீடுகளிலே குடிகொண்டு விடுமென்று நினைத்து அக்குணங்களுடைய புறநாட்டார் தங்களது வீடுகளில் தங்கி யிருக்கையில் அவர்களை இரவிற்கொன்று விடுவது வழக்கமாயிருந்தது. இந்தக் கொடிய கொள்கையினால் மாண்டவர் அனேகர்.

காஸான் மாகாணத்திற்கு மேற்கில் ஐந்து நாட்பிரயாணத்தில் கர்டலடான் என்னும் தேசமிருக்கின்றது. அதுவும் சக்கரவர்த்திக்குச் சேர்ந்ததுதான். அதன் முக்கிய நகரத்திற்கு வோசியம் என்று பெயர். அந்நாட்டார் பீங்கான்களையும் தங்கக் கட்டிகளையும் நாணயங்களாக வழங்குகின்றனர். அந்நாட்டிலும் அதைச் சுற்றியிருக்கும் பிரதேசத்திலும் வெள்ளிச் சுரங்கங்களில்லாமையினால் வெள்ளிவேண்டியவர்கள் ஒரு அவுன்ஸ் தங்கம் கொடுத்து ஐந்து அவுன்ஸ் வெள்ளியை வாங்குவார்கள்.

அந்நாட்டுப் புருஷரும் ஸ்திரீகளும் தங்களது பற்களுக்கு மெல்லிய பொற்கூடுகள் போட்டுக்கொள்வார்கள். அக்கூடுகள் பற்களுடன் பொருந்தி யிருப்பதால் பற்களெல்லாம் தகடுகளிற் பதிக்கப்பட்டவைபோல் தோன்றுகின்றன.

அந்நாட்டு மனிதர்கள் தங்களது கைகளிலும், கால்களிலும் ஊசியினால் கட்டங்கள் வரைந்து அவற்றின்மேல் அழியாத கறுஞ்சாந்துகளைப் பூசுவார்கள். அக்கறுப்புக் குறிகள் அவர்களது பராக்கிரமத்திற்கு அடையாளமாம்.

அவர்கள் குதிரைசவாரி, மிருகவேட்டை, பட்சிகளைப் பிடித்தல், ஆயுதப் பயிற்சி ஆகிய இவைகளைத் தவிர வேறொன்றுஞ் செய்யார்கள். வீட்டு வேலைகளெல்லாம் அவர்களது ஸ்திரீகளைச் சேர்ந்தவை; அந்த ஸ்திரீகள் தங்களது புருஷரால் விலைக்கு வாங்கவும் சண்டையில் பிடிக்கவும்பட்ட அடிமைகளின் சகாயங்கொண்டு அவ்வேலைகளை நடத்தி வருவார்கள்.

பிரசவமானவுடன் அந்நாட்டு ஸ்திரீ தன் படுக்கையை விட்டெழுந்து குழந்தையைக் குளிப்பாட்டி அதற்கு நல்லாடை யுடுத்துத் தன் புருஷனிடம் விட்டுவிடுவாள். அவன் குழந்தையினிடம் நாற்பது நாள் இடைவிடாமல் படுத்துக் கிடப்பான். இந்த நாற்பது நாட்களும் அவனது சினேகர்களும் அயலார்களும் அவனை வந்து பார்த்து அவனது க்ஷேமம் விசாரித்து அவனுக்கு உற்சாக மூண்டுபண்ணுவார்கள். அவனது ஸ்திரீ வீட்டு வேலைகளைப் பார்த்துக்கொண்டு படுக்கையிலிருக்கும் புருஷனுக்குப் பத்தியங்களைச் செய்து கொடுத்து

அவனிடமிருக்கும் குழந்தைக்கு தாய்ப்பாலுங் கொடுப்பாள்.

அவர்கள் அரிசியையும் வாசனைத் திரவியங்களையுங்கொண்டு ஒரு சாராயம் செய்கின்றனர்.

அரிசியும் மேலே (ஜாவி நகரத்தைப் பற்றிச் சொல்லுகையில்) எழுதியபடி பக்குவஞ் செய்யப்பட்ட பச்சை மாமிசங்களுமே இவர்கள் சாதாரணமாகச் சாப்பிடுவது. இத்தேசத்தில் விக்கிரகங்களோ கிடையாது. தாங்களும் தங்களது சகல ஆஸ்திகளும் பெரியோர் மூலமாகத்தான் உண்டாயதென்று நினைத்து ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்களது வீடுகளினுள்ள வயது முதிர்ந்த புருஷர்களையே வணங்குவார்கள்.

இவர்கள் வெகுவாகக் காடுகளிலும் மலைகளிலுமே வசிப்பார்கள். இம்மலைகளில் வெய்யில் காலத்தில் மிகக் கெட்ட காற்று அடிப்பதினால் அயல் நாட்டார் இம்மலைகளுக்கு வருவதில்லை.

இந்நாட்டார் அக்ஷராப்பியாச மில்லாதவர்கள்; தங்களுக்குள் ஏற்படும் லேவாதேவிகளையும் ஒப்பந்தங்களையும் இவர்கள் மரத்தினால் செய்யப்பட்ட அலகுக்கோல்களால் கணக்கு வைத்துக்கொள்வார்கள். அக்கோல் சமமான இரண்டு பாகங்களுடையது; அதன் ஒரு பாதியை ஒருவனும் மறுபாதியை மற்றவனும் வைத்துக்கொள்வார்கள். லேவாதேவி முடிந்தபொழுது அக்கோலை முறித்தெறிந்து விடுவார்கள்.

இந்நாட்டிலாவது, லைக்து, வோசியம், கரையான் முதலிய மற்றைய நாடுகளிலாவது வைத்தியர்கள் கிடையாது. எவனாயினும் ஒருவனுக்கு நோய் வந்துவிட்டால் இந்நாட்டார் மாந்திரிகர்களையும் பூசாரிகளையும் வரவழைத்து அவர்களிடம் வியாதியஸ்தனுக்குள்ள நோயைத் தெரிவிப்பார்கள். அப்போது மாந்திரீகர்கள் கூத்தாடிக்கொண்டும், சில வாத்தியங்களை ஊதிக்கொண்டும் தங்களது தேவதைகளைக் குறித்து ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடுவார்கள். கடைசியாக அவர்களுள் ஒருவனுக்கு ஆவேசம் வந்து அவன் குதித்து ஆடுவான். அச்சமயம் மற்றையோர் தங்களது ஆட்டத்தை நிறுத்தி சாமியாடுவோனை "இந்த வியாதி இந்த மனிதனுக்கு வருவானேன்? இது நிவர்த்தியாகும் வழியென்ன?" என்று கேட்பார்கள். அப்போது அவன் "இவன் இன்னின்ன குற்றஞ் செய்தான், பலான தெய்வத்திற்கு விரோதமாக நடந்தான். ஆதலால்தான் இவனுக்கு இந்த வியாதி வந்தது" என்பான். பின்னர் மந்திரவாதிகள் இம்மனிதனது குற்றத்தை மன்னிக்கும்படி அத்தெய்வத்தை வேண்டிக் கொள்ளுவார்கள். நோய் விட்டெழுந்தால் அவன் தன் இரத்தத்தையே நைவேத்தியமாகக் கொடுப்பானென்றும் வேண்டிக்கொள்ளுவார்கள்.

சாமியாடுவோனுக்காவது, பூசாரிக்காவது அந்த மனிதனது நோய் குணப்படாதென்று தெரிந்துவிட்டால் அவன், "இந்த மனிதன் பலான தெய்வத்தை வெகுவாக நிந்தனை செய்திருப்பதனால் அத்தெய்வம் என்ன பலிகொடுத்தாலும் இரங்காது" என்று பதில் சொல்லிவிடுவான்; அப்படிக்கின்றி நோய் குணப்படுமென்று தெரிந்தால் அவன் "கருப்புத் தலையுள்ள ஆடுகள் இத்தனையைக் கொண்டுவந்து மாந்திரீகர்கள் இத்தனைபெயர் தங்களது பத்தினிமார் சகிதம் பலிகொடுத்தால் தெய்வத்தின் கோபம் தணியும்" என்று ஒரு கணக்கிட்டுச் சொல்லுவான். இதைக் கேட்ட அந்நோயாளியின் உறவினர்கள் அவ்வாறே ஆடுகளைவெட்டி அவற்றின் ரத்தத்தை ஆகாயத்தில் தெளிப்பார்கள். அப்போது அங்கு சேர்ந்திருக்கும் மாந்திரீகர்கள் பெருத்த தீவட்டிகளை யேற்றி வீடு

முழுவதும் நறுமணப் புகையிட்டு, அகிற்கட்டைகளைச் சுட்டு, மாமிசமிட்ட குழம்பையும், வாசனைத் திரவியங்கள் கலந்த சாந்தையும் ஆகாயத்தில் தெளிப்பார்கள். இவைகளெல்லாம் விதிப்படி நடந்த பின்னர் அவர்கள் திரும்பவும் பெருத்த பயங்கரமான கூச்சலிட்டு ஆடிப் பாடிக்கொண்டு நோயாளிக்கு நோய் தீர்ந்ததாகத் தாங்கள் நம்பிய அத்தெய்வத்தைக் கொண்டாடிக் கூத்தாடுவார்கள்.

பின்னர் ஆவேசம் வந்த மனிதனை "தெய்வத்திற்குத் திருப்தியாயிற்று?" என்று கேட்பார்கள்; அவன் "இல்லை" என்று சொல்லிவிட்டால் 'இன்னும் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டு அவனது கட்டளைகளை நிறைவேற்றச் சித்தராயிருப்பார்கள்.

"கடவுளுக்குத் திருப்தியாய் விட்டது" என்று அவன் சொல்லிவிட்டால் அவர்களெல்லாரும் உடனே கீழே உட்கார்ந்து விக்கிரகத்திற்கு நைவேத்யமாக வைக்கப்பட்ட மாமிசத்தை அதிக சந்தோஷத்துடன் உண்டு, சாராய வகைகளையும் குடிப்பார்கள்.

போஜன முடிந்து மாந்திரீகர்களுக்கு தக்ஷிணையும் கொடுத்தான பின் எல்லாரும் அவரவர் வீடு செல்வார்கள்.

இவ்வாறு தெய்வ கிருபையினால் நோயாளி நோய்விட்டெழுந்து சௌக்கிய மடைந்தால் இவர்கள் அது தாங்கள் பூஜித்த விக்கிரகத்தின் அனுக்கிரகத்தினால் ஆயிற்றென்பார்கள். அப்படிக்கின்றி நோயாளி இறந்து போய்விட்டாலோ இவர்கள் தங்களது விக்கிரகத்திற்குச் சரியான பூஜை நடக்கவில்லையென்றும் பூஜை செய்தவர்கள் நைவேத்தியத்திற்கு வைத்திருந்த சாமான்களை முன்னாடியே ருசிபார்த்து விட்டனரென்றுஞ் சொல்லுவார்கள்.

இம்மாதிரியான பூஜைகளைப் பேய் பிசாசுகளாலும் அவற்றின் பூசாரிகளாலும் ஏமாற்றப்பட்ட அறிவீனர்களான பணக்காரர்கள் நடத்துகின்றார்களே யொழிய எல்லா ஜனங்களும் நடத்துவதில்லை.

கி. பி. 1272-ம் வருஷத்தில் சக்கரவர்த்தியானவர் வோஷியம், காஜான் தேசங்களைப் பிடித்துவரும்படி தேர்ந்த தளகர்த்தனை நெஸ்டர்டினை சாமர்த்தியமுள்ள பனிரண்டாயிரம் வீரருடன் அனுப்பினார். இப்படை வருவதைக்கேட்ட மீயன் அரசனும், பங்காளத்தரசனும் அறுபதினாயிரம் துரகபதாதிகளும் பனிரண்டு அல்லது பதினாறு ஆயுதபாணிகள் இருக்கக் கூடிய கூடுகளைச்சுமக்கும் ஆயிரம் யானைகளுமுள்ள ஒரு பெருஞ் சேனையைத் திரட்டினார்கள். இச்சேனையுடன் மீயன் நாட்டரசன் தார்த்தார்கள் பாளைய மிறங்கியிருந்த வோசியம் நகரத்தை நோக்கி விரைந்து சென்றான். இதைக்கேட்ட நெஸ்டர்டின் சிறிதும் மனஞ் சலிக்காமல் மிகுந்த துணிவுடன் எதிரிகளை நோக்கிச் சென்று அவர்கள் இருந்த விடத்திற்குச் சமீபமாக வந்ததும் யானைகள் அம்பாரிகளைத் தூக்கிக்கொண்டு காட்டினுள் நுழையாவென்று அறிந்து அங்கிருந்த மரமடர்ந்த ஒரு பெரிய காட்டினருகில் பாளைய மிறங்கினான்.

இதைக் கண்ட மீயன் ராஜன் நெஸ்டர்டினுடன் போர் புரியத் தீர்மானித்தான். அப்போது மீயன் ராஜனது சேனையின் முகத்திலிருந்த யானைகளைக் கண்ட நெஸ்டர்டினுடைய குதிரைகள் வெருண்டு பயந்ததினால் அவைகள் என்ன செய்தும் அந்த யானைகளைத் தாக்க முன்னெழவில்லை, ஆதலால் தார்த்தார்கள் தங்களது குதிரைகளை விட்டுக் கீழிறங்கி அவைகளை மரங்களில் கட்டிவிட்டு யானைகளுடன் சண்டைசெய்ய நினைத்துப் பாதசாரிகளாய் வந்து, அவைகளின்மேல் எண்ணிறந்த அம்புகளை யெய்தனர். அவை

அம்புகளினாலுண்டான வலி பொறுக்கமாட்டாமல் அடுத்தாற்போலிருந்த மற்றொரு காட்டை நோக்கி ஓட்டம் பிடித்தன. இதனால் அவற்றின்மேலிருந்த அம்பாரிகளுடன் அவைகளிலிருந்த ஆயுத பாணிகளும் ஒருங்கே அழிந்து போயினர். இதைக்கண்ணுற்ற தார்த்தார்கள் உடனே தங்களுடைய குதிரைகள் இருந்தவிடஞ் சென்று அவைகளின் மீதேறி வெகு வேகத்துடன் மீயன் அரசனது சேனைகளைத் தாக்கினார்கள். அப்போது நிகழ்ந்த சண்டையில் இருதிறத்தாரது சேனைகளிலும் அனேகர் மாண்டனர். முடிவில் மீயன் தேசத்தரசன் தோல்வியடைந்து தார்த்தார்களுக்குப் புறங்காட்டி ஓடினான். தார்த்தார்களும் உடனே தங்களது எதிராளிகள் தங்கியிருந்த காடுகளுட் புகுந்து அங்கிருந்த அனேகரைக் கைது செய்து அவர்களுடைய உதவியைக் கொண்டே அவர்களது இருநூறு யானைகளைப் பிடித்துக் கொண்டார்கள். அதுமுதல்தான் சக்கரவர்த்தியானவர் தமது யுத்தங்களில் யானைப்படையை உபயோகித்து வருகின்றார். அதற்கு முன் அவரிடம் யானைப்படை யிருக்கவில்லை. இந்த யுத்தத்தின் முடிவில் மீயன் பங்காள ராஜ்யங்கள் சக்கரவர்த்தியின் அதிகாரத்துக் கீழ்ப்படிந்தன.

கரையான் மாகாணத்துக்கப்பால் இரண்டரை நாட்பயணமுள்ள ஒரு பெரிய நிர்மானுஷ்யமான பாலை வனமிருக்கின்றது. அங்கு ரு வீடுகூடக் கிடையாது; அது ஒரு பெரிய தானம். ஆனால் வாரத்தில் மூன்று நாள் னகர் அங்கு வந்து வியாபார நிமித்தம் று கூடுவார்கள். தங்களிடமிருக்கும் தங்க த விற்பதற்காக இந்நாட்டு மலைப்பிராந்தி த்திலுள்ள ஜனங்கள் அம்மலைகளிலிருந்து இறங்கிவந்து ஐந்து அவுன்ஸ் வெள்ளிக்கு ஒரு அவுன்ஸ் தங்கம் விற்றுச்செல்வார்கள். புற நாட்டு வியாபாரிகள் தங்களது வியாபாரச் சாக்குகளையும் வெள்ளியையுங் கொண்டு வந்து, இங்கு தங்கத்திற்கு விற்றுத் தங்களிருப்பிடஞ் செல்வார்கள்.

பொன் விளையும் பெரிய மலைகளுக்குச் செல்லும் வழியானது கஷ்டமாகவும், புற நாட்டாருக்கு எளிதில் விளங்காததுமாக விருப்பதால், அவர்கள் அங்குச் செல்வதில்லை.

மீயன் தேசமானது இந்த மைதானத்திற்குத் தெற்கிலும், இந்தியாவைச் சார்ந்து மிருக்கிறது. அது பதினைந்து நாட்பயணமுள்ள நிர்மானுஷ்யமான காடடர்ந்த பிரதேசம். அங்கு கணக்கற்ற யானைகளும் ஒற்றைக் கொம்பன்களும் வேறு துஷ்ட மிருகங்களும் உறைகின்றன.

பதினைந்து நாட்பயணத்துக்கப்பாலிருக்கும் மீயன் நாட்டு ராஜதானியான மீயன் என்பது ஒரு அழகான பெரிய பட்டணம். அதுவும் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்டது தான். அந்நாட்டார் ஒரு விசித்திரமான பாஷையைப் பேசுகின்றனர், அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். அந்நகரத்தை யாண்டுவந்த ஓரரசன் தான் சாகுந்தருணத்தில், தனது ஆத்மாவின் சுகத்திற்காகவும், தன்னை உலகத்தார் என்றும் மறவாமலிருப்பதற்காகவும் தனது சமாதியின் சமீபத்தில் தலைப்பக்கம் ஒன்று கால் பக்கமொன்றாக பத்துபாதம் (Fathom) உயரமுள்ள இரண்டு கோபுரங்களைச் சலவைக் கல்லாற் கட்டும்படி நியமித்து, அவைகளின்மேல் உருண்டைவடிவான ஓரோர் கல்லையும் வைப்பித்து, ஒரு கோபுரத்தை ஒரு விரல் பருமனுள்ள பொற்றகட்டினாலும், மற்றொன்றை வெள்ளித்தகட்டினாலும் போர்த்தி, கோபுரங்களின் மேல் வைக்கப்பட்ட கற்களைச் சுற்றிலும் சிறு பொன் மணிகளும், வெள்ளி மணிகளும் கட்

டும்படி செய்தான். காற்றடிக்கையில் அம்மணிகள் 'கலகல' வென்று இனிமையாய் ஒலிக்கின்றன. அவன் இறந்தபின் அவனுடைய சமாதி பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட தகடுகளால் போர்த்தப்பட்டது. இந்நகரத்தை ஜயிக்க வேண்டுமென்று நினைத்த சக்கரவர்த்தியானவர் குதிரை வீரர்கள் நிறைந்திருந்த தமது சேனையின் பெரும் பாகத்தை மகா வீரனை ஒரு தளகர்த்தனுடன் அனுப்பினானென்று மேலே சொல்லி யிருக்கிறோம். அந்த தளகர்த்தன் இந்நகரத்தைப் பிடித்தபொழுது, அச்சமாதியைக் கூப்ளேகானது உத்தரவின்றி அழிக்கக் கூடாதென்று இருந்தபடியே விட்டு விட்டான். இதை யறிந்த கூப்ளேகானும், இறந்தவரது பொருள்களை அவமதிக்கக் கூடாதென்பது தார்த்தார்களது தர்மங்களிலொன்றாதலால், அச்சமாதி காலஞ்சென்ற அரசனால் அவனது ஆத்மாவின் சுகத்திற்காகக் கட்டுவிக்கப்பட்டதென்று அறிந்து, அதற்கு ஒரு விதமான தீங்கும் செய்யக் கூடாதென்று கட்டளை யிட்டார்.

இந்நாட்டில் அனேகம் யானைகளும், காட்டெருதுகளும், பெருத்த அழகிய கலைமான்களும், புள்ளி மான்களும் வேறு விதமான காட்டு மிருகங்களுமுண்டு.

இந்நாட்டுக்குத் தெற்கேயுள்ள பங்காளம் இந்தியாவின் எல்லையைச் சார்ந்திருக்கின்றது. மார்க்கோ இந்நாட்டிலிருக்கையில்தான் சக்கரவர்த்தி அதைப் பிடித்தார். அந்நாட்டாரும் அவர்களது அரசனும் ஒரு தனிப் பாஷையைப் பேசுகின்றனர்; அவர்களனைவரும் விக்கிரகாராதனைக்காரர்களே.

அங்கு பள்ளிக்கூடங்கள் நடத்தும் குருமார் உண்டு; அவர்கள் விக்கிரகாராதனைகளும் மாந்திரீகங்களும் கற்பிக்கின்றனர்; அந்நாட்டிலுள்ள பெரிய மனிதர்களுக்கெல்லாம் இதுவே தொழில்.

அவர்கள் மாமிசமும் அரிசியும் புசித்துப் பாலை யருந்துவார்கள்.

அந்நாட்டில் பருத்தி விசேஷமாய் விளைகின்றது. அதனால் செய்யப்படும் சரக்குகளினால் பெருத்த வியாபாரம் நடக்கிறது. ஸ்பைக் (Spike) கேலிங்கல் (Galingal) இஞ்சி, சர்க்கரை ஆகிய இவைகளும், வேறு அனேக வாசனைத் திரவியங்களும் அங்கு விளைகின்றன.

யானைகளுக்கு சமான உயரமுள்ள எருதுகள் அங்குண்டு. ஆனால் அவைகள் யானைகளைப்போல் பெருமனாக விருப்பதில்லை.

அங்கு அனேகர் நபுஞ்சகர்களாக்கப்பட்டு பிற்பாடு வியாபாரிகளுக்கு விற்கப்படுகின்றனர்.

அந்நாடு முப்பது நாட்பயணமுள்ளது. அதன் கீழ்த்திசையில் கஞ்சிகு என்னும் மாகாணமிருக்கின்றது. அந்நாட்டாருக்கும் தனியான அரசனும் பாஷையும் உண்டு. அந்நாட்டார் விக்கிரகங்களை வணங்குவர்கள். சீனச்சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்டவர்கள். அவர்களது அரசனுக்குச் சுமார் முன்னூறு மனைவிமாருண்டு.

அந்நாடு சமுத்திரத்திலிருந்து வெகுதூரத்திலிருப்பதினால், அதில் விசேஷமாக விளையும் தங்கமும் வாசனைத் திரவியங்களும் வெளிநாடுகளுக்கு ஏற்று மதியாவதில்லை.

அந்நாட்டில் அனேகம் யானைகளும் வேட்டை மிருகங்களுமுள்ளன.

பால், மாமிசம், அரிசி ஆகிய இவைகளை அந்நாட்டார் புசிப்பது. அவர்கள் தேசத்தில் சாராயம் கிடைப்பதில்லை. ஆயினும் அவர்கள் அரிசியையும் வாசனைத் திரவியங்களையும் பக்குவஞ்செய்து அவற்றினின்றும் அதி ருசியான பானகங்கள் இறக்குவார்கள்.

புருஷர்களும் ஸ்திரீகளும், தங்களது முகங்கள், கழுத்துக்கள், கைகள், வயிறுகள் கால்களில், சிங்கங்கள், யாளிகள், பக்ஷிகளுடைய உருவங்களை, எளிதில் அழிந்து போகாவண்ணம் வரைந்து கொள்ளுகின்றனர். எவனது உடம்பில் இவ்வுருவங்கள் அதிகமாக விருக்கின்றனவோ அவனே அந்நாட்டாரால் அதி சௌந்தரியமும் சௌரியமும் பொருந்தியவனென்று கொண்டாடப்படுகிறான். இம்மூட ஜனங்களின் உடம்பில் ஊசிகொண்டு பச்சை குத்தியே ஜீவனம் செய்யும் ஜனங்கள் அந்நாட்டில் அனேகர் இருக்கின்றனர்.

ஆமுவென்பது அந்நாட்டுக்குக் கிழக்கேயிருக்கின்றது. அது சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்டது. அந்நாட்டார் விக்கிரகாராதனைக்காரர்கள். அவர்கள் தங்களுக்குச் சொந்தமான ஒரு பாஷையைப் பேசுகின்றனர். அந்நாட்டில் ஆடுமாடுகளும் தின்பண்டங்களும் குதிரைகளும் விசேஷமாகவுண்டு. அந்நாட்டுக் குதிரைகள் மிக நேர்த்தியானவை. அவைகளை வியாபாரிகள் இந்தியாவுக்குக் கொண்டுபோய் விற்பார்கள். அங்கு (ஆமுவில) ருசியான தீவனம் அகப்படுவதினால், எருதுகளும் எருமைகளும் விசேஷமாகவிருக்கின்றன.

அந்நாட்டுப் புருஷர்களும் ஸ்திரீகளும் தங்களது கைகால்களில் தங்கத்தினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட வளையல்களை யணிவார்கள். அவைகளில் ஸ்திரீகள் அணியும் வளையல்களே விலை மிக்கவை. ஆமுவிலிருந்து கஞ்சிகுவுக்குச்செல்ல இருபத்தைந்து நாட்களுக்கு மேற் செல்லும்.

ஆமுவுக்குங் கிழக்கே எட்டு நாட் பயணத்துக் கப்பால் தோலமான் ராஜ்யமிருக்கின்றது. அது சீனச் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்டது. அந்நாட்டு பாஷை வேறு. அந்நாட்டாரும் விக்கிரகாராதனைக்காரர்கள். ஸ்திரீ, புருஷர்கள் உயரமும் நல்லுருவமும் மாநிறமுமுடையவர்கள்.

அந்நாட்டில் அநேகம் பலமான கோட்டைகளும் நகரங்களுமுள.

அது அதிக ஜன நெருக்கமுள்ளது. புருஷர்கள் ஆயுதப் பயிற்சியுடையவர்கள். யுத்தம் செய்வது அவர்களுக்கு சாதாரணமான தொழில்.

அவர்கள் இறந்தவரின் பிரேதங்களைச்சுட்டு, அவர்களின் அஸ்திகளைச் சட்டியிலிட்டு, அச்சட்டியை மனிதரும் மிருகங்களுந் தீண்டாவண்ணம் மலைக்குகைகளிற் புதைப்பார்கள்.

அந்நாட்டில் தங்கம் விசேஷமாக அகப்படுகின்றது. ஆயினும் அந்நாட்டார் இந்தியாவிலிருந்து வரும் பீங்கானையே நாணயமாக வழங்குகின்றனர். கஞ்ஜிகுவிலும் ஆமுவிலுங் கூட இது தான் வழக்கம்.

தோலமான் ராஜ்யத்திலிருந்து ராஜபாட்டையானது ஒரு நதியோரமாய்க் கிழக்கு நோக்கிச் செல்கின்றது. அந்நதியின் கரையில் அநேகம் பட்டணங்களும் கோட்டைகளுமிருக்கின்றன. அவ்வழியில் பனிரண்டு நாட் பயணத்திற்கப்பால் ஸிண்டிகி யென்னும் பிரபலமான பட்டணமிருக்கின்றது. அதுவும் சக்கரவர்த்திக்கு உட்பட்டது. அங்குள்ள ஜனங்களும் விக்கிரகங்களை வணங்குவார். அந்நாட்டில்மரப்பட்டைகளிலிருந்து திவ்வியமான ஆடைகள் செய்யப்படுகின்றன. அவைகளையே அப்பட்டணத்திலுள்ளோர் வெயில் காலத்தில் தரிப்பார்கள்.

அங்கு சிங்கங்கள் விசேஷமாக யிருப்பதினால், ஒருவரும் இராத்திரியில் வீட்டின் வெளிப்புறத்தில் படுத்துத் தூங்கமாட்டார்கள். இச்சிங்கங்களுக்குப் பயந்த நதியில போக்குவரவு செய்யும் கப்பல்களும இராக் காலங்களில

நதியின் கரையைச் சேர்ந்தாற்போல் நிறுத்தப்படுவதில்லை. அந்நாட்டில் இச்சிங்கங்களையும் எதிர்த்துத் தாக்கக்கூடிய துணிவும் வலிவுமுள்ள பெரு நாய்களிருக்கின்றன. இந்நாய்கள் இரண்டின் உதவியைக்கொண்டு ஒரு வில்லாளி ஒரு சிங்கத்தை வெகு லகுவில் கொன்று விடுவான். இவ்வாறு சிங்கங்கள் கொல்லப்படுவது அந்நாட்டில் சர்வ சாதாரணம். சிங்கமானது பெருந்தன்மையுடைய ஜந்துவாதலின், "நாய்களுக்குத் தப்பிக்கொள்ளவும் வேண்டும், தான் பயந்தோடி விட்டதாக அவைகள் நினைத்துக் கொள்ளவுங்கூடாது" என்று நினைத்து, கம்பீரமான நடையுடன், ஒரு மரத்தை நோக்கிச் செல்லும். அச்சமயத்தில் வேடன் சிங்கத்தின் மேல் தனது அம்புகளை எய்து அதன் மேற் பாயும்படி தனது நாய்களையும் ஏவுவான். நாய்களும் சிங்கத்தின் பின்புறமாகப் பாய்ந்து அதைக் கடிக்கும். அவை மிகச் சாமர்த்தியமுடையவை யாதலின் சிங்கம் திரும்பிப் பார்க்குமுன் மாயமாகப் பறந்து மோடி விடும். இவ்வாறு அம்புகளாலும் நாய்களாலும் இம்சிக்கப்பட்டு மரத்தைத் தேடிச் செல்லுகையில், சிங்கமானது, இரத்தம் வடிய வடிய நடந்து, வழியிலேயே இறந்து போய்விடும்.

இந்நாட்டில் பட்டு விசேஷமாக உண்டாகின்றது. வியாபாரிகள் அதைப் பல தேசங்களுக்கும் நதிவழியே கொண்டு சென்று விற்பார்கள். இந்நாட்டாருக்கு வர்த்தகமே முக்கிய ஜீவனம். அவர்களது நாணய மெல்லாம் காகிதந்தான். அவர்கள் ஆயுதப் பயிற்சியில் தேர்ந்தவர்கள்.

இங்கிருந்து கத்தேக்குத் திரும்பிச் செல்லும் வழியில், பத்து நாட் பயணத்தில் ஸிடின்பூ என்னும் பட்டணமும், அங்கிருந்து இருபது நாட் பயணத்தில் ஜின்குயியும், அங்குவிட்டு நாலு நாட்பயணத்தில் தென்றிசையில் பலான்பூ வென்னும் பட்டணமுமிருக்கின்றன. அவ்வூர்களிலுள்ளவரெல்லாம் விக்கிரகாராதனைக்காரர்கள்; இறந்தவர்களைத் தகனம் செய்பவர்கள்.

அங்கு சில கிறிஸ்தவர்களும், அவர்களது கோயிலொன்றுங்கூட வுண்டு.

அவர்களெல்லாரும் சக்கரவர்த்திக்கு அடங்கினவர்கள். அவர்கள் வழங்குவது காகித நாணயம். அவர்கள் பட்டு பீதாம்பரங்களும் அதி நேர்த்தியான "லாவ்" என்னும் துணியையும் நெய்கிறார்கள்.

பலான்பூவுக்குக் கீழ்ப்பட்டுள்ள நகரங்கள் அநேகம் இருக்கின்றன. அந்நகரின் வழியே யோடும் நதியின் கால்வாய்களின் மூலமாய்க் கம்பலுவுக்கு வியாபாரச் சரக்குகள் கொண்டு போகப்படுகின்றன.

இனி அவ்வூரைவிட்டு மூன்று நாட்பயணத்தில் தென்றிசையில் கத்தே மாகாணத்திலுள்ள சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்ட வியாங்கு என்னும் பெரிய நகரத்தைப்பற்றிப் பேசுவோம். அவ்வூரார் விக்கிரகாராதனைக்காரர்கள்; இறந்தவரின் பிரேதங்களைக் கொளுத்துபவர்கள்; மல்பெரி காகிதத்துண்டையே நாணயமாக வழங்குபவர்கள். அவ்வூரிலும் அவ்வூரைச் சேர்ந்த பிரதேசங்களிலுமுள்ள மண் உப்பு மண்ணா யிருப்பதினால், அவ்வூரார் அதனின்றும் பின்வருமாறு உப்புசெய்கின்றனர்:—அவர்கள் மண்ணை மலைபோற் குவித்து அதன்மேல் தண்ணீரை யூற்றுவார்கள். அது மண்ணிலுள்ள உப்பை யிழுத்துக்கொண்டு, அம்மலையைச் சுற்றிலும் வெட்டப்படிருக்கும் வாய்க்கால்களின் வழியேயோடி அவற்றினிறுதியிலுள்ள சட்டிகளில் விழும். பின்பு இந்நீரைக் காய்ச்சுவார்கள். அது அப்பொழுது பார்ப்பதற் கழகான வெள்ளையுப்பாக உறைந்து விடும். இவ்வுப்பு வெளி நாடுகளில் விலையாவதால் இதனால் இந்நாட்டாருக்கும் சக்கரவர்த்திக்கும் விசேஷமான லாபமுண்டாகின்றது.

இந்நாட்டில் அதிக ருசியுள்ள கோவைப் பழங்கள் உண்டாகின்றன. அவைகள் ஒவ்வொன்றும் இரண்டு ராத்தல் பளுவுள்ளவை.

சியாங்கு நகரத்துக்கு ஐந்து நாட்பயணத்துக்கப்பால் தென்றிசையில் சியாங்லி யென்னும் வேறொரு நகரமிருக்கின்றது. அவ்வூருக்குச் செல்லும் வழியில் சக்கரவர்த்திக்குட்பட்ட அநேக நகரங்களும் கோட்டைகளும், வியாபாரக் கப்பல்கள் வெகு சௌகரியமாகப் போக்கு வரவு செய்யக்கூடிய நதியொன்றும் உண்டு.

அங்கிருந்து பின்னும் ஆறு நாட்பயணதூரத்தில், தென்றிசையில், துடின்பூ வென்னும் பெரிய நகரமும், அதே பெயருள்ள அழகான ராஜ்யமுமிருக்கின்றது. அதை 1272-ம் வருஷத்தில் சீனச்சக்கரவர்த்தியானவர் அதன் அரசனிடமிருந்து பிடுங்கித் தன் வசமாக்கிக்கொண்டார். அதன் அதிகாரத்துக்குக் கீழ் பதினொரு வேறு அழகிய நகரங்கள் உள்ளன. அவையனைத்தும் வியாபாரத்திற்குப் பெயர் போனவை. அங்குள்ள தோட்டங்கள் வெகு ரம்மியமாகவும், அவைகளிலுண்டாகும். பழ வகைகள் வெகு ருசியாகவுமிருக்கும். தவிர அங்கு பட்டு மித மிஞ்சியுண்டாகின்றது.

அந்நாட்டுப் பூர்வீக அரசன் மேற் சொல்லிய பதினொரு நகரங்களை யாண்டுவரும் பொருட்டுத் தமது பிரபுக்களிலொருவனான லுகன்ஸர் என்பவனை எண்ணாயிரம் குதிரைச் சேனையுடன் அனுப்பி வைத்தார். அவன் தமக்கு விரோதமாகக் கிளம்பியபொழுது அவர் தமது வேறு இரண்டு பிரபுக்களை ஒரு லக்ஷம் குதிரைப் படையுடன் அனுப்பி வைத்து, அவனைத் தோற்கடித்துக் கொன்று, அவனது ஆளுகைக்குட்பட்ட நாட்டையும் தம் வசப்படுத்திக் கொண்டார்.

இதற்குத் தெற்கே ஏழு நாட்பயணத்திற்கப்பால் ஸிங்கிமாட்டு என்னும் பிரசித்திபெற்ற பட்டணமிருக்கிறது. அங்கு ஓடும் பெரிய நதியை அங்குள்ள ஜனங்கள் இரண்டாகப் பிரித்து விட்டதினால் அதன் ஒரு பாகம் கத்தேயை நோக்கிக் கிழக்காகவும், மற்றைய பாகம் மங்கியை நோக்கி மேற்காகவும் ஓடுகின்றது. இந்நதியில் போக்கு வரவு செய்யும் கணக்கற்றவும் வருணனையிலடங்காதவுமான விலை மிக்க பெரிய கப்பல்கள் இவ்விரு தேசங்களுக்கும் வேண்டிய சகல சாமான்களையும் கொண்டு வருகின்றன.

ஸிங்கிமாட்டுவின் தெற்கில் பதினாறு நாட் பயணம் வரை, பிரபலமான வியாபாரங்கள் நடைபெறும் பட்டணங்களும் நகரங்களுமே காணப்படுகின்றன. இந்நகர வாசிகளனைவரும் சீனச்சக்கரவர்த்திக்குட்பட்ட விக்கிராராதனைக்காரர்கள்.

இங்கு விட்டுப் பின்னும் பதினாறு நாட்பிரயாணத்துக்கப்பால் காமாரான் நதி ஓடுகின்றது. அது வட திசையிலுள்ள உங்கான் அல்லது பிரஸ்டர் ஜான் என்பவாது நாட்டில் உற்பத்தியாகிறதென்று சொல்லுவார்கள். அது ஆழமும், அகலமான பாரங்கொண்ட கப்பல்கள் போக வர யோக்கியமுமானது. அந்நதியில், சமுத்திரத்திக்கு ஒரு நாட் பயணமுள்ள விடத்தில், மீன்கள விசேஷமாக அகப்படுகின்றன. சாப்பாட்டு சாமான்களுடனும், மாலுமிகளுடனும், பதினைந்து குதிரைகளையும் இருபது யாத்திரிகர்களையும கொண்டு செல்லக் கூடிய கப்பல்கள் பதினையாயிரம் இந்நதியில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவைதான் சீனச் சக்கரவர்த்தியின் கப்பற்படை. தமக்குக் கீழ்ப்பட்ட எந்தத் தீவிலாயினும் அல்லது தூர

தேசத்திலாயினும் கலகமுண்டாகி விட்டால் அக்கலத்தை அக்கணமே அடக்கப்புறப்படு நிமித்தம் இப்படை இங்கு சித்தமாக வைக்கப்பட்டிருக்கின்றது. இந்நதிக் கரையில், இக்கப்பல்கள் தங்கியிருக்கும் இடத்துக்குப் பக்கத்தில் கோய்கன்ஸா என்னும் சிறிய பட்டணமும், அதற் கெதிராக குவான்ஸா என்னும் பெரிய பட்டணமும் இருக்கின்றன.

இந்நதிக்கு அப்பாலுள்ளதுதான் மிகப் பெருமை பொருந்திய மங்கி யென்னும் ராஜ்யம்.

இதுவரை எழுதியவற்றில் கத்தேயிலுள்ள சகலம் பிராந்தியங்களும், ஒன்று விடாமலும் ஒழுங்காகவும் வர்ணிக்கப்பட்டிருப்பதாக எண்ணக்கூடாது; கத்தேயிலுள்ள தேசங்களில் இருபதிலொரு பங்கைப்பற்றிக்கூட இங்கு எழுதப்படவில்லை.

இந்நாட்டின் வழியே செல்கையில், தான் பார்த்த பட்டணங்களை மாத்திரமே மார்க்கோ வானவர் வர்ணித்திருக்கிறாரே யன்றி, வழியின் இருபக்கமும், விலகி நெடுந் தூரத்திலிருந்தவைகளை வருணிக்காமல் விட்டிருக்கின்றார்.

பெண் கல்யாணம்.

(காவேரிக் கரையில் பிறந்தவள்)

ஜானகியின் கல்யாணம் அதிவிமரிசையாக நடக்கவேண்டு மென்பது அவள் பெற்றோர்களின் விருப்பம். சாமிநாதய்யருக்கு சம்பளம் ரூ. 50 தான் என்றாலும் மருமகனுக்கு ரூ. 2,000 வரையில் சீர் செய்வதாக ஒப்புக்கொண்டிருந்தார். மணமகளின் தாயாகிய கமலத்திற்கு ரூ. 2,000 த்துடன் இன்னம் ரூ. 500 சேர்த்து செய்யவேண்டு மென்ற ஆவல். ஏனெனில் மருமகன் நல்ல அழகாயிருப்பதால் ஒரு வைரமோதிரம் செய்து போடவேண்டு மென்பது. 'சேர்த்து வைத்திருந்த ரூ. 1,000 போதாதென்று ரூ. 2,000 கடன் வாங்கியிருக்கிறாரே, அதுடன் ஒரு ஐநூறு வாங்கினால் என்ன? 2,000 த்தைவிட 500 பெரிய தொகையா?' என்று மனம் நொந்துகொண்டாள்.

"இதோ பாருங்கோ!" என்று கமலம் வாசலில் உட்கார்ந்திருந்த புருஷனை ரேழிக்கழைத்தாள். "உங்களைத் தானே" என்றாள் மறுபடியும்.

"ஏண்டி! என்ன விசேஷம்" என்று சாமிநாதையர் ரேழியில் வந்துட்கார்ந்தார்.

கமலம் ரேழிக்கதவருகில் நின்றுகொண்டு "இப்பொழுதுதான் கோடியாத்து அத்தை வந்துவிட்டுப் போனார்."

சாமி. (அவசரத்துடன்)—"சரி அவளுக்கென்ன, சீக்கிரம் சொல்லு."

கம. (கண்ணீருதிர்த்து) "பார்த்தீர்களா? நான் வாயைத் திறப்பதற்கு முன் அவசரப்படுகிறீர்களே."

சாமி. (நயமாய்) "கமலம்! இந்தக் கல்யாணக் கவலையில் நான் முழுகிக்கிடக்கிறேன். இந்த ரூ. 2,000 த்தையும் நான் எப்படி அடைக்கப்போகிறேன்? நமக்கு இன்னொரு பெண் இருக்கிறாள். நீ இந்த சமயத்தில் அனாவசியமாய் சாகஸம் பண்ணுகிறாயே.

கமலம் (கண்ணீரை அதிகப்படுத்திக்கொண்டு) "நான சொல்லுவது, செய்வது எல்லாம் உங்களுக்குக் குற்றமாகத்தான் படுகிறது. உங்களுக்கிருக்கும் கவலை எனக்கில்லையா? நீங்கள் கஷ்டப்பட்டால் எனக்கில்லையோ?

சாமிநாதையர் இந்த சாகஸமெல்லாம் எதில் வந்து மோதுமோ என்று யோசனையுடன் அவளைப் பார்க்கிறார்.

கமலம் "கோடியாத்து அத்தை வந்து வெகுநேரம் இருந்தார்."

சாமி "ஆமாம். அவளுக்கென்ன?"

கமலம் "அவருக்கொன்றுமில்லை. நமக்காகத்தான். 'இருந்திருந்து இப்பொழுதுதான் கல்யாணம் பண்ணுகிறாய். இதுதானே முதல் கல்யாணம். இதைச் சிறக்க பண்ணவேண்டாமா?' என்கிறார்.

சாமி. "ஆனால் நாம் சிறக்கப்பண்ணப் போவதில்லை என்று தீர்மானித்து விட்டாளா? நான் ரூ. 2,000 கடன் வாங்கினது எதற்காக?

கம. "அலமேலு பெண் கல்யாணத்திற்கு மாப்பிள்ளைக்கு ரூ. 1,000 கடுக்கனுடன் ரூ. 500 க்கு மோதிரமும் வாங்கினார்களாம். கடுக்கனுக்கும் மோதிரத்துக்கும் ஒத்திருக்கிறதென்று எல்லோரும் மெச்சிக் கொண்டார்களாம்."

சாமி. "அலமேலு புருஷனுக்கு ஏற்பட்ட கீர்த்தி எனக்கு வேண்டாம்."

கம. "அலமேலு புருஷனுக்கு என்ன உத்தியோகமா? மாதமாதம் சம்பளம் வருகிறதா? ஒன்றுமில்லை. உனது புருஷருக்கு சம்பளம் கிடைக்கிறதே. கடன் ஒரு நிமிஷத்தில் அடைந்து விடாதா" என்று அந்த அத்தை விடமாட்டேனென்று பொரிகிறார்."

சாமி. "ஆமாம், வயதாய் விட்டதல்லவா? பொரியவேண்டிய காலம் தான்."

கம. (புருஷன் பேசினது காதில் விழவில்லை போல் நடித்து) "'ஏண்டி! இப்பொழுது செய்தால் தானே! பிறகு நாமென்ன மாப்பிள்ளைக்கு பண்ணப்போகிறோம்? அவனுக்குந்தானென்ன யார் செய்யப்போகிறார்கள்? நீங்களே இவ்வளவு கணக்கு பார்க்கலாமா' என்று அத்தை சொல்லுகிறார்."

சாமி. "ஏதோ ஒரு கிழவி என்னமோ சொன்னாளாம். அதைச் சொல்லுவதற்காக என்னை அவசரமாக உள்ளே அழைக்கிறாய். இனி அவள் உன்னிடம் சொன்னது முழுதும் என்னிடம் சொல்லப் போகிறாயோ"?

கம. (அழுது கொண்டு) "அந்த அத்தை எனது தாயாருக்கு நெருங்கின பந்து என்பது உங்களுக்குத் தெரியாதோ? வேண்டுமென்று எனது பிறந்தகத்தவர்களை அலக்ஷியம் செய்கிறீர்கள். அவாத்து சீனு வேட்டகத்துப்பேர்களை தலையில் வைத்துக்கொண்டு தாங்குகிறார். என்னமோ நான் பிறந்த வேளை இப்படி."

சாமி. (உடல்குலுங்க நகைத்து) ஆமாடி ஆமாம்! அந்தக் கிழவி ரொம்ப நெருங்கிய பந்துதான். ஏதோ ஒரு பழமொழி சொல்லுவார்களே "ஆசானுக்குபீச்சான்—அப்புறம் என்னடி சொல்லேன் மறந்து விட்டேனே."

கம. (தனது புருஷன் பேச்சை மாற்றுவதற்காக வலை வீசுகிறார் என்பதை அறிந்தும், தனக்கு ஞாபக சக்தி அதிக மென்பதை வெளிப்படுத்த வேணுமென்று) "ஆசானுக்கு பீச்சான் மதினிக்கு உடன் பிறந்தான் என்பார்கள்."

சாமி. "ஆமாம், இன்னொன்று சொல்லுவார்களே. அதைச் சொல்லேன்."

கம. (புருஷன் சொல்வதை அறிந்தும் இம்முறை ஏமாறக் கூடாதென்று முகத்தைச் சுளித்து) "எனக்குத் தெரியாது"

சாமி. (தன் மனைவி முன் ஜாக்கிரதைக்காக அப்படிச் செய்கிறாள் என்பதை அறிந்து)

"நெல்லுக்குத்துக்காரி நேர் உடன் பிறந்தாள்" அதுதானேடி. நீ மறந்து விட்டாயே.

கம. (கண்ணீரைப் பெருக்கி) "ஆமாம் எனது பிறந்தகத்தவர்களெல்லோரும் நெல்லுக்குத் துத்காரிகள் தான்."

சாமி. (வீழ்ந்தாள் வலையில் என்று சந்தோஷித்து மோதிரப்பேச்சுஎப்படியாவதுமறையட்டும் என்று) "அந்த அத்தை உனது தாயாருக்கு இரண்டு விட்ட அத்தையின் நாலுவிட்ட பேத்தி யல்லவா"

கம. (மிக்க கோபத்துடன்) "என்ன உங்களுக்கு இத்தனை பொல்லாங்கு? அந்த அத்தை எனது தாயாரின் சிறிய அத்தையின் நாத்தனாரின் ஒன்றுவிட்ட பேத்தி யாச்சே. நாலும் விடவில்லை. எட்டும் விடவில்லை."

சாமி. "பத்துவிட்ட உறவு. நாலுவிட்டதென்றேனே. பிசகு தான்! உனது தாயாருக்கு நேர் சிறிய அத்தை உண்டோ? அல்லது இரண்டுவிட்ட சிறிய அத்தையோ?"

கம. (தனது புருஷன் பேச்சை மறைக்கிறார். அதற் கிடங்கொடுக்கக் கூடாதென்று) "நேற்று மீனுவாத்தில் ஒரு வைர மோதிரம் பார்த்தேன். அந்த வியாபாரியும் அங்கு தானிருந்தார். விலை என்ன என்றேன். ரூபா 500க்கு குறையாதென்றார். ஆனால் அதிலிருந்த ஜிலு ஜிலுப்பு ரூ. 1000 கொடுக்கலாம் போலிருந்தது."

சாமிநாதையர். வாசலை ஆவலுடன் பார்க்கிறார்.

கம. (தன் புருஷன் கருத்தை யுணர்ந்து அதை அசட்டை செய்து) "நீங்கள் கூட அந்த மோதிரத்தைப் பார்த்தால் 1000க்கு குறையாதென்று எண்ணுவீர்கள்."

சாமி. "கொஞ்சம் மோர்த் தீர்த்தம் கொண்டு வாயேன்."

கம. (புருஷன் செய்யும் தந்திரத்தை அறிந்து "அப்படியா, நான் இந்த இடத்தை விட்டு நகரப்போவதில்லை" என்று தீர்மானித்து)

"ஜானகி! கொஞ்சம் மோர் தீர்த்தம் கொண்டுவா."

ஜானகி அடுத்த வீட்டிலிருக்கும் சங்கரியுடன் பேசிக்கொண்டிருந்தாள். இன்னம் கொஞ்சம் உரத்த சத்தத்துடன் கூப்பிட்டிருந்தால் ஜானகியின் காதுக்கெட்டியிருக்கும். ஆனால் அப்படி உரக்கக் கூப்பிட்டால் புருஷனுக்கு சந்தேகம் ஏற்படும். "நீ தான் கொண்டு வாயேன்." என்று தன்னை சொல்லுவார் என்று பயந்து ஜானகி சமையலறையில் இருப்பதுபோல் மெதுவாய்க் கூப்பிட்டாள்.

கம. "ஆமாம், நீங்கள் தான் சொல்லுங்களேன். ஒரு ஐந்நூறு ஒரு பிரமாதமா? நாளைக்கு நமது குழந்தைதான் என்ன எண்ணிக் கொள்வாள்? நமது தகப்பனார் இத்தனை கண்டிப்பாயிருந்தாரே என்று எண்ணமாட்டாளா?"

சாமி. (ஆமாம், அவளொன்றும் நினைக்க மாட்டாள். இவளாகக் கதை கட்டுகிறாள் என்று எண்ணிக்கொண்டு) "ஐயோ! நெஞ்சு உலர்ந்து போகிறது."

கம. "ஊரில் எல்லோரும் சொல்லுகிறார்கள். மோதிரமில்லாமல் கடுக்கனென்ன என்கிறார்கள்: உத்தியோக மில்லாதவர்களெல்லோரும் எத்தனையோ செய்கிறார்கள். இவருக்கு அத்தனை என்ன கருமித்தனம்? என்று சகலரும் சொல்லுகிறார்."

சாமி. "நாக்கு வறண்டு போகிறதே."

கம. "நான் சொல்வதை காதிற் போட்டுக் கொள்ளாமல் அப்படி என்ன தாகம்? இப்பொழுதுதானே காப்பி சாப்பிட்டீர்கள்?"

சாமி. "கொஞ்சம் வெறும் தீர்த்தமாவது கொண்டு வாயேன்."

கம. கொண்டு வருகிறேன். மீனுவாத்திலிருந்து மோதிரத்தைக் கொண்டு வரச்சொல்லட்டுமா?

சாமி. (திடீரென்று எழுந்திருந்து) அடாடா! மறந்து விட்டேனே. வேம்பு ஆத்துக்கு வரச் சொன்னான் என்று சவுக்கத்தை மேலே போட்டுக்கொள்கிறார்.

கம. (சவுக்கத்தை இழுத்துத் தன்னிடம் வைத்துக்கொண்டு) வேம்பு பெரிய வம்புக்காரன். சதா சீட்டாடுகிறான். அவனுடனென்ன?

சாமி. "ஆனால் சரி, உள்ளே போகலாம் வா" என்று கூடத்திற்கு வருகிறார்.

கமலம் புருஷன் சவுக்கத்தைக் கையிலெடுத்துக்கொண்டு வாசற் கதவைத்தாளிடத் திரும்புகிறாள். அப்பொழுது கொல்லைக் கதவு திறந்த சத்தம் கேட்டது. "ஆஹா மோசம் போனேன்" என்று திரும்பிப் பார்த்தாள். அவள் பயந்தபடியே கொடியில் தொங்கிக் கொண்டிருந்த அங்க வஸ்திரத்தைப் போட்டுக்கொண்டு சாமிநாதையர் கொல்லைப் பக்கமாகக் கம்பி நீட்டி விட்டார்.

"அடியே! இன்று ஒரு சிநேகிதர் சாப்பிட வருவார். நன்றாய் சமைத்து வை" என்று சாமிநாதையர் கூறுவது வாசலிலிருந்து பேசுவதுபோல் கேட்டது. அதற்குள் பக்கம் ஓடி விட்டாரே என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டு கொடியிலிருந்த அங்கவஸ்திரத்தை எடுத்து வைக்காமலிருந்து விட்டோமே என்று மனம் நொந்து கொண்டாள். இரவில் பார்த்துக் கொள்ளலாம் என்று மனதை தைரியப்படுத்திக்கொண்டாள். விருந்தினர் வரப்போவதால் அடுத்த வீட்டிற்குப் போய் தனது மகளை ஒத்தாசைக்கு அழைத்து வந்தாள். சமையல் நன்றாகத் தெரிந்தவளாயிருப்பதுடன் தன் சமையலைப் பற்றி பலர் புகழவேண்டுமென்ற அவா உடையவளாதலால் புருஷன் மேலிருந்த மனத்தாங்கலை மறந்து சுறுசுறுப்பாக சமையலுக்காரம்பித்தாள்.

ஒரு கனவு.

(ஸ்ரீமதி குகப்ரியை)

ஆ! ஆ! என்ன ஆனந்தமான காட்சி. கோவிலும் கோபுரமும் மிகுந்த அழகுடன் விளங்கியது. உள்ளே நுழையும் பொழுதே என்னை யறியாமலே என் தேகம் பரவச மடைந்தது. நாற்புரத்து கோபுரங்களையும் தூபிகளையும் காணும் பொழுதே இதுவரை என்றும் அனுபவித்திராத ஓர் புது வகையான இன்ப முண்டாயிற்று. கும்பிட்ட கைகளுடனும் ஆனந்தக் கடலில் மிதக்கும் உள்ளத்துடனும் நாற்புரமும் நோக்கினேன். ஆ! ஆ! அவ்வாலயத்தின் சிறப்பை என்னாற் சொல்லவும் முடியுமோ. எப்படி முடியும்; அனுபவித்தவர்க்கன்றோ தெரியும் அதன் சிறப்பு. இளங் கருங் கற்களினாற் செய்த சிலைகள் அங்கிருந்த தூண்களை அலங்கரித்தன. விநாயகர் ஷண்முகர் இவ்விரு சிலைகளும் பக்கத்துக்கு ஒவ்வொன்றாய் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு காவல் புரிபவர்கள்போல் தோன்றின. அதை யடுத்தாற்போல் ஒரு புறம் பிக்ஷாடன மூர்த்தியும் மற்றொரு புறம் யானைத்தோல் போர்த்த நடராஜ மூர்த்தியும் செதுக்கப்பெற்றிருந்தன. அவைகளைச் செய்த சிற்பி எவ்வளவு கை வன்மையுள்ளவன்! அதை யடுத்துக் காளியும் காலினாற் காதிற்குண்டலம் அணியும் நடன மூர்த்தி

யுமிருந்தன. அந்த மண்டபமுழுதிலு மிருந்த மற்றெல்லாச் சிலைகளும் அம்பலவாணருடைய திருத்தாண்டவத்தைக் குறிப்பதாகவே இருந்தன. அச்சிலைகளின் நேர்த்தியும் பரிசுத்தமான அக்கோயிலின் தெய்விகத் தன்மையும் அது எந்தக் கோயில் என்பதை என்னாற் கண்டறிய முடியவில்லை. சிதம்பரம் கனக சபையோ? அதுவுமன்று. மதுரை வெள்ளியம்பலமோ? அதுவுமன்று. பேரூர் நடன சபையோ? அதுவுமல்ல. இம்மூன்றிடங்களிலுள்ள ஒவ்வொரு வஸ்துக் காட்சியும் ஒருங்கே இங்கு காணப்படுகிறதே என்று எண்ணியவாறே சிலைகளிருக்குமிடம் தாண்டி எம்பெருமான் ஆனந்த, தாண்டவமாடுமிடத்தை நெருங்கினேன். கங்கையும் இளம்பிறையும் விளங்கும் ஜடாமகுடத்தையும் திரிபுண்டரமும் திலகமும் திருநோக்கும் விளங்குகின்ற நெற்றியையும், நறுங்குமிழ்போன்ற நாசியழகையும், அஞ்சேல் என்று அன்பர்களுக்கு அருளும் திருவாயினழகையும், மானும், மழுவும், வரதமும், அபயமும் கொடுக்கின்ற மலர்க் கரங்களினழகையும், செஞ்சுடர்போன்ற திருமேனியழகையும், ஆனந்த தாண்டவத்தையும் கண்டு கரை கடந்த ஆனந்தமடைந்து, ஆனந்தக் கண்ணீர் ஊற்று நீர்போல் சுரந்து இரு கன்னங்களின் வழியாய் ஓட, உடல் குழைந்து சிலிர்த்துச் சிலிர்த்து மயிர்க் கூச்செறிந்து, மனங்கனிந்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி, படபடவென்று பதறிப் பரவசமாகிய நான் என்னை யறியாமலே "சம்போ, மகாதேவா, ஆனந்த மூர்த்தி, அடியவர்க்கெளியனே, கருணைக் கடலே, காருண்ய வள்ளலே, என்னாண்டவனே, என் ஐயனே, மெய்யனே, அறிவினுக்கறிவே, என் இன்னுயிர்த்துணையே, இன்பவமுதே, எல்லாம் வல்ல இறைவனே, நல்லோர்க் கருளும் நாயகமே, முப்புரமெரித்த முன்னவனே, முத்தொழில் நடத்தும் முதல்வனே, மூவாமருந்தே, முக்கண்ணனே, கண்ணுண்மணியே, கண்ணுதலே" என்று பலவாறு தோத்தரித்து அசையாது மரம்போல் நின்றேன். முயலகன் என்னை விழித்து நோக்குவதுபோலும் பதஞ்சலி வியாக்கிர பாதர்கள் இருவரும் கடைக்கண்ணால் பார்ப்பது போலவும் தோன்றிற்று. முயலகனை நானும் வெருண்டு நோக்கினேன். கொஞ்சங் கொஞ்சமாக அவன் முகம் மாறத்தொடங்கிற்று. சிங்கமுகாசுரன் போலவும் உடல் எழுகினால் செய்யப்பட்டிருப்பது போலவும் தோன்றிற்று. கை நகங்கள் முதலையின் விரல்கள் போலவும், உடல் நான் இதுவரை கண்டிராத ஒரு துஷ்ட மிருகத்தைப்போலும் தோன்றிற்று. நிமிர்ந்தேன். பதஞ்சலி வியாக்கிரபாதர்கள் நின்றிருந்த விடத்தில் எந்த ஜாதி எந்த தேசம் என்று நிர்ணயிக்க முடியாத ஒரு வடிவழகியும் ஒரு சுந்தர புருஷனும் நின்றிருந்தார்கள்.

இவ்விருவருக்கும் நடுவில் அழகே உருவெடுத்து வந்தாற்போல் கோடிசூரியனுக் கொப்பான பிரகாசமுள்ள ஒரு 5, 6 வயது குழந்தை சுருண்ட குழல்கள் அசைய, உதடுகளில் புன்னகை தவழ, ஒரு காலால் முயலகன் புஜத்தை மிதித்துக்கொண்டு சூலத்தால் அவன் புஜத்தைக் குத்திக்கொண்டிருந்தான். யார் இது? வேலனோ? ஆனால் வேலாயுதத்தைக் காணோமே என்று எண்ணினேன். உடனே மேகம் மறைப்பதுபோல் தோன்றிற்று. அந்த அரிய காட்சி அகன்றது. மூன்று பீடங்கள் காணப்பட்டன. ஒவ்வொன்றும் நவரத்தினங்களினால் இழைக்கப்பட்டிருந்தன. அவைகளின் ஓரத்தில், பிதா, சுதன், பரிசுத்த ஆவி, என்று பொன்னிறமான எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் எழுத்துக்கள் மறைய மூன்று பீடங்களிலும் பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் வீற்றிருக்கக்கண்டேன். மூவருடைய சிரசிலும் அக்

கினி கொழுந்து விட்டெரிவதுபோல் தோன்றிற்று. மிகுந்த அழகுடனும் சோபையுடனும் திகழ்ந்த அக்காட்சியைக் கண் குளிரக்கண்டேன். என்னை யறியாமலே ஆனந்தம் பொங்கிற்று. கண் கொட்டாமல் அக்காட்சியிலேயே லயித்து நிற்கையில் தலையிலிருந்த சுவாலை விக்கிரக முழுவதும் தோன்ற, மூன்று மூர்த்திகளும் ஒரே அக்கினிப் பிழம்பாய்த் தோன்ற இருமருங்கிலுமிருந்த இரண்டும் சேர்ந்து மூன்றும் ஒன்றாயிற்று. யாரோ 'அண்ணாமலைக்கு அரோஹரா' என்று கூவுவதுபோற் கேட்டது. அப்பிழம்பின் நடுவே ஒரு மரத்தடியில் சின்முத்திரைக்கையுடன் கூடிய ஓர் உருவம் தோன்றி மறு விநாடி மறைந்தது. நான் திகைத்து நின்று விட்டேன். ஒன்றின் பின் ஒன்றாய்க் கண்ட அவ்வற்புதக் காட்சியைக் கண்ட யார்தான் திகைக்கமாட்டார். மறு நிமிஷம் ஆடவரும் பெண்டிரும் கைகளிற் சந்தனக் கட்டைகளை எடுத்து வந்து ஒவ்வொன்றாய்ப் போட ஆரம்பித்தார்கள். ஆ! இதென்ன மாயம்! அவர்கள் யார்? பார்சி வகுப்பினான்றோ? இதன் கருத்தென்ன, கருணாநிதி? எனக்கொன்றும் புரியவில்லையே என்றென் உரத்த சத்தமாய் கத்தினேன். என் தலைக்குமேல் ஒரு இடி இடித்தது. மிகுந்த பயத்துடன் நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தேன். இளம்பிறைச் சந்திரனுக்கு நடுவில் தோன்றிய ஒரு மலர் முகத்தைக் கண்டேன். அச்சுந்தர வடிவத்தின் வாயிலிருந்து 'எல்லாம் ஒன்றுதான்' என்ற சொல் என் காதில் ஒலித்தது. திடீரென்று விழித்தேன். எல்லாம் கனவுதான்! வீட்டில் குழந்தைகளுக்கு நடுவில் நான் படுத்திருந்தேன். ஒரு குழந்தை அழுது கொண்டிருந்தது. மற்றக் குழந்தைகள் படுக்கையில் மூலைக்கொருவராய்ப் புரண்டுகொண்டு, 'கோலி, பம்பரம், மாஞ்சானூல், நான் கொடுக்கமாட்டேன்' என்று தூக்கக் கலக்கத்தில் உளறிக்கொண்டிருந்தார்கள்.

நிராசை அல்லது நீங்காத் துயரம்.

சகோதரி வி. பாலம்மாள்.

(காபி ரைட்).

(1-வது அதிகாரம்.)

"ஏனப்பா, சங்கரா, நீயேன் இன்னம் கண் விழித்திருக்கிறாய். இரவு மணி பன்னிரண்டு இருக்குமே. நெடுநேரம் விழித்திருந்தால் உன் உடம்புக்காகாது. படுத்துத் தூங்கப்பா" என்று மெல்லிய குரலில் பொன்னம்மாள் மொழிந்தாள். "இல்லையம்மா. உனக்கு இன்னொரு முறை மருந்தைக் கொடுத்துவிட்டுப் படுக்கலாமென்றிருக்கிறேன். உன் உடம்பு குணமானால் தானே என்னை நீ கவனித்துக் கொள்ளலாம்" என்று பதிலுரைத்தான் சங்கரன். "இன்னமெவ்வளவு நாள் இவ்விதம் படுத்த படுக்கையாய்க் கிடக்கப்போகிறேனோ தெரியவில்லையே. என் பாவி கண் மூடின பின்பாவது நீ எல்லாரையும்போல் சௌக்கியமாயிருப்பாய்" என்று பொன்னம்மாள் சொன்னதும் துக்கத்தால் அவள் தொண்டை கம்மிற்று. சங்கரன் மலமல வென்று கண்ணீர் விடுத்தான். சிறிது நேரம் இருவரும் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தார்கள். மனதை பொருவாறு தெளிய வைத்துக்கொண்டு மகனை நோக்கி "ஆனால் இப்போதும் பெண்ணை யனுப்ப முடியாதென்றே உன் மாமன் எழுதி விட்டாரா? என் புத்திப் பிசகால் விளைந்ததை நீயும் அனுபவிக்க

வேண்டி யிருக்கிறது. இதனால்தானே 'எண்ணறக் கற்றாலும் பெண் புத்தி பின் புத்தி' என்று பெரியோர் சொல்லுகிறார்கள். நான் எவ்வளவோ தவம் செய்து ஒரு பிள்ளை பிறக்குமாவென்று கண்ட கண்ட கோவில்களெல்லாம் கையெடுத்துநின்றேன். ஈசுவர கிருபையால் நீ பிறந்தாய். இவ்வேளைக்கு அரை வயிற்றுச் சாப்பாட்டிற்கு ஈசன் நமக்கு அளித்து இருக்கிறார். நீ ஒரு குடும்பியாய் சம்சாரம் செய்வதைப் பார்த்து விட்டேனாயின் என் மனக்குறை முழுதும் நீங்கிவிடும். நான் அவ்வளவிற்குக் கொடுத்துவைக்கவில்லையே. உனக்குக் கலியாணமே முடித்திராவிட்டாலும் நானிவ்வாறு துக்கப்பட இடமில்லையே. இந்த வீடும் வாசலும் உன் தந்தைக்குப் பிறகு இவ்வாறு ஒளி மழுங்கிவிட்டதே. மருமகள் வீட்டில் வந்து ஒரு நாளாவது குடித்தனம் செய்வதைப் பார்க்கமுடியாத அவ்வளவு கொடுமை நான் என்ன செய்தேன். கொடுமை புரியும் வீடுகளிலும் நாட்டுப் பெண்கள் குடித்தனம் செய்யவில்லையா. என் பாவம்! நீ பிள்ளை பிறந்த சிறுமை இப்படியா இருக்கவேண்டும்" என்று வருந்தினாள்.

"நான் எப்படியாவது இழுத்து வந்திருப்பேன். நீதான் 'ஆத்திரப்படாதே, ரசாபாசம் வேண்டாம்' என்று என்னைப் பல முறைகளில் அடக்கிவிட்டாய். காலுக்காகாத செருப்பைக் கழற்றி யெறிந்து விட்டோமென்று எண்ணிப் பேசாமலுமிருக்காது இவ்வாறு எப்போதும் துக்கப்படுகிறாய். வெளியில் எனக்குத் தலை காட்டவும்முடிகிறதில்லை. 'உங்கம்மாள் உடம்பு அசௌக்கியமாயிருக்கிறாளே. இப்போதேனும் உன் மனைவியை இவ்விடம் வரவழைக்கக் கூடாதோ' என்று என்னைக் கேட்காதாரில்லை. மனைவி பிறந்த வீட்டைவிட்டு வரமாட்டேனென்கிறாள். ஏதேனும் உத்தியோகம் சம்பாதித்துக்கொண்டு பட்டணக் கரையிலிருந்தால் ஒருகால் என்னிடம் வந்தாலும் வருவாள்' என்று நானெவ்விதம் அவர்களுக்குப் பதில் சொல்லுவேன். எனக்குக் கலியாணம் செய்யாது பிரம்மசாரியாகவே வைத்திருக்கக் கூடாதா. அதற்கென்ன செய்வது அம்மா! நீ இதையெல்லாம் நினைத்து இப்போது உன் உடம்பை அலட்டிக்கொள்ளாதே. நான் க்ஷேமமாயிருத்தல் முக்கியமன்றி எனக்கு ஒரு குடும்பமில்லையே என்று ஏன் நீ வருந்துகிறாய்? பத்து மாதம் என்னை வயிற்றில் சுமந்ததற்கு நான் என் கையாலேயே பணிவிடை செய்யக் கொடுத்து வைத்திருக்கிறேன். உன் உடம்பு குணமானதும் மற்றவை பற்றி யோசிக்கலாம்" என்று சங்கரன்தன் தாயைச் சமாதானப்படுத்தித் தூங்கச்செய்து தானும் கண்ணயர்ந்தான்.

பலவித மனக்கவலையுடனும் எண்ணத்துடனும் படுத்த சங்கரனுக்கு அவன் மனத்தோற்றமெல்லாம் கனவாய் ஏற்பட்டது. தான் தன் தாய்க்கு அசௌக்கியமெனத் தந்திகொடுத்ததும், தன் மனைவி புறப்பட்டு வந்துவிட்டது போலும், தன் குழந்தையைத் தன் தாய் உச்சி முகர்ந்து மார்போடணைத்துக் கொண்டதும் அவளுக்கு உடம்பு பாதி குணமாய் விட்டதுபோலும், மனைவி தன் தாய்க்கு வேண்டிய உபசாரங்களைச் செய்வது போலும், இவ்வாறெல்லம் கனவு கண்டு மகிழ்ந்தான். மனதிற்கு சகிக்க முடியாமலும் வெளியிற் சொல்லிக்கொள்ள முடியாமலும் இருந்த மனக்கவலை ஒருவழியாய்த் தீர்ந்தது பற்றி மனம் பூரித்தான். பெரியோர்கள் உலகவாழ்க்கையையே கனவெனக் கூறுகின்றனர். அவ்விதக் குடும்பவாழ்க்கையிலுண்டாகும் கனவினாலெவ்வளவு நேரம் மனிதன் இன்பமனுபவிக்கக்கூடும். "அப்பா! சங்கரா, எனக்குத் தலை சுற்றுகிறது. என்னமோ செய்கிறது. ஒருவாய் தீர்த்தம்கொடு" என்று கம்

மிய குரலில் தாய் சொல்லும் சொற்களால் சங்கரன் தனது ஆனந்த மயமான கனவினின்றும் கண் விழித்தெழுந்தான். பொழுது பல பலவென்று விடிந்திருந்தது. காலைப் பட்சிகள் தமது இனிய குரல் கொண்டு கூவிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலுள்ள பெண்களும் தங்கள் கரத்திலுள்ள செம்பொன் வளையல்கள் சத்தமிடும் வண்ணம் தெருவாயிற்படிக்கு சாணந்தெளித்துக் கொண்டிருந்தார்கள். வயது சென்ற ஆடவர் செம்புஸ்தாலியைக் கையிலெடுத்தும், கிழவிமார் சிறு செப்புக் குடம் இடுப்பில் வைத்தும் ஸ்னானத்திற்காக ஆற்றங்கரைக்கு வரிசையாய்ச் சென்று கொண்டிருந்தனர். தெருத் திண்ணைகளில் குழந்தைகள் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. பள்ளியில் படிக்கும் மாணவர் தமது புத்தகக் கட்டை திண்ணை மூலையில் வைத்துவிட்டு 'அம்மா! அம்பியைப்பாரு. என்னைப் படிக்க விடமாட்டேனென்கிறான்' என்றும், 'எனக்கேன் ராத்திரி தோசை கொடுக்கவில்லை' என்றும், 'ராத்திரி சுவாமி தெருவில் வந்தாரே, என்னை ஏன் எழுப்பவில்லை' என்றும் தமது தாய்மாரைக் கேட்டுக்கொண்டிருந்தனர். குழந்தை செல்லத்திடனிடம் அவள் தாய் கொடுத்திருந்த இட்டலியை சமயம் பார்த்து ஒரு காகம் கொத்திக்கொண்டு ஓடிற்று. அதிகாலை நான்கு மணிக்கே எழுப்பப்பட்டு படித்துக்கொண்டிருந்த சிறுவர்கள் இப்போதுதான் தூங்கவாரம்பித்தது கண்டு 'எழுந்திரு சூரியோதயமாகப் போகிறது. தெருவில் சாணி தெளித்தாயிற்று, திண்ணையில் பாய் சுருட்டாமல் நல்ல தூக்கமிது! விடிந்து தூங்கினால் மூதேவி வந்து விடுவாள்! எழுந்திரு, முகத்தைத் துடைத்துக் கொள்; பாயைச் சுருட்டிப் பாய் மூலை (பாய் வைக்குமிடம்) யில் வை. அம்பியையும் அழைத்துக்கொண்டு கொல்லை வாய்க்காலுக்குப் போய்ப் பல்லுத் தேய்த்துக் கொண்டு வா சீக்கிரம்! உனக்குப் பழையது போட்டு விட்டு நான் குளிக்கப்போகவேண்டும்' என்று சில தாய்மார் தமது குழந்தைகளை யதட்டிக் கொண்டிருந்தனர். மேட்டுத் தெரு கோபாலய்யர் இவ்வருஷமேனும் நிலத்தில் தக்க லாபம் எடுக்கவேண்டுமென்று உத்தரீயத்தைத்தலையிற் சுற்றி முழங்காலுக்கு மேல் இடுப்பு வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு வயல் நோக்கி வேகமாய்ச் சென்று கொண்டிருந்தார். இரவில் உறைவூற்றிவைத்திருந்த தயிரைக்கொட்டிக் கடைந்து கொண்டிருக்கும் நடுத்தர வயதுள்ள மாமிமார்கள் பெண் வயிற்றுப் பேரன் கையில் பூத்து வரும் வெண்ணெயை எடுத்தெடுத்துக் கொடுத்துக்கொண்டும், பிள்ளை வயிற்றுப் பேரனை 'சற்று இரடா ராக்ஷஸா! தயிர் கடைந்துதானே வெண்ணெய்கொடுக்கவேண்டும். வாயைப்பாரு! எல்லாம் அம்மையைக் கொண்டிருக்கு! ஆகாத்தியம் செய்கிறதைப்பார்' என்று அதட்டிக் கொண்டுமிருந்தனர். மாடு கறவையுள்ள சில பெரிய வீடுகளில் 'அம்மா! செம்பு கொடுங்கள். பால் கறக்கவேண்டும்' என்று பண்ணையாள் கேட்டுக் கொண்டிருந்தான். கூடைக்காரிகள் அக்கிரகாரத்தில் தமது பொருள்களை விற்கும் பொருட்டு ஒவ்வொருவராய் தான் முன்னே தான் முன்னே என்று சென்று கொண்டிருந்தார்கள். தலை குனிந்து தெருப் பெருக்கிக் கோலமிட்டுவிட்டுத் திரும்பும் சாலாக்ஷி அடுத்த வீட்டு மருமகளை நோக்கி "ஏண்டி சொர்ணம், நீ குளிக்கப்போக எவ்வளவு நாழிகை செல்லும். நீ போகும் பொழுது என்னை ஒரு குரல் கூப்பிட்டுவிட்டுப் போடி" என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றாள். அதிகாலையிலெழுந்து வீட்டு வேலைகளை யெல்லாம் முடித்து விட்டு ஆற்றங்கரை செல்லவிருக்கும் நாகம்மாள் 'சீக்கிரம் வந்து தொலைந்தால் தலையை முடைந்து விட்டுப் போகேன்' என்று தனது பெண்ணைத் தலை வாரிக்கொள்ள அருமையாய் அழைத்

தாள். சிற் சில வீட்டுக் குறடுகளில் கட்டிலில் விரித்த படுக்கையின் மீது உட்கார்ந்த வண்ணம் சில ஆடவர்கள் தமது செல்லப் பெட்டியிலுள்ள வெற்றிலை பாக்குப் புகையிலை எல்லாவற்றையும் குறட்டி லடைத்து சன்னமாய் அறைத்துக் கோலமிட்ட தெருவாசலுக்குத் தாராளமாகத் தமது வாயின் எச்சிலையுமிழ்ந்து செம்மண் கரையிட்டுக்கொண்டிருந்தனர். இவ்வாறு கடலூர் கிராமத்தில் அவரவர்கள் விடியற் காலையில் தத்தமது வேலைகளைச் செய்து கொண்டிருக்கக் கிராம வைத்தியன் மருந்துப் பெட்டியுடன் பொன்னம்மாள் வீடு நுழைவது கண்டு அத்தெருவிலுள்ளவர்கள் திடுக்கிட்டுத் தமக்குத் தோன்றியதைப் பேசலானார்கள். ஆற்றங்கரை செல்வதையும் விடுத்து அவ் வீட்டில் நுழைந்துவிட்டு வந்த சானுப்பாட்டி "ஐயோ! பொன்னம்மாள் இனிப்பிழைக்கமாட்டாள். ஜன்னி கண்டுவிட்டது. அந்தப் பிதற்றலில் கூடப் போனை நினைத்து 'குழந்தை ரமணி எங்கே, அவனை என்னிடம் கொடு' என்று புலம்புகிறாள். பிள்ளை தன் பெண்டாட்டியை யழைத்து வரும்படி மாமனாருக்குத் தந்தி கொடுத்திருக்கிறானாம். சிவனே என்று தனக்கு ஏற்றதுபோல் சம்பந்தம் செய்து கொண்டிருந்தால் இப்படி மனவ்யாதி கொண்டு பொன்னம்மாள் மடிய நேர்ந்திராது" என்று ஆற்றங்கரையில் வக்கணித்தாள்.

2-வது அதிகாரம்.

"தங்கம் ஏன் வருத்தத்துடன் இருக்கிறாள்? உடம்பு சரியில்லையோ? மணி ஆறு அடிக்கப் போகிறதே. குழந்தையுடன் பீச்சுக்குப் போகவில்லையா" என்று மனைவி ஞானம்பாளைக் கேட்ட வண்ணம் ஸ்ரீமான் அனந்தராமன் முன் ஹாலில். இருக்கும் நாற்காலியில் உட்கார்ந்தார். இடுப்பிலிருக்கும் குழந்தையைக் கணவன் கையில் கொடுத்துவிட்டு ஞானம்பாள் சற்றுநேரங் கழித்து 'உங்களுக்குத் தெரிந்தகாரணம் தான். வழக்கம்போல் மருமகப்பிள்ளை கடிதமெழுதியிருக்கிறார். குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்ததுபோலக் கடலூராரிடம் என்று பெண்ணைக் கொடுத்தோமோ அன்றே வருத்தத்திற்குக் குறைவேது' என்று கூறினாள். இதற்கிடையே மடியிலிருந்த குழந்தை 'அப்பா! பா—ப்பா' என்று சொல்லி விளையாட வாரம்பித்தது. ஹாலின் ஒரு மூலையில் மனக்கவலையுடன் தங்கம் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

அன—என்னவென்று எழுதியிருக்கிறான்?

ஞான—இன்னமிரண்டு நாட்களில் இவ்விடம் வரப்போகிறானாம். இத்தடவை கட்டாயமாய்ப் பெண்டாட்டியை அழைத்துப் போக வேண்டுமாம்.

அன—இதுவென்ன முட்டாள் சகவாசமாயல்லவோ இருக்கின்றது. இவனுக்குப் பத்து ரூபாய் சம்பாதிக்கத் தெரிந்தல்லவோ மனைவியை யழைத்துச் செல்லவேண்டும்.

ஞான—இதை எவ்வளவு முறை சொல்லுகிறது. தனக்காகத் தெரியவேண்டியதை நாம் எடுத்துச் சொல்லியும் கேழ்ப்பதில்லை என்றால் என்ன செய்கிறது.

அன—வந்தது வரட்டும். அந்த நாட்டுப் புரத்திற்கு சிறு குழந்தையுடன் தங்கத்தை நானனுப்பப் போவதில்லை. அது நிச்சயம்.

தங்கம்—இம்முறை கூட வராவிட்டால் இனி என் முகத்திலும் விழிக்கப் போகிறதில்லையாம்.

அன—அனுகூல மற்ற கணவன் இவ்வாறு வம்பிழுப்பதைக் காட்டிலும் அவ்விதமே செய்தல் மேன்மையாக விருக்குமென்றே நான் நினைக்கிறேன்.

ஞான—ஊரிலுள்ளவர்களுக்கு இதெல்லாம் தெரிகிறதா? ஏன் இன்னும் தங்கம் புருஷன்

வீடு செல்லவில்லை என்று ஒருவர் விடாது கேட்கிறார்களே.

அன—இந்த இடத்திலேயே அற்ப சகவாசமும் வம்பும் வீணும் அதிகமாக விருக்கிறது. ஊரார் குடும்பத்தைப் பற்றி வம்பளப்பதே இவ்விடத்தியப் பெண்டுகளுக்கு வழக்கம் போலும். நமது புதுவீடு கட்டி முடிந்துவிட்டால் பூந்தமல்லி ஹை ரோட்டைத் தேடி இவர்கள் வரமாட்டார்கள் அல்லவா.

ஞான—வரப்போகிற மருமகப்பிள்ளைக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

அன—'நீ ஒரு உத்தியோகத்திலமருவதற்கு வழி தேடிக்கொள். பிறகு பெண்ணை யனுப்புகிறேன்' என்றுதான் சொல்லப் போகிறேன்.

ஞான—அவன் பாஸ் செய்திருக்கும் பரீக்ஷைக்கு உத்தியோகமெப்படிக் கிடைக்கும்? பீ.ஏ. பாஸ் செய்தவனெல்லாம் வேலை கிடைக்காமல் திண்டாடுகிறானே.

அன—எப்படியாவது பீ.ஏ. பாஸ் செய்து தொலை என்று தலையிலடித்துக் கொண்டேன். அது தானில்லை யென்றால் இந்த வீட்டோடு தின்றுதெரித்துக்கொண்டிருக்கக் கூடாதோ? அதுவும் மாட்டேனென்று வெகு முடுக்காயிருக்கிறானே.

ஞான—கிளியை வளர்த்துப் பூனையின் கையில் தள்ளிவிட்டு இனி இதெல்லாம் பேசிப் பிரயோஜன மென்ன. அவன் வந்தால் என்னென்ன பேசுவானோ? என்ன செய்வானோ?

தங்கம்—'நீ இனியும் வராவிட்டால் என் பிள்ளையை நான் எடுத்துச்சென்று விடுவேன்' என்று எழுதியிருக்கிறார்.

அன—இதென்ன பிரிடிஷ் ராஜாங்கமா அல்லது கேள்வி முறையற்ற இடமா? தாயிடமிருக்கும் சிறு குழந்தையைத் தகப்பன் எடுத்துச் செல்ல என்ன நியாயமிருக்கிறது? அதிகப்பிரசங்கித்தனம் செய்தால் அவமானப் பட்டுப்போக வேண்டியதுதான்.

ஞான—நியாயம், அநியாயம் இதையார் சொல்லுகிறது. பெண்ணைப் புருஷன் அழைக்கும் போது ஏன் அனுப்பக் கூடாது என்று தானே அயலார் பேசுவார்கள். நமக்குள்ள கஷ்ட சுகம் யாருக்குத் தெரியும். மாமனாருக்குச் சோமன் தோய்த்துப்போட்டு, மனைவிக்கு வெற்றிலைப் பெட்டி எடுத்துக் கொடுத்து, மாமியார் முகங்கோணாது நடக்கும் பிள்ளைகள் இல்லையா. நான் செய்த பாபம்! இப்படி என் அருமைக் குழந்தைக்கு அகமுடையான் வாய்த்திருக்கிறான். குழந்தைக்கு இவ்வளவு சிறு வயதிலேயே இவ்வாறு மனக் கவலைப்படும்படி தலையில் எழுதிவிட்டிருக்கிறதே. அதற்கென்ன! ஆடுமாடுகள் கூடாத்தான் குட்டிபோட்டு விடுகின்றன. நான் பெற்ற பெருமையும் பேரிட்ட நேர்த்தியும் வளர்த்த அருமையும் எனக்கல்லவா தெரியும். அவளுக்குப் பாட்டும் படிப்பும் இன்னம் முடியவில்லையே. இப்போது தானே வீணை வாங்கியிருக்கிறது. பிடிலில் நூறு கீர்த்தனங்கள்கூட பாடமாகவில்லையே. துரைசானி வருவது வாரத்திற்கிரண்டு நாள். அவள் வரும் நாட்களில் குழந்தை யழுகிறது. பாட்டு வாத்தியார் வந்துவிடுகிறார். சில சமயம் உடம்பு சரியாயிருப்பதில்லை. இவ்வாறாக இங்கிலீஷ் பாடமும் சரியாய் நடப்பதில்லை. இதெல்லாம் போகட்டுமென்றாலும் இவனென்ன சமையற் காரன் போட்டு முகம் வேர்க்காமல் தணுக்காலில் அழுக்குப்படாமல் பெண்டாட்டியை மேன்மையாய் வைத்திருக்கப் போகிறது. மாமியார் செத்த சமயம் தங்கத்தை நான் அழைத்துப்போன பொழுது அவ்வூர்ப் பெண்டுகள்

என்னைப் படுத்திவைத்தபாடு எனக்கல்லவா தெரியும். குடத்தை இடுப்பில் வைத்து ஆற்றுக்குக் குளிக்கப்போகக் கூடாதோ வென்றும் கிறுஸ்தவச்சிபோல் இதென்ன கோணல் வகுடு என்றும் வீட்டில் அடுப்பு மூட்டிச்சமைக்கக் கூடாதோ வென்றும் இங்கேயே ஒரு மாசமாவது இருக்கக் கூடாதோ வென்றும் குழந்தையை அப்பட்டிக்காட்டுப் பிணங்கள் படுத்தி வைத்தபாடு கொஞ்சமா! இனி என் கண் இருக்க அவ்வூருக்கு என் கண்ணான குழந்தையை நானனுப்பப் போவதே இல்லை.

இவ்வாறு மெத்த கோபத்துடனும் துக்கத்துடனும் தாய் பேசி முடித்தது கண்டு தங்கம் இனி தான் ஏன் கவலைப்பட வேண்டுமென்று மனந் தெளிந்தாள்.

3-வது அதிகாரம்.

"தங்கம், நான் சொல்வதைக் கேள். நீ எவ்வளவு நாட்கள் தான் இவ்வாறு பிறந்த வீட்டிலிருக்க முடியுமென நினைக்கிறாய். என்னுடன் வசிப்பதில் உனக்கொருவித கஷ்டமுமேற்படாது. ஒரு குழந்தைக்குத் தாயாகவிருக்கும் நீ இவ்வாறு கணவனென்ற அபிமானமில்லாது தாய் தந்தையர்கள் நினைவாக விருப்பது நியாயமல்ல. பெண் கஷ்டமோ சுகமோ புருஷனுடன் அவன் வீட்டில் இருந்து கொண்டிருந்தால் மட்டுமே வீட்டாருக்கும் அப்பெண்ணிடம் மதிப்பிருக்கும். உன் தகப்பன் வயது சென்றவர். அவருக்குப் பின் உன் தாய்க்கு இவ்வீட்டில் அதிகாரமொன்றும் செல்லாது. நீ உன் மனதிற்குள் 'மலயத்வஜ பாண்டியனுக்கு அருமை மகளாக அவதரித்த மீனாக்ஷி தேவிக்கும் நமக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை' என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். இதெல்லாம் வீண் கனவு. இனியேனும் உன் புத்தியைத் தெளிய வைத்துக்கொள். நான் இனிக் கடலூர் கிராமத்திலேயே வசித்து வந்தால்தான் எனது நிலபலங்கள் அழிவுறாது கவனித்துக் கொள்ளமுடியும். வருஷ வருமானம் ஐயாயிரம் ரூபாய் வரக்கூடிய நிலங்களைக் கவனியாது மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்திற்குக் கைகட்டி அடிமை வேலை செய்வதில் எனக்கிஷ்டமில்லை. வேலை யாட்கள், சோபா, நாற்காலி, காப்பி, சோடா இவைகளெல்லாம் அங்கும் கிடைக்கச்செய்வேன். இதற்காக நீ இங்கிருக்க வேண்டாம். நாளைப் பகல் பன்னிரண்டு மணிக்கு நல்ல வேளையானதால் நீ உன் தாய் தந்தையரிடம் தெரிவித்துப் பிரயாணத்திற்கு சித்தப்படு" என்று அன்புடனும் அமைதியுடனும் சங்கரன் தன் மனைவி தங்கத்திற்கு புத்திமதி கூறினான். இவைகளைக் கேழ்க்கக் கேழ்க்க தங்கத்தின் முகம் வெறுப்புக் காட்டிற்று. பள்ளியறையின் ஒரு மூலையில் நின்று கொண்டு கோரக விருந்த முகத்தை சுவற்றின் புறம் திருப்பிக் கொண்டாள். இதைக் கண்டு சங்கரனுக்கு அளவற்ற கோபமும் வேதனையும் உண்டாயின. என்ன செய்வான். எப்படியாவது நல்ல வார்த்தையிலேயே மனைவியைப் பிறந்த வீட்டிலிருந்து அழைத்துச் சென்றுவிட்டால் பிறகு அவளைச்சீர்த்திருத்தி நற்குணவதியாகச் செய்து விடலாமென்ற எண்ணத்தால் மீண்டும் பேசவாரம்பித்தான். 'தங்கம், நான் சொல்வதைச்சிறிதும் மனதிற்கு வாங்கிக் கொள்ளாமல் அலக்ஷியம் செய்கிறாயே. உனக்கு வயது போதவில்லை என்று நினைக்கிறாய். பதினைந்து வயதிலிருந்து நமது ஹிந்துப் பெண்கள் புருஷன் வீடுசென்று மாமி மாமனைப் பணிந்து கணவனுடன் அவர்கள் வீட்டில் குடித்தனம் செய்வது வழக்கமில்லையா. ஆனால் உனக்கு அவை எல்லாம் தெரியாது. அயல் நாட்டுப் பழக்க வழக்கங்களையே நீ படித்தறிந்தவள். நம் நாட்டு வழக்கங்களை உன் தாய் உனக்குப் போதித்திருந்தாலன்றோ நீ வணங்கி

நடப்பாய். இனியேனும் நான் சொல்வதைக் கேட்டு நடப்பாயானால் உனக்கும் மேன்மை; என் குடும்பமும் அழிவுறாது நன்கு விளங்கும். உன் தாயின் துர்ப்போதனைகளை மறந்துவிடு. உன் தாய் மருமகனை அலக்ஷியம் செய்வதுபோல் நீயும் கணவனை அவமதிப்பாயானால் உன் வாழ்நாள் முழுதும் சுகமின்றி தீராத்துயரத்திற்கும் ஆளாய் விடுவாய்" என்றான். தன் தாயைப்பற்றிச் சொன்னதும் தங்கத்திற்குக் கோபம் தலைக்கேறி விட்டது. 'என்னைத்தான் உங்கள் காலில் மடுத்து விட்டார்கள். நீங்கள் எதைச் சொன்னாலும் எப்பாடு படுத்தினபோதிலும் நான் சகித்துக் கொண்டிருக்கவேண்டும். என் தாயைப்பற்றி பேசுவதற்கு உங்களுக்கென்ன அதிகாரமிருக்கிறது? அன்றே என்னை ஆறு குளம் தேடித் தள்ளிவிட்டிருந்தால் நானும்இவ்வாறு துன்பப்படாமலும் என் தாய் என்னால் வசைகேளாமலும் இருந்திருக்கலாம்.எல்லோருக்கும் வரும் சாவு எனக்கு வரமாட்டேனென்கிறதே' என்று கடுகடுத்துக் கூறினாள்.

இதுவரைப் பொறுமையுடனிருந்த சங்கரனுக்கு இவ்வார்த்தை ஈட்டியால் மார்பில் குத்தியது போல வருத்தியது. 'உனக்கு தங்கம் என்று பெயர் வைத்திருப்பது விளக்கு மாறுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியது போன்றிருக்கிறது. குட்டிச் சுவர்போல இருபது வயது ஆகியும், ஒரு குழந்தை பெற்றும் நீ பெண்பிள்ளைக்குற்ற குணம் சிறிதுமின்றி ஆடுவதும் ஓடுவதும் உரக்கச் சிரிப்பதும் இவ்வாறு காலங்கழித்து உனக்கு வழக்கமாய் விட்டது. இனி நீ சேர்ந்திருக்கப்போவது உன் மண்டையோடு தான். உன்னை ஒரு பெண்ணென்று மதித்து எனக்குப் பெண்டாக என் தாய் கலியாணம் செய்தாள். அருமை மருமகளென்று நீ ஆடிய ஆட்டத்திற்கெல்லாம் என் தாய் உட்பட்டிருந்தும் அவள் மாணுந்த காலத்தில் ஒரு வாய் தண்ணீர் வார்த்து உபசரியாத பாதகியாகிய உன்னை லக்ஷியம் செய்து மன்னித்து அழைக்க வந்த என் புத்தியைச் செருப்பாலடிக்க வேண்டும். குழந்தையைப் பார்க்கவேண்டுமென்று என் தாய் மன்றாடிய வண்ணம் உயிர்விட்டதை நான் நினைக்குந் தோறும் உன்முகத்தில் விழிக்கவும் எனக்கிஷ்டமில்லை. கடைசீ முறையாக புத்தி சொல்லிப் பார்ப்போம்என்றே இம்முறை நான் இங்கு வந்தேன். நான் வந்ததிலிருந்து நீங்கள் நடந்துகொள்ளும் மாதிரியை நான் அறியாதவனல்ல. குழந்தையை என்னிடம் கொடுத்தால் நான் தூக்கிச்சென்று விடுவேனோ என்று உன் அப்பன் அதை மடியிலேயே வைத்துக் காவல் காப்பது எனக்குத் தெரியும். கொண்ட மனைவிக்கு அடுத்தபடிதான் அவளுக்குப் பிறந்த குழந்தைமீது ஆசையுண்டாகுமன்றி வேறில்லை. கணவனென்ற லக்ஷிய புத்தியற்ற உனக்குப் பிறந்தபிள்ளைதானோ தந்தை என்று என்னை மதிக்கப் போகிறான். இனி நீ வீணாகக் கவலைப்பட்டுக் கலங்கவேண்டாம். சுகமாகப் பிறந்த வீட்டிலேயே இருந்து கொண்டிரு. ஆனால் ஒன்று மட்டும் நினைவிலிருக்கட்டும். துஷ்டனான கணவனை மணந்து கஷ்டப்படும் உத்தமிகளும் உண்டு. ஆனால் நீ உன்னையும் அவர்கள் கோஷ்டியில் சேர்த்துக் கொண்டு விடாதே. என்னை யவமதித்ததின் பலன் உனக்குக் கிடைக்காமற் போகாது. அச்சமயம் அதற்குக் காரணம் சாதுவாய் மானத்திற்கஞ்சி நடக்கும் கணவனை யவமதித்துப் பிறந்த வீட்டைப் பெரிதென்று எண்ணியதற்குப் பலன் கிடைத்ததென்று நீ நினைத்துக் கொள்ள வேண்டுமென்றி அப்பொழுது என்னை நொந்து கொள்ளுவதிற் சிறிதும் பயனில்லை. உன்னை அக்கினி சாக்ஷியாக நான் மணந்தவனாகையால் கடைசி முறையாக நான் உனக்கு நற்புத்தி கூறுகிறேன். நீ என் வீட்டில் வசித்தால்தான் உன் தமையன் உன்னைக் கவுரவிப்பான். உனக்

கும் பெருமை யுண்டு. இதைவிட்டு நீ இனியும் பிடிவாதம் செய்வாயானால் நான் இனி இவ்வீட்டில் காலடி எடுத்தும் வைக்கமாட்டேன். உன்னையும்குழந்தையையும்கட்டாயப்படுத்திச் சட்ட மூலமாக அழைத்துச் செல்ல எனக்கதிகாரமுண்டு. ஆனால் பிரியத்துடன் கணவனைப் பின்பற்றி வரவேண்டிய மனைவியைக் கட்டாயப்படுத்தி விவகார மூலமாக அழைத்துச் செல்வதில் வீண் மனஸ்தாபமும் ஊர்க் கேலியுமேற்படுமன்றி ஒற்றுமை யேற்படாதென்றஞ்சியே நான் உனக்கு புத்திமதி கூறுகிறேன். 'நான் என் புருஷனுடன் செல்லவேண்டும்' என உன் பெற்றோருக்குக் கூறி நாளைய தினம் பிரயாணத்திற்குச் சித்தமாயிரு. நமக்குக் கடவுள் அளித்திருக்கும் கஞ்சியைக் குடித்து சிறுகுடிசையில் சந்தோஷமாய்க் காலங் கழிப்போம். அடிக்கடி நாமிருவருமாய் இங்கு வந்து போகலாம். பெற்றோருக்குத் தமது குழந்தைகளைப் பிரிவதென்றால் மனம் வராதுதான். நீயன்றோ அவர்களுக்குத் தேறுதல் சொல்லி 'நான் என் கணவன் வீடு செல்ல வேண்டும்' என்று வற்புறுத்திக் கூறவேண்டும். தெரிகிறதா" என்று பேசி முடித்தான்.

நான்காவது அதிகாரம்.

அனந்தராமன் நித்திய தரித்திரம் வாய்ந்த குடும்பத்திற் பிறந்தார். சாப்பாட்டிற்கு வழியின்றிப் பதினெட்டு வயதுவரைப் பஞ்சாய்ப் பறந்தார். பம்பாயிலுள்ள மார்வாரி பிரபு ஒருவரிடம் சமையற்காரனாயமர்ந்தார். அன்றிலிருந்து மூதேவி இவரை விட்டுப்பிரிந்தாள். சமையல் வேலைபோக ஒழிந்த நேரங்களில் சற்று எழுதிப் படிக்கவும் கூட்டல் கழித்தல் கணக்குகளும் கற்று வந்தார். நாளடைவில் சமையல் வேலையை விட்டு அதே கடையில் கணக்கெழுதும் குமாஸ்தாவாக இருந்தார். சிறிது சிறிதாக வியாபார நோக்கங்களைக் கண்டறிந்தார். திருமகள் இவரைக் கண் திறந்து பார்த்து விட்டாள். இவரால் சொந்தக்காரருக்கு அளவற்ற லாபம் கிடைத்தது. முடிவில் அதே எஜமானனுடன் வியாபாரத்தில் தானும் ஒரு கூட்டாளியானார். ஐசுவரியம் சேர்ந்து விட்டது. எதிர்பாரா அதிருஷ்டத்திற்குக் காரணம் அனந்தராமன் உழைப்போ அல்லது அவர் மனைவி ஞானத்தின் அதிருஷ்டமோ என்பதை நாமேன் விவாதிக்க வேண்டும். அனந்தராமன் பம்பாயில் பெரும் பொருள் தேடி வாழ்ந்துவந்தபோதிலும் பந்துக்களுக்கு மட்டும் இவரிடம் மதிப்பென்பது இல்லாமலிருந்தது. பந்துக்கள் யாரேனும் வீடு தேடி வந்து விட்டால் ஞானத்திற்குப் பிரமாதமாய்க் கோபமுண்டாய்விடும். முகத்தால் சிடுசிடுப்பாள். 'இந்த வீடு ஒரு சத்திரமாய்விட்டது' என்பாள். மிளகுரசம், கீரைத்தண்டு இவைகளை யன்றி வேறொன்றும் சமைக்கச் சொல்லவே மாட்டாள். 'தரித்திரங்களுக்கு உடம்பெல்லாம் வயிறு தான்; இந்த வீட்டில் அப்படியில்லை' என்பாள். 'எனக்கு அயலார் வீட்டில் ஒரு வேளை சாப்பிடுவதென்றால் வெட்கமாயிருக்கும்' என்பாள். வீட்டிற்கு வந்தவர்களை 'எப்போது ஊருக்குப்போகப் போகிறீர்கள்?' என்று வேலைக்காரர்களைக்கொண்டு கேட்கச் சொல்லுவாள். இவ்வளவு உபாயங்களில் ஏதேனும் ஒன்று பலித்து வீடுவந்த விருந்தாளி ஊர் செல்லும்வரை ஞானம் பேசாதிராள். கணவனைப்பெற்ற தாய் தன் வீட்டிற்கு வந்தால் முன்போலத் தரித்திரம் வந்துவிடுமென்று ஞானம் கூறிய யோசனையை உண்மையென ஏற்றுக்கொண்டு அனந்தராமன் தன் தாயை கிராமத்திலேயே வசிக்கச்செய்து மாதம் தவறாது பத்து ரூபாய் மணியார்டர் செய்து வந்தார். பம்பாயிலேயே இருந்து கொண்டிருந்தால் தமது பிள்ளைக்கும் பெண்ணுக்கும் தக்க வரன் கிடைக்காதென்ற எண்ணத்தாலும் தமக்

குப்பின் சொத்து விஷயத்தில் கூட்டாளி மோசம் செய்து விட்டாலென்ன செய்வதென்ற அவநம்பிக்கையாலும் தமக்குள்ள பங்கைக் கூட்டாளியிடமிருந்து பெற்றுக்கொண்டு அனந்தராமன் சென்னையில் குடியேறினார். சங்கரனுக்குப் பெண் தங்கத்தை விவாகம் முடித்து, படிப்பிற்காக மருமகனை வீட்டோடு வைத்துக் கொண்டார். F. A. பரீக்ஷை தேறியதும் கிராமத்தில் தன் குடும்பக் காரியங்கள் கவனிப்பாரின்றி நஷ்டப்படுவதையும் தனித்த ஊரில் வசிப்பதையும் உத்தேசித்து சங்கரன் கடலூரிலேயே தங்கி விட்டான். இச்சமயம் சங்கரனுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அனந்தராமன் தமது மகளை நாட்டுப் புறத்திற்கு அனுப்ப மனமொவ்வாது தம்மிடமே மருமகனும் வந்திருக்க வேண்டுமென்று பெரும் பாடு பட்டார். பொன்னம்மாள் காலமாய் விட்டபடியால் இனி மருமகப்பிள்ளைக்கு நல்ல புத்தி பிறந்து சென்னைக்கே வந்து விடுவானென்றெண்ணினார். இதற்கு மாறாக மருமகன் கடலூரிலேயே வசிப்பதாகவும் மனைவியைக்கூட அழைத்துச் செல்லவேண்டுமென்றும் தீர்மானித்தது கண்டு இவர் மனம் சகிக்கவில்லை. நயத்திலும் பயத்திலும் சங்கரனுக்கு எவ்வளவோ தூரம் கூறினார். மருமகன் பிடிவாதங் கண்டு 'கொண்டவனிடம் பெண்ணை யனுப்புவதில் ஆலோசனையேன்' என்று இவர் எண்ணினார். அச்சமயம் 'பெண்ணைப் பற்றிய கஷ்டசுகம் பெற்ற தாய்க்கன்றோ தெரியும். உங்களுக்கென்ன? பேசாதிருங்கள்' என்று மனைவி ஞானம் அதட்டி அடக்கி விட்டதால் 'நீ உத்தியோகம் செய்து பட்டணக்கரையில் வசித்தாலன்றிப் பெண்ணைக் கடலூருக்கு அனுப்பவே மாட்டேன்' என்று மருமகனிடம் பிடிவாதமாய்த் தெரிவித்து விட்டார். சங்கரன் தன் மனைவியைப் பன்முறைத் தனியிலழைத்து எவ்வளவோ நல்ல வார்த்தைகள் சொல்லியும் 'என்னைப் பற்றிய க்ஷேம லாபத்தைக் கவனிப்பதில் பெற்றோர்களுக்குப் பொறுப்பு இல்லாமல் வேறு யாருக்குத்தான் உண்டு' என்று அவள் பதிலளித்தது கண்டு நிராசையுடன் அவன் தன் ஊருக்குத் திரும்பிச் சென்றான்.

(தொடரும்.)

கற்பு.

(ஸ்ரீமதி செ. ராஜம்மாள்)

ஆரிய சகோதரீ! சிந்தாமணீ!! இம்மாலை நேரத்தின் வனப்பை வர்ணிக்க என்னாலாகுமோ? வானளாவிய தென்னஞ் சோலைகளடர்ந்த இப்பூஞ்சோலையானது திருமாலை நிகர்த்த மாந்தளிர்களினாலும், தேவகணிகையரை யொத்த மல்லிகை முல்லை மாதவியாகிய • மலர்களினாலும் விளங்குவது எங்கள் மனதிற்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுக்கின்றன. ஆஹா! வசந்தனாகிய இவர்கள் நாயகன் பவனிவரும் திருநாட்களல்லவா இது.

இவைகளின் முக தரிசனம் பெறவே சரவணப்பொய்கையில் உற்பவித்த சண்முக வடிவேலன் போன்ற சோம ராஜன் உதயமாயினன். இவ்வியற்கையழகுப் பொருள்களுள் நம் சமூகமுமொன்றல்லவா; இப்பூஞ் சோலையிலுள்ள எப்பொருட்களிலும் இவ்வழகிய வாடாமல்லிகைப் புஷ்பங்களே தங்கணவர் மிகவும் வறுமை எய்திய காலத்தும் இன்சொல்லும் இன்முகமுமே வடிவினராய அன்புடன் ஏற்று பசரிக்கும் உத்தம ஸ்திரீகளை நிகர்க்கின்றன. கற்பென்ற சிறந்த பூஷணத்தை அணிந்தது

Y15m211,r7-4(m)
N26.21
207607

லன்றோ அவைகளின் வதனம் கண்டோர் மனதைக் கவருகின்றன.

கற்பே நம் சமூகத்திற்கு இன்றியமையாத ஆபரணமாகும். ஆயிரக்கணக்கான பொருள்களைச் செலவழித்து வைரங்களாலும், ரத்தினங்களாலும் அணிந்து கொள்ளும் ஆபரணங்கள் பூஷணங்களாக மாட்டா; கற்பிற்கரசிகள் மிகுதியாயுள்ள பதிகளே நீர்வளம் நிலவளம் பயிர்வளங்களாற் சிறந்து பொலிவுற்று விளங்குமென ஆன்றோர் கூறியுள்ளார்கள். நம் இந்தியா எந் நாட்டிலும் நன்னாடெனக் கீர்த்தி பெற்று விளங்கியது எக்காரணத்தினால்? கற்பிற்கரசிகளாகித் தம் நாயகரின் நற்புகழை நானிலத்தில் நனிசிறக்கச் செய்த நம் பூர்வீகப் பெண்மணிகளாலன்றோ. நம் நாட்டு ஸ்திரீகளுக்கு உடம்போடேயே நாணம் உற்பத்தியாகின்றது. புருஷனுக்கடங்கி அவன் மகிழும் வழி நடந்து அவனைப்பேணுங் கடமை பூண்ட குலமகட்கு நாணமுடைமையே உடைமையாம்.

"நற்குணமுந் நற்படையா நல்லம் புலன
மைச் சாயார்க்குஞ் சிலம்பேயணிமுரசா—
வேற்படையும் வாழுமே கண்ணு வதன மதிக்
குடைக் கீழ் ஆளுமே பெண்மை யரசு"

"ஒளிந்த மனவாக்குட லொடுக்கம்
ஒளிவாணுதலார் நாணேயாம்"

என்றுந் திருவாக்குகள் நற்குணங்களுள் நாணமே நிலையாயதென்பதை உணர்த்துவனவாம். "குலமகட் கழகு தன்கொழுநனைப்பேணுதல்," "கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை" என்னும் முதுமொழிகள் பெண்களின் கற்பிலக்கத்தை விளக்குவன; சாவித்திரிதேவி யமதர்மராஜனிடமிருந்து தன் நாயகன் உயிரை மீட்டினதும், அரிச்சந்திரன் நகர் நீங்கு காண்டத்தில் எதிர்ப்பட்ட அக்கினி தேவன் சந்திரமதி முன் செல்ல அஞ்சியோடியதும் கற்பின் உயர் தன்மையினாலன்றோ; கொடுந்தவம் புரிந்து மிகவும் வரங்கள் பெற்ற சந்நியாசிகளினும் கற்புடைய ஸ்திரீகள் மேன்மையுடையோர் என்பதற்குப் பின் வரும் கதையே சான்றாகும்.

முற்காலத்தில் இளம் பிராயமுள்ள சந்நியாசி வனத்தில் தவம்செய்து கொண்டிருந்தார். 12-வருஷம் சிரமப்பட்டுத் தவஞ்செய்த பின் அவர் தலையில் உலர்ந்த இலைகள் விழுந்தன. இதற்கென்ன காரணமென்று ஆகாயத்தை நோக்கினார். இலைகளை யுதிர்த்த கொக்கு பறந்து கொண்டிருந்தது. சில நேரத்திற்கெல்லாம் ஒரு ஜ்வாலை கிளம்பி அக்கொக்கை எரித்து விட்டது. சந்நியாசி சந்தோஷமடைந்தார். இவ்வளவு சக்தி தமக்குண்டாயிற்றே என்று மன மகிழ்ந்தார். ஒரு விதமான கர்வம் அவர் மனதைக் கவர்ந்து கொண்டது. சில நாளைக்குப் பிறகு இந்தப் பால்ய சந்நியாசி ஒரு கிராமத்தில் வீடுகள் தோறும் பிச்சை எடுத்து வருகையில் ஒரு வீட்டில் "அம்மா! பிச்சை போடு" என்று கேட்டார். அப்போது "அப்பா! கொஞ்சம் பொறு, காத்திரு," என்ற சத்தம் உள்ளே யிருந்து புறப்பட்டது. சந்நியாசி தம் மனதில் நினைத்துக் கொள்ளுகிறார்.

"அடா! இத்துஷ்டை நம்முடைய மகத்துவத்தை அறிந்து கொள்ளவில்லையே. நம்மைக் காக்க வைக்குமிவள் அநியாயமாய் இறந்து போய் விடுவாளே" என்றெண்ணிக் கொண்டார். உடனே உள்ளே யிருந்த பதிவிரதை "அடே, பையா, இங்கு கொக்குமில்லை, காகமுமில்லை" என்றாள். சந்நியாசிக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. சில நேரத்திற்கெல்லாம் அப்பதிவிரதா சிரோமணி பிச்சை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். அப்போது சந்நியாசி யவளைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து 'அம்மா! நான் நினைத்தது தங்களுக்கு எப்படித்

தெரிந்தது' என்றார். அவள் 'அடே பையா, உன்னுடைய யோகத்தை நான் அறிய மாட்டேன். யோகாப்பியாசம்தெரியாது. நான் சாதாரணமாய் இல் வாழ்க்கை புரியும் ஸ்திரீ. என்னுடைய பர்த்தா தேக அசௌக்கியமாயிருக்கிறார். அவருக்கு அமுது படைத்துக்கொண்டிருந்தேன். அது என் கடமை. நான் கலியாணமாகாத கன்னிகையா யிருந்தபோதும் என்னுடைய கடமையைச் செய்தேன். இந்த யோகத்தைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன். இம்மாதிரி செய்து வந்ததால் எனக்கு ஞான முண்டாயிற்று. நான் அது முதல் உலகிலுள்ள சகல விடங்களிலும் நடக்கும், விசேஷங்களை இங்கிருந்தபடியே அறிந்து கொள்ளுகிறேன்" என்றாள்.

'ஆண்டகைய தங்கணவரைக் கடவுளர்போல்
வேண்டலுறு கற்பினர்த மெய்யுரையினிற்கு
மீண்டையுள தெய்வதமு மாமுகிலுமென்று
வாண்டகைமை யோர்களுமவர்க்கு நிகரன்றே'

என வியந்தோதியதுங் கருதத்தக்கதே. இத்தகைய சிறப்பு வாய்ந்த கற்புக்கு ஆதாரமாகவுள்ள நாணத்தைத் தற்கால நாகரிகக்கல்வி பயிலும் சிலர் அலட்சியம் செய்கின்றனர். அதிக ஜனங்கள் குழுமி யிருக்கும் பெரிய சபையில் நம் பெண்மணிகளை நடர் நடிகளாக நடிக்கக் கற்பிக்கும் உபாத்தியாயினிகளின் அறிவை என்னென்று சொல்வோம். இப்பெண்மணிகளின் உள்ளத்தில் நாணம் முதலிய நற்குணங்களும் எவ்விதம் உறையும்? கற்பிற்கு அரணாயுள்ள நற்குணங்களுமழியுமாயின் பின் அவர்கள் நிலைமை எத்தகைய தாகும்? யமன் போன்ற இவ்வுபாத்தியாயினிகள் இப்பெண்கள்தம், உயிரினுஞ் சிறந்த நாணத்தை அபகரிப்பதிலும் அவர்தம் உயிரை நீக்குவது மேன்மையாம்.

எனதுள்ளங்கவர்ந்த நன் மணியே! சிந்தாமணியே!! மதிபோன்ற நின்மலர்ந்த முகத்தாலும், தேன்போலு மினிமை பயக்கும் நின் மதுர வாக்காலுமன்றோ நின்னைப்பல்லோரும் பாராட்டுகின்றனர். நீ இவ்வீதிசெய்யும் உபாத்தியாயினிகளினுள்ளந்தோறுஞ் சென்று நல்லறிவூட்டுவாயாக! சர்வலோகதயாபரன் கிருபையால் நீடூழி வாழ்வாயாக!!

(பாடசாலையில் படிக்கும் இளஞ் சிறுவர்களைக் கூட நாடகம் நடிக்கச் செய்தல் கூடாதென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். ப-ர்).

சரீரக் கடமை.

(ஸ்ரீமதி S. அம்புஜவல்லி)

[நான் எழுதிவரும் "சரீரக் கடமை" முதலிய வியாசங்கள் ஸ்ரீமான் சந்திர வர்க்கர் எழுதியுள்ள "ஜீவியப் பிரகாசம்" (Light of Life) என்ற இங்கிலீஷ் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். கேவலம் சிறிதே கல்வித்திறம் பெற்றும் லோகானுபவமும் இல்லாத என் போன்றவர்களின் அபிப்பிராயத்தைக்கொண்டிராமல் சிறந்த கல்விமானும், பெரிய மேதாவியும், உலக நடவடிக்கைகளை நன்கு உணர்ந்தவருமான பிரசித்திபெற்ற ஸர். நாராயன் ஜீ. சந்திர வர்க்கர் என்ற சீமானுடைய அரும் கருத்துகளைக்கொண்டுள்ளன. இதின்சாரத்தை உண்டு பலர் பெரிதும் பலன் பெற்றிருப்பதால் சிந்தாமணி வாசகர்களும் இதன் ரசத்தைப் பானம் செய்து சிறிதேனும் பலன் பெற வேண்டும் என்று அவாக்கொண்டு எழுதலானேன்.]

நமது முதற் கடமை சரீரத்தைச் சார்ந்ததே. சரீரம் பூரண ஆரோக்கியத்துடன் இராவிடில் வாழ்க்கை இப்புவியில் ஒரு பெரிய பாரமாயிருக்கிறது. சரீரம் நோயுற்ற போதாவது அல்லது பலவீன மடைந்த போதாவது நம்மால் தீவிரமாய் ஒன்றைக் குறித்தும் யோசிக்கமுடிவதில்லை. அடிக்கடி ஏதாவதொரு வியாதிக்கு உட்படுகிற சரீரத்தைக்கொண்டு ஒருநற்காரியமும் சாதிக்க முடிகிறதில்லை, ஆகையாலே தான் நம் பெரியோர் சரீரக் கடமையை முதற் கடமையாகக் கருதி வந்தார்கள். ஆகையால்தான் பல சட்டங்களை ஏற்படுத்திய மனுசக்கரவர்த்தியும் சரீரத்தைச் சார்ந்த ஸ்நானபான ஆகாராதிகளைப் பற்றி விஸ்தாரமாய்ப் பல விதிகளை ஏற்படுத்தி மனிதர் அவைகளைமீறிச் செல்லாவண்ணம் வற்புறுத்திக் கூறி இருக்கிறார். இப்படி இருக்க, மனிதன் என்பது யாது? அவனொரு ஜீவன். ஆத்மா. அப்படியானால் அவ்வாதமா அல்லது ஜீவன் எங்கே இருக்கிறது? அது மாமிசம், சதை, எலும்பு இவைகளால் ஆக்கப்பெற்ற 'சரீரம்' என்ற கூட்டினுள் இருக்கிறது. இவ்விதக் கேள்விகளைப்போட்டு விடை பெற்ற நம் முன்னோர்களான ரிஷிகள் உடலை ஒரு வீட்டிற்கு, ஒரு ஆலயத்திற்கு, ஈடாகக் கூறியுள்ளார்கள். பகவத் கீதையிலும் கிருஷ்ண பகவான் சரீரத்தை உழுது பண்படுத்தி விதைத்துப் பயிரிடத் தகுந்த ஓர் வயலுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

ஒரு கிருஷிகன் தன் வயலை உழுது பண்படுத்தி விதை விதைத்து அதில் புற் பூண்டுகள் விளையாவண்ணம் அப்போதைக்கப்போது களை கொத்திப் பயிரிட்டு, பின்பு அறுப்பு அறுத்துப் பலனடைகிறான். அப்படியே நம்சரீரமும் யுக்த ஸ்னான போஜன சதாசாரங்களால் பூரண ஆரோக்கியம் பெற்று நல்லெண்ணம் நற்கருமம் முதலியவைகளாகிய பலனைப் பெருகிறது. இதற்கு அத்தாட்சியாக ஒரு சிறு கதையுண்டு.

ஒரு காலத்தில் புத்த பகவான் வழக்கப் பிரகாரம் பிக்ஷைக்குச் செல்லும்போது ஒரு தனவானான குடியானவன் வீட்டின் பக்கம் போனார். அச்சமயம் அக்குடியானவன் வீட்டின் வாயிலில் இருந்துகொண்டு தன் கீழ் இருக்கும் குடிகளுக்கும் மற்றும் ஏழைப் பிரஜைகளுக்கும் தானியங்களை வாரி ஏராளமாய்க் கொடுத்து வந்தான். அவன் அங்கே நின்ற யதி வேடத்துடன் கூடின புத்தரைப் பார்த்து "நீரேன் இங்கு பிக்ஷைக்கு வந்தீர்? இங்கே விவசாயிகளுக்கே கொடுக்கப்படும், யாவர் நிலத்தை உழுது பயிரிட்டு உழைப்பாளிகளோ அவர்களே என் தானிய தானத்தை வாங்க அருகர்கள். நீர் ஓர் பிக்ஷுகன். உம்மைப்போன்றவர் தம் சரீரத்தை உழைத்து வேலை செய்கிறதில்லை. சோம்பித்திரிந்து மற்றவர் ஈந்திடும் பிக்ஷையால் ஜீவிக்கிறார்கள். ஆகையால் எனக்கு பிக்ஷையிட இஷ்டமில்லை. இவ்விடம்விட்டு வேறுஇடம் தேடிச்செல்லும்" என்றான். அதைக்கேட்டு புத்தர் புன்னகை புரிந்து கூறலுற்றார்: "அப்பனே! நீ கூறுவது யுக்தமே. ஆயினும் நானும் ஓர் உழைப்பாளியே. நானும் என் தேகமாகிய வயலை உழுது பண்படுத்தி நல்விதைகள் விதைத்துப் பயிரிடுகிறேன். நிர்வாணமாகிய பலனை அடைகிறேன். நான் என் சரீரமாகிய நிலத்தைப் பயிரிடும் விதம் கூறுகிறேன் கேள். பக்தி அல்லது நம்பிக்கை என் விதை. விடாமுயற்சி அல்லது அப்பியாசமேஎன்பயிருக்கு மழை. எண்ணமே என் கலப்பை, தூய்மையே அதன் நுகத்தடி; என் சிரத்தையே தூண்டுகோல். இவ்விதம் கிருஷிகனாய் என் சரீரத்தைப் பாபத்தினின்றும் காக்கிறேன். மிதபோஜனம் பண்ணுகிறேன். உண்மை உரைப்பதே களைவாங்கி. சாந்தமே ஒழிவு. ஊக்கமும் உற்சாகமுமே உழும் எருதுகள். இவைகளாலே நான் இன்பமான அறுவடைப் பலனை அடைகிறேன். இவ்விதம் துக்கத்தினின்றும் விடுபட்டவனாய்க் கடைசியில் நிர்வாணம் அடைவேன்" என்றார். இம்மகானுடைய இச்சிறந்த தத்துவத்தைச் செவியுற்ற அக்குடியானவனும் அதுமுதல் அவரிடம் பக்தி பூண்டவனாய் அவர் முக்கிய சீடரில் ஒருவனாய் இருந்து வந்தான்.

ஆகையால் மனிதன் முதலில் சரீர வளர்ச்சி ரக்ஷணை முதலியவைகளில் கவனம் செலுத்துவதை முக்கிய கடமையாய்க் கருத வேண்டும்.

சரீர சாஸ்திர நீதிப்படி நடந்துவந்தால் பலவீனமுற்றவனும் திடசரீரியாய் விடலாம். தற்காலம் ஒருவர் 40 வயது அடைந்து விட்டால் அவர் விருத்தாப்பியம் அடைந்து விட்டதாகக் கூறுவது சகஜமாய்விட்டது. முற்காலங்களில் ரிஷி முதலியவர்கள் பிரகிருதி சட்டங்களை யொட்டி அனுசரித்து எண்பது நூறு வயதிற்குப் பிறகே கிழத்திசை அடைந்து வந்தார்கள். மனிதன் வயதினால் மட்டுமே வாலிப விருத்தாப்பிய திசை அடைந்தவனாகக் கூறுதல் கூடாது. அவன் மனோ உணர்ச்சிகளின் பிரகாரமே அவனுக்கோர் திசையை விதிக்க வேண்டும். சிலர் வயதில் முதிர்ந்தவராயினும் உணர்ச்சிகளில் மட்டும் வாலிபதிசைக்கோட்டினவர்களாக இருக்கிறார்கள். வாலிபர்கள் வாழ்க்கையில் அலக்ஷியமுற்று சரீர ரக்ஷணைகளில் கவனம் செலுத்தாமல் நடந்து வந்தால் சீக்கிரத்தில் பிஞ்சிற் பழுத்த பழம்போல் முதிர்ந்த உணர்ச்சிகளுடையவராய் விடுகிறார்கள். பின்பு அவர்கள் வாழ்க்கையே துன்பமாய் முடிகிறது. ஒருவன் வாழ்க்கை சுககரமா, துக்ககரமா என்பதற்கு அவனவன் புசிக்கும் பான போஜனாதிகளும், அவன் நடத்தையும் முக்கிய காரணம். மனிதன் வாழ்கிற விதம் அவன் குடலின் வேலைத்திறத்தின்படி இருக்கிறது. மனிதன் குடல் நல்ல ஜீரண சக்தியுள்ளதாயின் அவனுண்ணும் ஆகாரம் ஜீரணித்து நல்ல கட்டுள்ள சரீரத்தை உண்டுபண்ணுகிறது. இவ்வித நோயற்ற சரீரத்தை அடைவதற்குப் பிரகிருதி சட்டத்தில் ஏற்பட்டிருக்கிற சில ஆகார வியாம விதிகளை அனுஷ்டித்தல் வேண்டும்.

நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

பதினான்காவது அத்தியாயம்.

இந்துக்களில் சௌளம் எனும் சடங்கை மிக்க விமரிசையுடன் கொண்டாடுவதுபோல, பேதபாவமில்லாத மகமதியர்களும் தங்கள் புத்திரர்களுக்கு 'சுன்னத்' எனப்படுஞ் சடங்கை அதி விமரிசையாக நடத்துவது வழக்கம். அயாஸ் தன்னிரு குமாரர்களுக்கும் அச்சடங்கை நடத்தவேண்டி ஏற்பாடுகளைச் செய்து முடித்து, தனது சிநேகர், உத்தியோகஸ்தர்கள், ஜமீன்தார், சர்தார்கள், மற்றும் இளவரசன் சலீம் முதலியவர்களை அழைத்து வந்தனன். இளவரசனோ அயாஸ்பெக்கின் இளங்குமரி மேஹருல் நிஸாவைச் சந்திக்கச் சரியான சந்தர்ப்பங் கிடைக்குமெனக் கண்டு, அழைப்பை சுவீகரித்தனன். ஏழையாகிய தன் வீட்டிற்கு இளவரசன் வருவதாகப் பகர்ந்துள்ளதால் அயாஸின் மனம் எப்பாடுபட்டிருக்குமெனச் சொல்லுவது அனாவசியமே.

அந்தஸ்துக்குத் தகுந்தவாறு உத்தமமாய்த் தன் வீட்டை அலங்கரித்து, இளவரசன், சர்தார், ஜமீன்தார்கள் முதலியோரது அந்தஸ்துக்கேற்ற வண்ணம் நல்ல ஆசனங்களைக் கொணர்ந்து எங்கும் நிரப்பி முன்வீடு முழுதும் ரத்னக்கம்பளங்கள் பரப்பப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஜன்னலிலும் பற்பல வர்ணப்பட்டுத் துணிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. சமாரம்ப சமயம் நெருங்கவே, ஜனங்கள் கும்பல் கும்பலாய் வந்து கொண்டிருந்தனர். ஒவ்வொருவரையும் அயாஸ் எதிர்கொண்டழைத்து, அந்தஸ்துக்குத் தகுந்தபடி அவர்களை ஆசனங்களிலமரச் செய்தனன். கொஞ்சநேரஞ் சென்ற பின்னர், பாதுஷாவின் ஜேஷ்ட புத்திரன் வண்டி தென்பட்டது. அச்சமயம் சலீம் வண்டியை விடுத்துக் கீழே யிறங்கிய மாத்திரத்தில் அயாஸ் கதவருகிற்சென்று தலை நிலத்திற்படும் வண்ணம் கீழே குனிந்து சலாம் செய்து மிக்க ஆதரவுடன் மன்னன் மகனை வரவேற்றுபசரித்து வீட்டினுள் அழைத்துச் சென்றனன். ஆங்கு சுற்றிலும் வீற்றிருந்த தாடி நரைத்த கிழவர்கள், அமீர்கள், சர்தார்கள் முதலியவர்கள் பய பக்தியுடன் சலாம் செய்து நிற்க, சலீம் உள் நுழைந்து, தனக்காக இடப்பட்டிருந்த ஆசனத்திலமர்ந்த மாத்திரத்தில், எல்லோரும் தத்தம் ஆசனங்களிலுட்கார்ந்தனர். பிறகு அயாஸ் இளவரசன் முதற்கொண்டு மிக்க ஏழைவரை ஒரே மாதிரியாக உபசரித்த பின்னர், தனது புதல்வியை அழைத்துவர உள்ளே சென்றனன். சலீம் எப்பொழுது அவளைக் கண் குளிரப் பார்ப்போமெனக் காத்திருந்தனன். அங்கிருந்த சர்வஜனங்களது நேத்திரங்களும் அவளது வருகையையே நாடியிருந்தன. சில நிமிஷங்களுக்குள் தன் பிதாவுடன் மேஹருல் நிஸா புருஷ சபைக்குள் நுழைந்தனள். ரத்ன ஆபரணங்களாலலங்கரிக்கப்பட்டிருந்த மேஹருல் நிஸா அச்சபைக்குள் பிரவேசித்த மாத்திரத்தில், சிலர் மூர்ச்சித்தனர். மற்றும் பலர் தாமெடுத்த ஜன்மம் வீணேயென விசனமுற்றனர். இளவரசனோ தனது பிதாவினது அதிகாரதோரணையின் காரணமாய், அவளது தரிசனத்தாற் பித்தந் தலைக்கேற, அவள் தனக்குச் சொந்தமாய் விட்டனளென்று மனோ ராஜ்யத்தில் மனதைச் செலுத்தினவனாயிருந்தனன். இளவரசனுக்கும் மற்றும் ஆங்கு போந்திருந்த ஜனங்களெல்லோருக்கும் மேஹருல் நிஸா மிக்க மரியாதையுடன் சலாம்செய்த பின்னர் தனது தந்தையினருகிலுட்கார்ந்தனள். "இவள் எனது கன்னிகை மேஹருல் நிஸா" என அயாஸ் அங்கிருந்தவர்களெல்லோருக்கும் பகர்ந்து, அவளை இளவரசனருகி லழைத்துச் சென்று "இளவரசனே! இதோ எனது புதல்வி மேஹருல் நிஸா தமக்குச் சலாஞ்செய்து நிற்கின்றனள், சுவீகரித்து இவ்வேழைமேற் கிருபை வையும்" என்றனன். அவளது சௌந்தரியத்தைக் கண்டு மதிமயங்கி யிருந்த சபையிலுள்ள சர்வ ஜனங்களும் அவளது வார்த்தையைக் கேட்கவிரும்பி சித்தமாயிருந்தார்கள். பிறகு அப்பெண்மணியும், தனது கோமளகரங்களை ஒன்று சேர்த்து, "இளவரசே! இதோ நான் தம்மை வணங்குகின்றேன்! இன்று இக்கிரகத்தில் தமது பாததூளி பட்டதால் நாங்கள் கிருதார்த்தர்களானோம்" என மெல்லிய குரலிற் பகர்ந்தனள். இவ்வார்த்தைகள் தனது வாயினின்றும் வெளி வந்த மாத்திரத்தில், எப்பொழுதுமில்லாத சந்தோஷமும், உற்சாகமும் அவளது மனதிற் குடிகொண்டன. "ஆஹா! நான் எவ்வளவு பாக்கியத்தைச் செய்தவளானேன்! கூடியசீக்கிரத்தில் இந்துஸ்தானத்துப் பாதுஷா பதவியையடைய விருக்கும் இளவரசனுடன் இன்று நான் தைரியமுடன் சம்பாஷிக்கலானேன். ஆயினும் அவரது தரிசனத்தால், எனது மன

தில் உற்சாகமும், சந்தோஷமும் ஏன் உதிக்க வேண்டும்? மனமே! தைரியத்தைக் கைவிடாதே! விதியை வெல்ல யாரால் மாளும்? இந்துஸ்தானத்தின் ரத்னகசித சிம்மாதனத்தில் வீற்று, இராணியின் மகுடத்தைத் தரிக்க வேண்டுமென உனது தலையிலெழுதியிருக்குமாயின் அதைத் தடுத்தல் யாராலுமாகாத காரியம்" என எண்ணலானாள்.

இவ்வண்ணம் மனோராஜ்யத்திற் கொஞ்சநேரம் சஞ்சரித்திருந்தபின் மேஹருல் நிஸா தனது தந்தையின் சமீபம் போயுட்கார்ந்தனள். ஆங்கு வந்திருந்தவர்களிற் பலர் அயாஸின் குமாரர்களுக்கு வெகுமதியாகக் கொணர்ந்துள்ளவைகளை சபைக்கு மத்தியில்ஒவ்வொருவராக வைத்தபின், அனுமதி பெற்றுத் தத்தம் இல்லந் திரும்பினர். இளவரசனோ தன்னாசனத்தை விட்டுப் பெயராமல் வீற்றிருந்தனன். வீட்டின் பின்புறம் விருந்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்து, அயாஸ் மிக்க வணக்கமுடன் இளவரசன் சலீமையும், மற்றெல்லோரையும் போஜனத்திற்கு உள்ளழைத்துச் சென்றனன். இளவரசன், அவனது ஆப்த மித்திரர்கள், மற்றும் அயாஸின் இரண்டாவது மனைவியின் சுற்றத்தார் முதலியவர்கள் அயாஸைப் பின்பற்றி போஜனசாலைக்குட் புகுந்தனர். பிறகு அவரவரது அந்தஸ்துக்குத் தகுந்தவாறு பந்தியி லெல்லாரு முட்கார்ந்தனர். மேஹருல் நிஸா வேறு வஸ்திரங்களைத் தரித்து, ஷர்பத் கூஜாவைக் கரத்திலேந்தி, ஆங்கு தோன்றினாள். தனது சௌந்தரியத்தைக் கண்டு பைத்தியம் பிடித்துள்ள இளவரசனுக்கு முதலிற் கோமள கரத்தால் ஷர்பத் பேலாவைக் கொடுத்தபின், மற்றெல்லோருக்கும் ஷர்பத்தைப் பேலாவில் ஊற்றி ஊற்றிக் கொடுத்து வந்தனள். தங்களுக்கெதிரில் பற்பல தட்டுக்களில் வைத்துள்ள பக்குவான்னங்கள், பக்ஷணங்கள் முதலியவைகளின்மேல் அவர்களது மனம் நாடாது அவளது கரத்திலிருந்த ஷர்பத்தை வாங்கிப் பருகவே ஒவ்வொருவரும் காத்திருந்தார்கள்.

ஒரு பேலா ஷர்பத்தைப் பருகியவுடன் இளவரசன் சலீம் தான் நபோ மண்டலத்தில் வாசஞ் செய்வதாகவே நினைத்தான். தன் சித்தத்தை யபகரித்துள்ள அத்தருணியையே அடிக்கடி பார்த்துக்கொண்டு, தன் மனதிலுள்ளதை நேத்திரங்களால் வெளியிட்டவண்ணமிருந்தனன். நான் என்ற அகம்பாவத்துடனிருக்கும் பெரிய பெரிய வீரர்களும் மதிமயங்கும் தன் நேத்திர கடாக்ஷத்தால் இளவரசனை அடிக்கடி புன்னகையுடன் நோக்கிய வண்ணமே மேஹருல் நிஸா எல்லோருக்கும் ஷர்பத்தைக் கொடுத்து வந்தனள். ஷர்பத் இருந்ததென எறும்பு மறியாதவண்ணம் ஒவ்வொருவரும் அப்பேலாவில் ஒரு துளியேனும் விடாது பருகி வந்தார்கள். ஆஹா! சௌந்தரியமே! உனது மகிமையை யாதெனச் சொல்லுவேன்!

மொகலாய குல திலகனாகிய அக்பர் பாதுஷாவின் ஜேஷ்ட புத்திரன்—கூடிய சீக்கிரத்தில் சக்கரவர்த்தி சிம்மாதனத்தில் ஆரூடஞ் செய்ய விருக்கும் இளவரசன்—தன்னை மறந்து, ஒரு சாதாரண மனிதனைப்போல், மேஹருல் நிஸாவைப் பாடும்படி வெளிப்பட வேண்டிக்கொண்டனன். "இன்று உன் தந்தை செய்த விருந்திற்கு யாதொரு குறையுமில்லை. நீயும் இங்கிருந்து வந்தவர்களை உபசரித்து வந்ததால், இவ்விருந்தின் மகிமை அதிகரித்துள்ளது. இத்துடன் உனது மதுர தொனியாற் பாடுவாயாகில், சுவர்க்கலோகமே கீழே வந்தாலும் வரலாமாகையால், ஒருமுறை உனது கண்ட மாதுரியத்தால் எங்களைத் திருப்தி செய்வாய்" இளவரசனே வேண்டிக்கொள்

னும்பொழுது கேட்பானேன்! அங்கிருந்தவர்கள் யாவரும் தாடியை யுருவிக்கொண்டே தலையை யசைத்து ஆமோதித்தார்கள். அச்சமயம் மேஹருல் நிஸா தன் தந்தையின் சம்மதத்தைக் கருதியவளாய் அவனது முகத்தை நோக்கினாள். அன்று அயாஸோ ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்தனன். தன் புதல்வி தனதனுமதியை வேண்டுகின்றனளென வறிந்து, "குழந்தாய் நூர்! இங்கு அன்னியர்கள் ஒருவருமில்லையே. இதுவுமன்றி நீயோ குழந்தை! உனக்கு விவாகமாகும் பொழுதல்லவோ நீ லஜ்ஜை கொள்ளவேண்டும்? ஒரு நல்ல கீர்த்தனத்தைப் பாடு. உனக்குத்தான் அழகான கீர்த்தனங்கள் தெரியுமே!" எனப் பகர்ந்த வண்ணம் அவளது முதுகில் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தினான். மேஹர் முதலில் வெட்கமடைந்தாளாயினும், பிறகு மனதைத் திடஞ் செய்துகொண்டு பாட வாரம்பித்தனள். இவளது குரலைக் கேட்ட மாத்திரத்தில் ஆங்கிருந்த யாவரும் சிலைகளைப்போல் அசைவற்றனர். இளவரசனுக்கோ வரவர பித்தந் தலைக்கேறியது. தன்னைச் சுற்றிலும் எண்ணிறந்தோரிருந்ததால் அசைவற்று வீற்றிருந்தனன். அவன் சமீபம் அச்சமயம் அழகு மிக்க ஒரு தருணன் வீற்றிருந்தான். இவன் அக்பரது சேனாபதிகளில் ஒருவன். இத்தருணனும் மேஹருல் நிஸாவின் லாவண்யத்திற்கு ஈடுபட்டவனாய் அவளையே உற்று நோக்கி யிருந்தனன். அச்சமயம்வரை மேஹர் தன்னழகைக் குறித்துக் கொஞ்சமேனும் நினைத்தவளல்ல. கூடிய சீக்கிரத்தில் பாதுஷாவின் பதவியை யடையவிருக்கும் இளவரசன் தன்னழகிலும், சங்கீதத்திலும் ஈடுபட்டுள்ளானென அறிந்து உற்சாக மடைந்தாள். இளவரசனுடைய பரிவாரத்திலிருந்த சிலர், அதிக நேரமாய் விட்டதால், இச்சங்கதி சக்கரவர்த்தியின் செவிக்கெட்டும் பக்ஷத்தில் ஆபத்தாய் முடியுமென அறிந்து, அவனை யழைத்துச் செல்லவேண்டிய யுக்திகள் செய்ய ஆரம்பித்தனர். மிக்க நேரஞ் சென்ற பின்னர், மேஹர், அயாஸ் முதலியவர்களிடம் விடைபெற்று சலீம் விசனமுடன் திரும்பினான். ஆனால் கண் மறையும்வரை சோர திருஷ்டியில் நோக்கிய வண்ணம் தன் மனதை அவளுக்கு வெளியிட்டனன்.

யாவரும் தத்தமிடஞ் சென்றபின் அயாஸும் மற்றும் வீட்டிலுள்ளோரும் மிகவுங் களைத்திருந்ததால் நித்திரைக்குச் சென்றார்கள். மேஹர் தன் மஞ்சத்திற் சயனித்து மனோ ராஜ்யஞ் செய்யலானாள். அன்று நடந்த ஆனந்தமான சங்கதிகள் ஒவ்வொன்றையும் நினைத்து நினைத்துக் கடைசியாக துக்கத்தை நிவர்த்தி செய்ய வல்ல நித்திராதேவியின் வசப்பட்டனள். ஆனால் இவள் சரியான நித்திரையில்லாது பற்பல கனவுகள் கண்டனள். அரசகுமாரன் சலீம் தனக்கு முன் நின்று தன்னை வேண்டுவதாகவும், இவளும் அதற்கிணங்கி அவனை ஆலிங்கனஞ் செய்யும்பொழுது மற்றொரு தருணன் கரத்தில் வாளேந்திச் சலீமை யெதிர்ப்பதாகவும் கனவு கண்டு, பயத்தாற் பீடிக்கப்பட்டு உரக்கக் கதறவே, வீட்டிலுள்ள யாவரும் விழித்துக்கொண்டனர். அச்சமயம் அயாஸ் குரான் பாராயணஞ்செய்து கொண்டிருந்தான். தன் புத்திரியின் கூக்குரலைக் கேட்டு, அவளருகிற்சென்று பார்க்கும்பொழுது அவள் நன்றாய் நித்திரை செய்து கொண்டிருக்கவே அவளை யெழுப்பி "குழந்தாய்! நீ யேதாயினும் கெட்ட கனவுகள் கண்டிருக்க வேண்டும். முகத்தை சுத்திசெய்து குரான் பாராயணஞ் செய்வாயாகில் ஒரு தீங்குமுண்டாகாது. ஈச்வரனது நாமஸ்மரணையால் செய்த பாவங்களெல்லாம் இருக்குமிடந் தெரியாது மறையும்" எனவே, மேஹர் முகத்தை சுத்தி செய்தபின், குரான் வேதத்தை பக்தி பூர்ணமாய் வாசிக்க ஆரம்பித்தனள்.

(தொடரும்.)

இந்திய வீரப் பெண்களின் சரிதைகள்.

(சுவாமி அற்புதானந்தர்)

I.

இராணி யஷரேஷ்வரி.

பாதுஷா அக்பர் இந்தியாவில் ஆட்சி புரிந்த நாட்களில் வங்காளத்தைத் தவிர கிட்டத்தட்ட எல்லா பாகங்களும் மொகல் அரசியலில் அடங்கி இருந்தன. இவ்வமயம் வங்காளத்தில் "சுலைமான்" என்ற பட்டாணியன் அரசு புரிந்து வந்தான். இதைக் கண்ட அக்பர் மன்னன் "முனீம்கான்" என்ற ஒரு தளகர்த்தனைப் பெரும்படையுடன் வங்காளம் அனுப்பி இவனைக் கைதியாக்கி வங்காளத்தில் மொகல் ஆட்சியை ஏற்படுத்தக் கட்டளை புரிந்தான். முனீம் கானும் இதற்கென வங்காளத்தின்மீது படை எடுத்து சுலைமானுடன் போர் புரியவே சுலைமான் கொல்லப்பட்டான். இவன் குமாரனாகிய "தாவூத்கான்" ஒரிசா மாகாணத்திற்கு ஓடி விட்டான். இப்படை முனீம்கானின் கீழ் அக்பரால் அனுப்பப்பட்டு வருகின்றதென சுலைமான் அறிந்தவுடன் தன் செல்வங்களை யெல்லாம் வங்காளத்தின் ஒரு நகரமாகிய "ஜெஸ்ஸோர்" என்ற இடத்தில் அவ்விராஜ்யத் தலைவனாக இருந்த ஒரு வங்காளியிடத்தில் ஒப்படைத்தும் அவனுக்கு இராஜா விக்கிரமாதித்தியன் என்ற பட்டத்தை அளித்தும் தக்க ஏற்பாடுகளை முன்னதாகச் செய்திருந்தனன். இவ்வங்காளி சிறந்த இந்துவாகத் தன்னரசனகன் நம்பிக்கை கொண்டிருந்தான். அந்நாட்களில் வங்காளம் பல சிறு பிரிவுகளாகத் தனிப்பட்ட சிற்றரசு நிலைமையிலிருந்தது. இவர்கள் வருடக் கப்பங்களை மட்டும் பட்டாணிய வங்காள மன்னனுக்குக் கொடுத்து விட்டுத் தம் இஷ்டப்படி தம் நாடுகளை அரசாளக் கூடியவர்களாயிருந்தும் இவர்கள் அடிக்கடி சச்சரவுகளிட்டும் தம் கப்பங்களைச் சரியாகச்செலுத்தாமலும் வங்காள அரசியலின் கீழ் தாம் வாழ்கின்றோமென்று கருதாமலும் அக்கிரமங்களிலும் ஈடுபட்டிருந்தார்கள். கப்பங்கள் செலுத்தாத சிற்றரசர்களைப் பட்டாணிய மன்னன் சிறிய படைகொண்டு தாக்கவும், ஒருவருடன் ஒருவர் வீண் சச்சரவுகளையும் கொள்ளைகளையும் ஏற்படுத்திக் கொள்ளாதவாறு பந்தோபஸ்துகளை கொண்டும் இருக்கலாகினர். சுலைமான் முனீம்கானினால் ஏற்பட்ட போரில் மாண்டும் தாவூத் ஒரிசா ஓடியும் வங்காளம் மொகல ஆட்சியில் ஏற்படவில்லை. முனீம்கான் திரும்பி இச்செய்தியை அக்பர் மன்னனுக்குத் தெரிவிக்கலானான். இத்தாவூத்கானைத்தொடர்ந்து கைதுசெய்யவேண்டுமென சில படைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒரு வருடம் படைகளும் தளகர்த்தர்களும் தாவூத்கானைப் பின் தொடர்ந்து திரிந்து, கடைசியில் தாவூத்கானும் கொல்லப்பட்டனன். இவன் படையின் தலைவனாகிய "கட்லூகான்" அக்பர் மன்னனுடன் சமாதானம்செய்துகொண்டு கப்பங்களைச் சரியாகக் கட்டுவதாக ஒத்துக்கொள்ளவே ஒரிசாவின் தலைவனானான். பின்னும் வங்காளத்திற்குத் தலைவனாக அக்பர் மன்னன் "ராஜா டோடர்மல்" என்ற ஒரு இந்தியனை நியமித்து அனுப்பவே, இவனை வங்காளத்தின் சிற்றரசர்கள் எதிர்த்துப்போர்புரிய இவன் ஓடி மாங்கீரில ஒளிந்து கொண்டான். இம்மாங்கீர் நகரம் ஒரு சிறு கோட்டையை கங்கை நதி ஓரத்தில் கொண்டுள்ளது. இக்கோட்டையை இந்து சிற்றரசர்களும் பட்டாணிய தளகர்த்தர்களும் சூழ்ந்து முற்றுகை போடலாயினர். சுமார் ஒன்றரை வருடம் இக்கோட்டையினுள்

அடைப்பட்டுக் கிடந்த ராஜா டோடர்மல் முடிவாக இந்த சிற்றரசர்களைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு இவர்களின் உதவியால் இஸ்லாம் எதிர்ப்பைத் தாக்கி முறியடித்தான். வங்காளத்திலும் அமைதிஏற்பட்டதும் வங்காளம் அக்பர் மன்னனின் மொகல் ஆட்சியை ஏற்றுக் கொள்ளலாயிற்று. பட்டாணிய அரசர்களுக்குக் கப்பங்கட்டி வந்ததைப்போலவே மொகல் ஆட்சி மன்னனுக்கும் கப்பங்கட்ட இணங்கினார்கள். ராஜ விக்கிரமாதித்தியனும் ஏனைய வங்காளிகள் இணங்கியபடியே தானும் மொகல் மன்னனுக்குக் கப்பத்தை அளித்து விட்டுச்சென்றான். இவனுக்கு ஒரு புத்திரனிருந்தனன். இவனை ராஜா பிரதாப் ஆதித்தியன் என்பார். இவன் தன் தகப்பனுக்குப் பின்னர் மிகுந்த பராக்கிரமசாலியாக விளங்கினான். இவனுக்கு ஒரு இராணி இருந்தனள். இவ்வம்மையாரின் பெயர் "யஷோரேஷ்வரி." இக்குடும்பத்தின் இஷ்ட தேவதையும் யஷோரேஷ்வரி என்றே பெயர் கொண்டிருந்தது. இந்நாட்டின் மக்களுக்கு இவ்விரு பெயரும், ஒன்று அரசியல் இஷ்ட தெய்வமாகவும் மற்றொன்று அரசியல் ராணியாகவும் இருந்தன. பிரதாப் ஆதித்தியன் மிக்க பராக்கிரமசாலியாக இருந்ததுடன் குறும்பனாகவும் இருந்தான். இவன் தன்னைச் சூழ்ந்து பெரும் படையை ஏற்படுத்தி இருக்கச்செய்து அக்கம்பக்கத்தினர்களைக் கொள்ளையிடுவதில் முற்படலானான். அவர்களைத் தொந்தரவு புரிந்து கப்பங்களை வசூலிக்கவும் ஏற்பட்டான். இவன் போர்த்துகேசிய கடற் கொள்ளைக்காரர்களையும், பர்மிய மலைக் கொள்ளையினர்களையும் தன்னுடன் வைத்துக் கொண்டு தன் நாட்டின் இருபாகங்களாகிய கடலிலும், வனப்பிரதேசங்களிலும் கொள்ளையடிக்கலானான். மொகல் வைஸிராயும் இவனை அடக்கக் கூடாத நிலைமையிலிருந்தான். இவனுக்குக்கூறிய கவுரவங்களை அளிக்கவும் முற்படாமலும், மொகல்மன்னனுக்குக் கப்பங்களைச் செலுத்தாமலும்சுயேச்சையாய்க் காலம் கழிக்க முற்பட்டனன். இச்சுயேச்சை அதிகாரத்தில் தான் போட்ட கொள்ளைகள் போதாமல் ஒரு சிற்றரசனாக வங்காளத்திலிருந்து வந்த தன் மாமனைத் தாக்கவும் முயன்றான். இவரை வசந்தராயன் எனச் சொல்வார். இவர் இந்நடவடிக்கைகளில் விருப்பமில்லாமல் வெறுப்புற்றவராக இப்பிரதாப் ஆதித்தியனுக்கு மிக்க புத்திமதிகள் சொல்லியும் பிரயோஜனமில்லாமற் போயிற்று. இருப்பினும் இவர் அடிக்கடி இவனை வற்புறுத்த முற்படவே இவரை முடித்துவிட வேண்டுமெனக் கருதி சில ஏற்பாடுகளைச் செய்யத் துணிகையில், இவன் இராணியாகிய 'யஷோரேஷ்வரி' அந்நடத்தை நியாயமாகாதெனக் கணவனைக் கடிந்துரைக்க முற்பட்டாள். இவ்வமயத்தில் இந்நாட்டில் இந்து சிற்றரசியல்களினுள் ஒரு பழக்கமிருந்தது. அதாவது ஒரு பெண் தன்னைப் பாதுகாக்க வேண்டுமென வீரர்களின் உதவியைநாடும்போது தனது கை வளையலைக் (கங்கணத்தை) கழற்றி வீரர்களின் கூட்டத்தில தன் தாதியின் வசமாக அனுப்பி எறிந்துவிட்டு வரும்படி செய்வாள். இதை அங்கீகரிக்க முற்படும் வீரன் இதை எடுத்து எல்லோர் முன்னிலையிலும் தான இவ்வரசியின் ஆக்ஞைக்குக் கீழ்படிந்து நடந்து அவளுடைய உரிமைகளைப் பாதுகாக்கக் கடமை படுவேனெனவீரம் கூறி முன்வருவான்.

ஒருநாள் ராஜா பிரதாப் ஆதித்தியன் இதர வங்காள சிற்றரசர்களுடன் அமர்ந்து களியாட்டத்திலிருக்கும்போது ஒரு தாதி அக்கூட்டத்தின் முன்வந்து ஒரு பெண்ணின் வளையலை எறிந்து விட்டேகினாள். கூட்டத்தினர் மிக் வியப்படைந்தவர்களாகி எல்லோரும் ராஜா

பிரதாப் ஆதித்தியனையே நோக்கலானார்கள். இவன் இவ்வளையலைக்கண்டவுடன் தன் மனைவியினது என்றெண்ணி தான் தன் மாமனைக் கொள்ளையிட வேண்டுமென இருக்க இவ்வக்கிரமத்தைத் தடுக்க யத்தனித்த யஷோரேஷ்வரி இப்பெரும் பந்தயத்தை யனுப்பி விட்டனள் என மனம் கலங்கினான். 'இதை எடுத்தால் நாம் யஷோரேஷ்வரியின் வாக்குக் கிசைந்து மீறி நடக்காமலிருக்கக் கடமைப்பட்டு விடுவோமே! இல்லையேல் இதை ஆதரிப்பவனாக எடுக்க முற்படுபவன் நமக்கெதிரியாகிப் பல தொந்தரவுகள் செய்ய, அதில் சிக்கிக்கொள்ள வேண்டிவருமே' என்று சிந்தனை பெருகியவனானான். சற்றுநேரம் கழியவே இந்நாட்டின் படைத்தலைவனாக இருந்த இவ்விராணியாரின் சகோதரன் முற்பட்டு எடுத்து 'இப்பெண் வளையல் நம் இஷ்ட தெய்வத்தின் பிரதிநிதியாகிய யஷோரேஷ்வரி மகா ராணியாருடையது. இதை எடுத்து எக்கடமையில ஈடுபடுவதென்பது எனக்கே தெரியாதிருக்கின்றது. இவ்விராணியாரின் கணவனும், பாதுகாப்பு மன்னனும் ஆன நம் பிரதாப் ஆதித்தியனே இதை எடுத்துக் கட்டுப்படக்கடமைப்பட்டவர் ஆவார். ஆனால் இவர் மதிமயங்கித் தலை குனிந்தவராகி ஆழ்ந்த சிந்தையில் இருக்கின்றனர். எனவே இதை எடுத்து இவ்விராணியாரின் கட்டளைகளுக்குக் கீழ்படியக்கடமைபட்டுள்ளேன்' என சபதம் கூறினான். இது கண்டு பிரதாப் ஆதித்தியன் சினந்து மௌனமாக இருந்து விட்டான். உடனே இக்கங்கணத்தை சபை முன்னிலையில் எறிந்த தாதியானவள் 'மகா ராணியவர்கள் இக்கங்கணத்தை யெடுப்பவர் இராஜ வசந்தராயையும், அவர்கள் குடும்பத்தையும் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளார் என்பதை அறிவிக்கஆக்ஞாபித்து இருக்கிறார்' என்றனள். "ததாஸ்து, ததாஸ்து, அங்ஙனமே கடமைப்பட்டுள்ளேன்" என சேனாதிபதி கூறவே தாதி திரும்பினாள். சேனாதிபதி தன்னிடத்தில் அமர்ந்தான். அரசனும் வெறுப்புற்று சபையைக் கலைத்தான். தானும் தன் அறைக்குச் சென்று "யஷோரேஷ்வரி! நீ கடுங்கோபமுடைய பெண் சிம்மம் போன்றவள். நானோ வங்காளத்தை என் கர்ஜனைகளினால் விக்கிரமாதித்தியனுக்குப் பிறந்த சிங்கமென நினைத்திருந்த நாட்களில் எங்கள் குல தெய்வமாகிய யஷோரேஷ்வரியைப் போலவே என் இராணியினாலும் இவ்வமயம் என்னையும் வெற்றிகொண்டு விட்டாய்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தாதிகளைக் கூப்பிட்டு இராணியை இட்டுவரச்சொல்லி, மகா அன்பாகவும் பிரியமாகவும் பலவித வசனங்களைக் கூறி, தன் மாமன் வசந்தராயைக் கொள்ளையிட வேண்டுமென்ற கருத்தைத் தடுக்கவேண்டாமென்றும், தன் கீர்த்தியைப்பெருகச்செய்யல் வேண்டுமெனவும் பலவிதமாகக்கூறினான். 'ஓ! பிரிய யஷோரேஷ்வரி! உனக்கு என்ன இது ஒரு பிடிவாதமா? இவ்விதம் கங்கணத்தை யெறிந்து என் சத்துருவினைக்காக்க நீ ஏன் முயன்றாய்? அவன் உன் உறவினனல்லவே, உன் உற்றார், பெற்றோர், பெரியவர் அல்லவே, என் பந்து, எனக்குத் தீங்கிழைக்க முன்வரும் மௌடிகனை நான் தண்டிக்க முற்பட்டால் யஷோரேஷ்வரி! நீ தடுப்பது உசிதமா?' என்று பலவகையாகக் கூறினான். 'இராஜ வஸந்தராய் தங்கள் உறவினரானதினாலேயே அவருக்குத் தீங்கிழைக்கக்கூடாதென மன்றாடினேன், தாங்கள் செவி சாயக்கவில்லை. எனவே நான் தங்கள் உறவினர்கள் எவ்விதச் சிறழிவும் படலாகாது எனக்கருதி கங்கணத்தை அனுப்பி, அவர்களை பாதுகாக்க முற்பட்டேன். தங்கள் குடும்பத்திற்கே பெரும் இழிவு இவ்வித அக்கிரமத்தினால் ஏற்படும். தங்கள் முன்னோர்களின் மக்களிலொருவர் இராஜா வஸந்தராய் அல்லவா? தாங்கள் அவரைக் கொல்வதிலாவது, அவர் நாட்டைக்கொள்ளையிடுவதி

லாவது முற்படக் கூடாது' என்றனள். பிரதாப் ஆதித்தியன் யஷரேஷ்வரிக்கு இவைகளை விளக்கசெய்வது சற்றும் முடியாத காரியம் என்றும் வேறு உபாயம் செய்யவேண்டுமென்றும் கருதி, தன் நடவடிக்கைகள் பெரும் பிசகான வழியைக்கொண்டிருப்பதை மன்னிக்கவேண்டுமென இராஜ வஸந்தராயைக் கண்டு பிரார்த்தித்தனன. இராஜா வஸந்த ராயர் ஜெஸ்ஸூருக்குச் சிறிது தூரத்திலுள்ள கோட்டையில வசித்து வந்தார். இங்கு அடிக்கடி செல்வதும் மன்னிபபுக் கேட்பதுமாக இருந்த விவரத்தை யஷரேஷ்வரி கவனித்து, தன கணவன் தான் வேண்டிக் கொண்டபடி விரோத நடவடிக்கைகளிலிருந்து விலகித் தன் மாமனுடன் நட்புக் கொண்டிருக்க முற்பட்டனனெனச் சந்தோஷமடைந்தாள. எனினும் பிரதாப் ஆதித்தியன வேறு எண்ணங் கொண்டவனாகி இவ்விராஜாவைத் தன் மாளிகைக்கு விருந்துண்ண வரவேண்டுமென வேண்டினன. இவவிருந்து விஷயம் யஷரேஷ்வரிக்கும சொல்லப்பட்டது. யஷரேஷ்வரியும் விருந்துணவுகளைத் தயாரிக்கலானள. இவ்வமயத்தில் பிரதாப் ஆதித்தியன சில படை வீரர்களை வழியில் நிறுத்தி வஸந்தராயைக் கொன்று வருமபடி செய்திருந்தனன். இவைதெரியாது வஸந்தராயும் இவ்விருந்திற்குப் சில பந்தோபஸ்துடன் புறப்பட யோசிக்கலானன். இவ்வஸந்தராய்க்கு ஒரு இராணியும, ஒரு புதல்வனும இருந்தனர். இவன் தன் இராணியையும் புதல்வனையும் விட்டுவிட்டு ஒரு புறாவைத் தன்னுடன எடுததுக்கொண்டு புறப்பட்டு வருகையில், வழியில் கொலைபுரியப்பட்டனன். புறா தப்பி ஓடிவரவே இராணியாரும் குளத்தில் வீழ்ந்து தற்கொலை புரிந்து கொண்டனள். புதல்வன தன சிறிய தாயாரிடம் ஓடி ஒளிந்து கொண்டான். இங்கு யஷரேஷ்வரி விருந்து செய்துவைத்துத் தன கணவனினஉறவினரான வஸந்தராய் வருவாரென எதிர்பார்த்துக்கொண்டே இருந்தனள்.

இது விஷயம் சில நாட்கள் சென்று தெரியவே பெரும் மனத்தாங்கல் கொண்டவளாகி, தன் கணவனின் துன்மார்க்க நடவடிக்கையை மன்னிக்கும்படி தன் குல தெய்வமாகிய யஷரேஷ்வரியைத் துதித்து வணங்கி, ஒன்றும் தெரியாதவள் போல் தன் கணவனிடம் புழங்கலானள்.

அக்பர் மொகல் ஆட்சியின் தளகர்த்தனும் வங்காளத்திலிருந்தவனும் ஆகிய இராஜாமான் சிங்குக்கு இது தெரியவே சைன்னியங்களுடன் ஜெஸ்ஸூரின் மீது படை எடுத்தான். பிரதாப் ஆதித்தியனும் 30 ஆயிரம் காற் படை, 10 ஆயிரம் குதிரைப்படை, இரண்டு யானைகள், 52 ஆயிரம் பட்டாக்கத்தி வீரர், 100 பீரங்கி இவைகளைக் கொண்டு இராஜா மான்சிங்கை யெதிர்க்கலானன். இவ்வமயம் ஜெஸ்ஸூரின் அருகிலிருந்த வஸந்தராய ராஜாவின் கோட்டையும் ஒருவரில்லாமல் காலியாகி விட்டதினால், யஷரேஷ்வரி சிறிய படையை நியமித்து அக்கோட்டையைப் பாதுகாக்க முற்பட்டனள். பிரதாப் ஆதித்தியனும் மான் சிங்கும் பெரும் போரில் ஈடுபடலானர்கள், சில நாட்களுக்குப் பின்னர் இராணி யஷரேஷ்வரியைத் தாக்கவேண்டுமென மகாராஜா மான்சிங்கு ஒரு சிறிய அணியை அக்கோட்டையை நாடி அனுப்பவே, படைமுகத்திலிருந்த பிரதாப்பின் சேனைகள் கலக்கமுற்று விரைவுடன தம் இராணியாரைக் காக்கவேண்டுமென கோட்டையை நாடி ஓடவே இவ்வாங்கத்தின கட்டுகள் சீர்குலைந்து, பிரதாப் ஆதித்தியன் சிறை யாக்கப்பட்டனன். இராஜாமானசிஙகு இப்படையுடன் யஷரேஷ்வரி இருந்த கோட்டையைத் தாக்க முயலவே, யஷரேஷ்வரியும் தன் படையை நடத்திக் கோட்டைக்கு சில மைல் தூரத்திலுள்ள களத்தில் எதிர்த்து யுத்தம் புரிந்து மொகலபடையைச் சிதறச்செய்து கொண்டிருக்கையில் ராஜாமான் சிங்கு இதைக்கண்டு மெச்

சினர். இரவு சில தூதர்கள்மூலம் மொகல் 'ஆட்சியின் படையோ விரிவாகவுள்ளது. யஷரேஷ்வரியோ தன் சிறிய படையினுல் தன்னையும், தன் கோட்டையையும் தன் நாட்டையும் பாதுகாக்கக் கொள்ளக் கூடியவளாகாள். பிரதாப் ஆதித்தியன் சிறையாகிவிட்டான். எனவே உனக்கு வேண்டிய உரிமைகளைக் கேட்டால் நான் மொகல் அரசிலிருந்து வாங்கிக் கொடுப்பேன் எனக்கூறினன். தான் தன் கணவனுடன் சிறையாகச் சம்மதப்படுவதேயே இந்து தர்ம மாகத் தான் கொண்டுள்ளதாகவும், இதை அங்கீகரிக்காவிட்டால் தான் யுத்தம் செய்தே தீருவதென்றும் ராணி கூறவே ராஜா மான்சிங்கு இதை அங்கீகரித்து யஷரேஷ்வரியையும் பிரதாப் ஆதித்தியனுடன் டில்லிக்குப் பாதுகாப்பில் இட்டுச் சென்று அங்கு அக்பர் பாதுஷாவின் அரசியல் கைதியாகச் சிறையிலிருத்தவும் முற்பட்டானுனுலும் வழி மத்தியில் காசியடைந்தவுடன் பிரதாப் ஆதித்தியன் மாணமடைந்தனன். யஷரேஷ்வரியும் அந்நாட்களின் ஐதிகப் படி சதியாகினுள் (உடன் கட்டை ஏறினுள்).

செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

(ஸ்ரீமான் வித்வான் நா. கோவிந்தசாமி பண்டிதர்)

இரண்டாவது மலர் 693-ம் பக்கத் தொடர்ச்சி.

என்னவே யீசன் பாவசமாகிட
ஏழ்சா யாழொடு பாடிடவே
பன்னருந் தும்புரு நாரதர் பாட்டினும்
பண்பு மிகுந்த தெனப் பரமன் (54)

கேட்டனன் பத்திரன் நல்விடை பெற்றனன்
கேடிலி தந்த திரு முகத்தை
நாட்டமுடன் பட்டதிற் சுற்றித் தன்சிர
நாயக மணியிற் கொண்டெழுந்தே (55)

அங்கிங்கெனு தெங்கும் அருள் வடிவாகும்
ஆகமம் புகழும் யோகியவன்
தங்கிய செம்மணிச் சிகரக்கோயிலைத்
தரிசித்தே வலஞ்செய் திறைஞ்சி. (56)

கொல்லை குறிஞ்சி கொதித்திடு வெம்பால்
கொள்ள தரத்த நற்கோடு குன்று
நல்ல முல்லை பொழில் வல்ல மிருகங்கள்
நாடிய கானங்களும் நடந்து (57)

மாநிலமகளின் முகத்தில் தீட்டிய
மணித்திலகம் வஞ்சைக் களத்தின்
கானிமிர் வீதியில் புனலின் பந்தலைக்
கண்டனன் சென்றிருந்தான் புலவன். (58)

தொண்டர் பெருந்துணையாகும் கங்காதரன்
சுந்தரன் சித்தனாய்த் தோன்றினன் காண்
தண்டுடை மன்னவன் சேரன் கனவினில்
தாரகை பூத்த இராத்திரியில். (59)

தோன்றியே கூறுகின்றானிந்த மண்டலஞ்
சொல்லுகின்ற மதுராபுரியில்
மூன்றவர் போற்றவே வாழ்ந்திடுமோர் சித்தன்
மூருவங்கேள் கொல்லிக்காவலனே. (60)

என்பதம் போற்று மோரின்னிசைப் புலவன்
எந்நகர் தன்னினும் பொன்னகராம்
உன்பெரும் பட்டணமறுகினுற்றனன்
உற்று நீ காணுக சுற்றவன் காண். (61)

காண்பரிதாகிய திருமுகமொன்று
கையெழுத் திட்டவன் கைகொடுத்தோம்
மாண்புடனதனை வாங்கிக்கொண்டேயவன்
மனம்போல் பொன்மணி தந்திடுவாய். (62)

என்று சொல்லிச் சித்தனாகிய கடவுள்
ஏகினன் சொப்பனம் போயெழுந்தான்
மன்னனரும்பன மாலையன் வில்லவன்
மாமதுரேசனைப் போற்றுகின்றான். (63)

சிரித்து முப்புரமெரித்த தேவனே
தேவர்கள் போற்றருந் தேசிகனே
மரித்த வேதியன் மகனைத் தந்திட்ட
மாற்றறியாத பொன்னே மணியே. (64)

குடத்திலடை பட்டிருந்த எலும்பைக்
கோதையாகச் செய்த குன்றவில்லீ
படத்துப் பாம்பினை யெடுத்து மாலையாப்
பண்பொடு பூண்ட பசுபதியே. (65)

மருத்து வச்சியுந் தோழியுந்தாயுமாய்
வாணிபப் பெண்ணுக்கு வந்ததனால்
பொருத்த பூமியில் தாயுமானனென்று
போளித்தார் பெரியார் சிவமே. (66)

பாதகரேவிய யானை புலிகளின்
பாரியதோலைத் தரித்தவனே
காதகர் கலங்கச் சூலத்தைப் பிடித்த
கண்ணுதலே யிடம் பெண்ணுருவே. (67)

(தொடரும்.)

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா!

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷ பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும் உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

ஸ்ரீமான் கரு. கும. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மைடான் டெல்லியிலிருந்து 12-4-26ல் எழுதுவது:—

அன்பார்ந்த சகோதரியே!

நமது அருமை நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் விண்ணவரும் போற்றத் தக்க வீர புத்திரர்களை—உலகம் புகழத் தக்க உத்தமர்களை—கவியரசர்களைப் பெற்று உதவவேண்டிய தாய்மார்கள் இந்நாள் அடிமைகளாய், கண்ணிருந்தும் குருடராய்ச் சிற்றின்பப் பொருள்களாய் மிளிர்வது வருந்தத் தக்கதே. அவர்களை—உலகிற்குப் பராசக்தி அம்சமாயிலங்கும் பெண்மணிகளை—இவ்விழிய நிலைக்குக்கொண்டு வந்த ஆடவர் செயலும் கண்டிக்கத் தக்கதாகும். இவர்கள் இந்நிலையை யடைந்ததாலன்றோ நமது பாரத நாடு ஒளிமழுங்கிக் கிடக்கின்றது. இறைவனருளாலும் தம் கூரிய மதியாலும் உணர்ப்பெற்ற பெரியார் பலர் இப்பொழுது ஆடவரால் ஒதுக்கித்தள்ளப் பெற்ற அருமைத் தாய்மார்களும் தீண்டாத வகுப்பாரெனப் படுவாரும் முன்னேற்றமடைவதற்கான முயற்சியைச் செய்து வருகின்றனர். இச்சமயத்தில் தாங்களும் தங்கள் "சிந்தாமணியும்" செய்து வரும் தொண்டினு முயர்ந்தது வேறுண்டோ? ஒவ்வொரு மாதமும் பல திறப்பட்ட மக்களையும் தங்கள் கொள்கையில் ஈடுபடுத்தும் முறையில் நாவல், கதை, விகடம் ஆகிய பல வழிகளிலும் விஷயங்களைப் புகுத்தி எழுதிவருவதுபற்றி அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன். நமது சிந்தாமணியின் போதனையாலேயே பெண்கள் படிக்கக்கூடாது என்று பேசிய ஆண்டில் முதிர்ந்த பெரியார் பலர் இப்பொழுது பெண்பாலார்மீது அனுதாபங்காட்டி வருவதையும் அடிக்கடி "சிந்தாமணி வந்து விட்டதா", "சிந்தாமணி வந்து விட்டதா" என்று வினவுவதையும் நான் நேரில் கண்டிருக்கிறேன். இங்ஙனமாக நற்றொண்டாற்றி வரும் நமது "சிந்தாமணி" பல்லூழி வாழப் பரமன் துணை கூடுவதாக. இத்துடன் இரண்டு புதிய சந்தாதார்களின் விலாசமுமனுப்பி யிருக்கிறேன். நமது "சிந்தாமணி" நாடெங்கும் பரவ என்னாலியன்ற தொண்டியற்றுவேன்.

சுபம்!

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற் கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால், மராட்டி பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. மகாராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் கிடையா. இவைகளை நம் சிறுவர்கள் படித்தல் அவசியம்.

பால ராமாயணம் டபிள் கிரவுன் விலை அணா.	0—6—0
பால பாரதம் ஷை 92-பக்கங்கள் அணா.	0—8—0
பால பாகவதம் ஷை 87-பக்கங்கள் அணா.	0—8—0

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்
மயிலாப்பூர், சென்னை என்றெழுதவும்.

வேதாந்த தருக்க போதகாசிரியர் திருவாளர் சென்னை கோ. வடிவேலு செட்டியாரவர்கள் அபிப்பிராயம் 8-5-26.

ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் சமூகத்திற்கு; தாங்கள் எனது பார்வைக்குத் தந்த தங்களது 'சிந்தாமணி' என்னும் பெயரிய மாதப்பத்திரிகை (மலர் 2 இதழ் 7)யை நான் முற்றுஞ் செவ்வையாகப் படித்துப் பார்த்தேன். பெண் மக்கள் அபிவிருத்தியாதற்குரிய விஷயங்கள் மிக அழகாகத்தெளிவான நடையிலெழுதப்பட்டு விளங்கும் தங்கள் பத்திரிகை ஒவ்வொரு வீட்டிலும் அத்தியாவசியமாயிருக்கவேண்டு மென்பதும், இப்பத்திரிகையைப்படிப்பவர் சாஸ்திரார்த்தம், மருத்துவ முறை, தேச சரித்திரம், இல்லற வொழுக்கம், கதைப்போக்கு முதலியவற்றுளின்றியமையாதான பலவற்றையும் மிகத் தெளிவாயறிந்து கொள்ளுதற்குரியவராவரென்பது எனதபிப்பிராயமாம்.

-நேரிசை வெண்பா.

சிந்தாமணியாய்த் திகழுஞ்சிந் தாமணியை
நந்தாது நாளு நலமாகப்-பந்தமறக்
கற்பார்க்கு நல்ல கதியுண்டாம் வாழ்வுண்டாம்
பொற்பாயீ தோங்க பொலிந்து.

27—4—26-ல் சிலோனிலிருந்து ஸ்ரீமான் டி. ஜெ. பரமானந்தன் அவர்கள் எழுதுவது:—

சகோதரியே,

சிந்தாமணி சஞ்சிகையைப் படித்ததிலிருந்து எனக்குண்டான மனமகிழ்ச்சிக் கோரளவில்லை. விசேஷமாய் தமிழ் நாட்டு ஸ்திரீகளின் நன்மைக்கென்று சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் பாராது மெத்தப் பிரயாசையுடன் தாங்கள் நடத்திவரும்சஞ்சிகையை எல்லாம் வல்ல இறைவன் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக. "சிந்தாமணி"நீடூழி வாழ்க. தாங்கள் அன்புடன் எனக்கு சஞ்சிகையும் நிருபமுமனுப்பியதற்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். அனுப்பியிருக்கும் சந்தாவைப் பெற்றுக்கொண்டு என்னையும் ஓர் சந்தாதாராகப் பதிவுசெய்து கொள்ளக் கோருகிறேன்.

24—9—25-ல் சித்தியவானிலிருந்து ஸ்ரீமான் R.M.P.R. ராமசுவாமி செட்டியார் அவர்கள் எழுதுவது :—

அம்மா,

ஒரு காலத்தில் நாகரிகமே உருவாக விளங்கி மற்ற தேசங்களுக்கு வழி காட்டியாகவிருந்த நம் நாடானது பலகாரணங்களினால் நவநாகரிகத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் பொதுவாகத் தமிழ் மக்களின் வளர்ச்சியையும் சிறப்பாக நம் பெண்மணிகளின் வளர்ச்சியையுமே முக்கிய நோக்கமாகக் கொண்டு பல அறிஞர்களின் அரிய கட்டுரைகளுடன் சிறந்த அறிவாளியும் தேசாபிமானியுமாகிய தங்களால் நடத்தப்பெறும் நமது "சிந்தாமணி" மேலும் மேலும் அதிக சிறப்புடன் நீடூழி காலம் நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A., விலை அணா 10.
   Approved as a Library Book.
2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.
   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.
3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.
   Approved as a Text-Book suitable for School use.
4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.
   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, dated 24-7-23.
5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.
   Approved as a Library Book.
6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.
   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, 21st October 1913.
7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.
8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.
   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, Part I-B, page 478, dated 3-6-24.
9. சுகாதாரபோதினி.—(மூன்றுவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.
   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.
10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், MA., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணா. 10.
11. காளிதாஸன்—ஆசிரியர் K. S ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 12.

SRINIVASA VARADACHARI & CO., 4, MOUNT ROAD, MADRAS.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா'வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம். பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனாம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

SILK PITAMBER CO., BENARES CITY.

ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

குழந்தைகளின்

மித்திரன்.

பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேககாந்தியையும் கொடுக்க எப்போதும் தேஜசுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனோவியாகூலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

26. பிராட்வே, மதராஸ்.

சீக்கிரம் வெளிவரும்!

அச்சிலிருக்கிறது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேச முன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கானவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாகிப் இதன் ஆசிரியர். டாக்டர் பி. வரதராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ. 1—0—0.

முற்கனவே பெயரைப்பதிவு செய்து கொண்டவர்களுக்கு விலை அணா 0—12—0.

மானேஜர், "சிந்தாமணி"

சலிவன்ஸ் கார்டன் ரோட்.

மயிலாப்பூர் சென்னை.

7-2-25-ல் டர்பனிலிருந்து ஸ்ரீமான் R. M. பிள்ளை அவர்கள் எழுதுவது:—

தேவரீர் சகோதரி பாலம்மா அவர்களுக்கு தங்களுக்குச் சேரவேண்டிய சந்தாவையனுப்பியிருக்கிறேன். இற்சு என்னுடைய மனைவி தங்கள் மாதாந்தப் பத்திரிகை சிந்தாமணியைப்பற்றி தன்னைப் போன்ற பெண்களிடம் பத்திரிகையிலுள்ள இனிய விஷயங்களைச் சொல்லி வருவதுடன் "சிந்தாமணி" கண்டு ஆனந்தங் கொண்டதாக என் மூலம் தங்களுக்கு அர்ச்சனை செய்யச் சொன்னதுடன் தங்களைப் பார்க்கப் பிரியமாயிருப்பதால் தங்கள் உருவப்படம் ஒன்றையனுப்பும்படிக்கும் எழுதச் சொல்லியிருப்பதால் ஒரு படம் அனுப்பிவைக்கவும்.

7—10—25-ல் கேட்டாவிலிருந்து ஸ்ரீமதி மிஸ் குணரத்தினம் நாயுடு எழுதுவது:—

சகோதரி அவர்களுக்கு.

தாங்களனுப்பிவரும் "சிந்தாமணி" எனும் பெயர் பெற்ற மாதச் சஞ்சிகையை மாதந்தோறும் வரப்பெறுகிறேன். அதன் சிறப்பை என்னென்று வரைவது? 'சிந்தாமணி' நீடூழி வாழ ஸ்ரீ சன்னாரோன் கருணைபுரிவாராக.

"சிந்தாமணி"

மூன்றாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 6 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. $6\frac{1}{2}$; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனாமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியோகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
விவேகாச்ரமம், ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாபூர், சென்னை.

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், முழு விலாசம் இவைகளுடன் இன்னருக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.

10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

207601
7/5 m 211, N 24 (M
N 26-2-1

பொருளடக்கம்.

	பக்கம்.
சுபோதராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்)	... 2
சிந்தாமணியின் மூன்றாவது ஆண்டு (பத்திராதிபர்)	3
நமது பத்திரிகாபிமானிகளுக்கு (சகோதரி வி. பாலம்மாள்)	... 5
ஜனப் பிரதிநிதித்துவமும் பெண்மக்களும் (பத்திராதிபர்)	... 7
சம்சாரிகள் இளைப்பாறும் இடம் (ஸ்ரீமதி பி. மங்களாபாயி.)	... 9
பர்வதகுமாரி (ஸ்ரீமான் மகேச குமார சர்மா.)	... 15
ஓர் புதிய உணர்ச்சி (ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாள்.)	19
பகவத்கீதையிலுள்ள போதவசனங்கள் (ஸ்ரீமதி பி. மங்களாபாயி.)	... 23
மார்க்கோபோலோவின் யாத்திரைகள் (ஸ்ரீமான் S. R. அனந்தநாராயண அய்யர்)	... 25
பெண் கல்யாணம் (காவேரிக் கரையில் பிறந்தவள்)	38
ஒரு கனவு (ஸ்ரீமதி குகப்ரியை.)	... 41
நிராசை அல்லது நீங்காத்துயரம் (சிறுகதை) (சகோதரி வி. பாலம்மாள்)	... 43
கற்பு (ஸ்ரீமதி செ. ராஜம்மாள்).	... 51
சரீரக் கடமை (ஸ்ரீமதி S. அம்புஜவல்லி.)	... 53
நூர்ஜஹான் அல்லது பாத கண்டத்துச் சௌந்தரியக் கொடி (ஸ்ரீமதி பாகீரதியம்மாள்)	... 55
இந்திய வீரப் பெண்களின் சரிதைகள் இராணி யஷோரேஷ்வரி (சுவாமி அற்புதானந்தர்)	... 59
செந்தமிழ் நாட்டுச் சிறப்புக்கும்மி (ஸ்ரீமான் வித்வான் கா. கோவிந்தசாமி பண்டிதர்)	... 63

Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl., M.B.E., Bangalore, under date 1-5-1926 :—

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz. the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

சிந்தாமணி பைண்ட் வால்யூம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டுப் பு

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்

1926 பிப்ரவரியிலிருந்து 26 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தக

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாரராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தா வர்களுக்கும் மட்டும் மேற் கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் 3 சார்ஜ் உள்பட அனுப்பப்படும்.

பைண்ட் வால்யூம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினாலன்றி புத்தகம் படமாட்டாது.

1926 அக்டோபர் 31-தேதிவரையிலும் இக்குறைந்த விகிதத்திற்கு தபாற் கூ கொடுக்கப்படும். சொற்பபிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரை செய்யவும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்

மயிலாப்பூர், செ

4-8-26 ல் F. M. S லிருந்து ஸ்ரீமதி சொர்ண லக்ஷ்மி எழுதுவ

சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க எ கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் ந ஜகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியா பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு ம லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்ம வருவது தங்களின் ஊக்கங்குன்றா முயற்சியினாலேயே ஆகும். எல்லாம் வல்ல ஈச முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras.
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras. 2,020—8.9.1925.